மார்ச் 2011 விலை: 40/-



'ஆடுகளம்' பேட்டைக்காரன்



அழிந்து போகுமா அழகிய பூமி ?

# சிகரம் தொடு

இளையோர் மாதாந்தம்

சிகரம்:2 அடி:6 சிகரம் ஊடக இல்ல மாணவர் வெளியீடு ISSN 2012 -7928



## வடக்கின் போர்

## புலர்ந்தது புதுவசந்தம்

சுன்னாகம் நகரில் கணினித் தேவைகளுக்கு
தனித்துவமான நிறுவனம்

MODERN PCs systems

# Modern PCs Systems

தரம் மிக்க எமது சேவைகள்
கணினி விற்பனை, பராமரிப்பு, கணினி பழுதுபார்த்தல்

- Desktop
- Laptop
- Ram
- Motherboard
- USB Drives
- VGA Cards
- Sound Cards
- Woofers
- Dongle
- Scanner
- Printers
- Webcam
- Routers

& More...



இல: 18, கே.கே.எஸ் வீதி,
சுன்னாகம்.

தொ.பேசி: 0772500306
0750421421

# NET DIGITAL COLOR LAB

உட்புற, வெளிப்புற படப்பிடிப்பு,
ஒளிப்படப் பிரதியாக்கம்
அல்பம் கட்டுதல்
வரைகலை மற்றும் ஒளிப்படவியல்

உங்கள் தேவைகள் யாவுமே இங்கு சேவைகளாக



## ராஜா கொம்பிளெக்ஸ்

இல: 81B, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்
தொ.பே.இல.: 021 3205680, 021 2240766
மின்னஞ்சல்: netdigitallab@yahoo.com

குறைந்த விலையில் உத்தரவாதமான
கணினி மற்றும் கணினிசார் உபகரணங்கள் விற்பனை

மிகவிரைவில் நிரந்தரத் தீர்வு தரக்கூடிய
கணினி திருத்த வேலைகளுக்கு

# ACT APEX of Computer Technology




ஸ்ரேசன் வீதி, சுன்னாகம்
தொ.பே.இல: 0213206893, 0773530125

நேற்றைய அனுபவங்களிலிருந்து
நாளைய சாதனைகளை நோக்கி

# சிகரம் தொடு
SIKARAM THODU

சிகரம் 2 அடி 6

சிகரம் ஊடக இல்லம்
மாணவர் வெளியீடு

**தொகுப்பு**
கோ.றுஷாங்கன்

**இணைத் தொகுப்பு**
ம.யசோநிதி

**வடிவமைப்பு**
அல்பேர்ட் பெஸ்ரியன்

**ஆக்கங்கள்**
ச.சிந்து
ம.யசோநிதி
சி.ஜெயந்தி
நா.சாந்தரூபன்
சு.நேதாஜி
ந.சதீஸ்
க.கோபி
ஞா.கிரிஷாந்
அ.பெஸ்ரியன்
ஜெ.பாலகுமார்

**அச்சாக்கம்:**
கரிகணன் பிறின்டேர்ஸ்

**சந்தா விபரம்**
ஆண்டு சந்தா: 600 ரூபா
2 ஆண்டு சந்தா: 1,000 ரூபா
மாணவர்களுக்கும், கல்வி நிறுவனங்களுக்கும்
ஆண்டு சந்தா: 500 ரூபா

அனைத்துத் தொடர்புகளுக்கும்:
**சிகரம் ஊடக இல்லம்**
இல.221, பலாலி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்
தொ.பே.: 021 300 80 60
நேரடி : 077 77 33 931
மின்னஞ்சல்:
sikaramthodu@gmail.com

# உள்ளே...



**04** வடக்கின் போர்


**12** தாய் மொழியிலேயே தவறிவிடுவோமா?


**32** நாம் பேச நினைப்பதெல்லாம்...


**36** முகிலனின் கவிதைகள்


**42** புலர்ந்தது புதுவசந்தம்


**46** சுன்னாகத்தில் ஷொப்பிங்

**இன்னும்....**

உனக்குள் இருக்கும் அரக்கனைக் கொல்!....06
ஆயிரம் வாசல்....14
சிகரம் மாணவ பத்திரிகையாளர் திட்டம்....15
ஆண்-பெண் நட்பு வாழ்க்கைத்துணையாக....31
அறிவுலகம் காட்டிச்சென்ற முப்பரிமாண தேடல்....34
"வேலை தா" என்று கேட்பவர்களுக்கு 'விதாதா'....38
ஊரெல்லாம் தேரோட்டும் திருநெல்வேலி....40
பாடசாலை மெய்வல்லமை 'க்ளிக்' காட்சிகள்....42


## கணனி-நீ

Basic Computer Technology
Microsoft Word
**கணினி சந்தேகங்கள்–தீர்வுகள்**
Adobe Photoshop
**ஒரேநேரத்தில் பல கணக்குகள்**
**எதிர்கால இணையத்தின் மொழி என்ன?**
**கற்றலுக்குக் கைகொடுக்கும்** Google
**புதுவரவு**





# போரும் வசந்தமும்

இது வடக்கின் போர்க்காலம் !

'பொன் அணிகளின் போர்', 'வடக்கின் பெரும் போர்', 'இந்துக்களின் போர்' என்ற பாடசாலை கிரிக்கட் போர்கள் இவை.

இரத்தம் சிந்தாத, உயிர்ப்பலி எடுக்காத, மண்ணுக்கும், மனங்களுக்கும் உற்சாகமளிக்கின்ற வித்தியாசமான போர்கள் இவை.

மூன்று தசாப்த காலமாக இலட்சக்கணக்கான உயிர்களைப் பலியெடுத்து,

பல ஆயிரம் கோடி ரூபா பெறுமதியான சொத்துக்களை ஏப்பம் விட்டு,

பல இலட்சக் கணக்கானவர்களை ஏதிலிகளாக்கி – ஆயிரக்கணக்கானோரை அங்கவீனர்களாக்கிய போர் ஒய்ந்துவிட்ட நிலையில் நடக்கும் புதுவித போர்கள்.

எங்கள் மண்ணின் மாணவ இளைஞர்களின் உடல், உள வளர்ச்சிக்கு ஊக்கமளித்து, தேசிய அளவில் அவர்களது சாதனைகளுக்கு அடையாளம் பெற்றுத்தரும் போர்களிவை.

இந்தக் கிரிக்கட் விளையாட்டுப் போர்கள் தவிரவும், இன்னும் பல கிரிக்கட், உதைபந்தாட்ட, மெய்வல்லுனர் போட்டிகள் வட மாகாணமெங்கும் அண்மைக்காலத்தில் ஏராளமாக நடைபெற்று வருகின்றன.

விளையாட்டுக்கு மேலதிகமாக, எங்கள் மாணவ இளைஞர்களின் கலை – ஆற்றுகை ஆளுமைகளும் பல இடங்களிலும் பறைசாற்றப்பட்டுக்கொண்டிருக்கின்றன.

வடக்கு மாகாணசபை ஏற்பாடு செய்திருந்த 'புலர்ந்தது புதுவசந்தம்', வடக்கு மண்ணின் எல்லாத் திசைகளிலும் காணப்படும் மாணவ – கலை ஆளுமைகளை ஒரே இடத்தில் அரங்கேற்றியது.

எங்கள் மாணவ இளைஞர்களின் இயலுமைகளை வெளிக்காட்டும் சிறந்த களங்களாக அமைந்துவரும் இவை யாவுமே, இந்த மண்ணின் வளமான எதிர்காலத்தை நோக்கிய வளர்ச்சிப் படிகளாகும்.

இனி இந்த மண்ணில் நடக்கும் போர், விளையாட்டுப் போர்களாக மட்டுமே இருக்கட்டும்!

கலை – ஆற்றுகைக் களங்களாக மட்டுமே அமையட்டும்!!

அவை,

இந்த மண்ணின் புதிய வசந்த காலத்துக்குக் கட்டியம் கூறட்டும்!!!

மாணவர்களுடன் இணைந்து

கோ.றுஷாங்கன்

**"போருக்குப் பிந்திய சூழலில் யாழ்ப்பாணத்தில் சிகரம் ஊடக இல்லம் போன்றதொரு ஊடகப் பயிற்சி மையம் உருவாக்கப்பட்டிருப்பது பாராட்டத்தக்க விடயம். இங்கு இத்தனை மாணவர்கள் ஆர்வமாக ஊடகக் கல்வியில் ஈடுபட்டிருப்பது ஆச்சரியம் தருகிறது"**

பெப்ரவரி 28ம் திகதி திங்கட்கிழமை சிகரம் ஊடக இல்லத்துக்கு வருகை தந்திருந்த தென்னிலங்கையைச் சேர்ந்த ஊடகவியலாளர் குழுவில் அங்கம் வகித்த சிரேஷ்ட ஊடகவியலாளரும், நவமணி பத்திரிகையின்



பிரதம ஆசிரியருமான என்.எம்.அமீன், சிகரம் ஊடக இல்லத்தின் ஊடகக் கற்கைநெறி மற்றும் மாணவர்களின் உற்சாகத்தைக் கண்டு சிலாகித்த வார்த்தைகள் இவை.

தெற்காசிய சுதந்திர ஊடகவியலாளர் அமைப்பு, இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், சுதந்திர ஊடக இயக்கம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் மூன்று நாள் பயணமாக யாழ்ப்பாணம் வந்திருந்த சுமார் 18 மூத்த ஊடகவியலாளர்களைக் கொண்ட இந்தக் குழுவினர், பெப்ரவரி 28ம் திகதியன்று சிகரம் ஊடக இல்லத்துக்கு வருகை தந்து மாணவர்களுடன் கலந்துரையாடினர்.

சுதந்திர ஊடக இயக்கத்தின் செயலாளர் சீதா ரஞ்சனி, சிறிலங்கா முஸ்லிம் மீடியா ஃபோறத்தின் தலைவர் என்.எம்.அமீன், தெற்காசிய சுதந்திர ஊடகவியலாளர் அமைப்பின் இணைப்பாளர் முசம்மில், இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் ஆர்.பாரதி (தினக்குரல் வாரப்பதிப்பு ஆசிரியர்), உப தலைவர் நிக்ஷன், சண்டே லீடர் பத்திரிகையின் ஊடகவியலாளர் அனா இப்ராஹிம், இருதினபத்திரிகையின் ஊடகவியலாளர் டிலீஷா, பி.பி.சி. சந்தேசிய ஊடக்வியலாளர் கொத்திகொட, உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத் தலைவர் தர்மசிறி லங்காபேலி, ஐலண்ட் பத்திரிகையாளர் ஸக்கீர் ஜஃபார், விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் தலைவி சாந்தி சச்சிதானந்தம், சுயாதீன ஊடகவியலாளரும், படப்பிடிப்பாளருமான துஷ்யந்தி கனகசபாபதிப்பிள்ளை உள்ளிட்ட முக்கிய ஊடகவியலாளர்கள் இந்தக் குழுவில் இடம்பெற்றிருந்தனர்.

மாணவர்கள் மற்றும் சக



என்.எம்.அமீன்

விரிவுரையாளர் வேல்தஞ்சன் ஆகியோருடன் இணைந்து தென்னிலங்கை ஊடகவியலாளர்களை வரவேற்று உரையாற்றிய சிகரம் ஊடக இல்லத்தின் பணிப்பாளர் கோ. றுஷாங்கன், சிகரம் ஊடக இல்லம் ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கம் மற்றும் அதன் செயற்பாடுகள் பற்றிச் சுருக்கமாக விளக்கமளித்தார்.

"வெறுமனே ஏட்டுக் கல்வியாக அல்லாமல், "சிகரம் தொடு" என்ற மாதாந்த சஞ்சிகையையும், ஜ.்.ப்னா டுடே (www.JaffnaToday.com) என்ற இணையத்தளத்தையும் நடத்தியவாறே இந்த மாணவர்கள் இங்கு ஊடகப் பயிற்சியைத் தொடர்கின்றனர்" என்றார் அவர்.

"மாணவர்களின், குறிப்பாக பெண்களின் உற்சாகம் ஆச்சரியமாக உள்ளது. வழமையாக இங்கே யாரும் பேச முன்வரமாட்டார்கள். இவர்களது உற்சாகம் உண்மையில் மகிழ்ச்சி தருகிறது" என்றார், சுயாதீன பெண் ஊடகவியலாளர் துஷ்யந்தி கனகசபாபதிப்பிள்ளை.

சிகரம் ஊடக இல்லத்துடன் தொடர்புகளைப் பேணி, மாணவர்களது இந்த முயற்சியை ஊக்குவிக்கக் கூடிய உதவிகளையும், பங்களிப்பையும் வழங்கத் தயாராக விருப்பதாக அனைவரும் இறுதியாக உறுதியளித்துச் சென்றனர்.

# "ஆச்சரியம் தரும் சிகரம் ஊடக இல்லம்"
# தென்னிலங்கை ஊடகவியலாளர்கள்

தென்னிலங்கை ஊடகக் குழு சார்பாக இங்கு முதலில் உரையாற்றிய நவமணி பிரதம ஆசிரியர் என்.எம்.அமீன், இன்று அவசியமாகவிருக்கின்ற ஊடகக் கல்வியை சிகரம் ஊடக இல்லம் முன்னெடுத்திருப்பதைப் பாராட்டியதுடன், இந்தக் கற்கைநெறியில் கணினி இணையப் பயிற்சியும், ஒளிப்படப் பயிற்சியும் சேர்த்துக் கொள்ளப்பட்டிருப்பது வரவேற்கத்தக்க விடயம் என்றார்.

"எதிர்காலத்தில் தெற்காசிய சுதந்திர ஊடக அமைப்பின் மூலம் வழங்கப்படும் புலமைப்பரிசுடன் கூடிய வெளிநாட்டு ஊடகப் பயிற்சிகளுக்கு சிகரம் ஊடக இல்ல மாணவர்களுக்கும் வாய்ப்பளிப்போம்" என்று அவர் இங்கு உறுதியளித்தார்.

அதிகளவில் பெண்கள் யாழ்ப்பாணத்தில் ஊடகத்துறையில் பயிற்சி பெற்று வருவது மகிழ்ச்சியளிப்பதாக சுதந்திர ஊடக இயக்கத்தின் செயலாளர் சீதா ரஞ்சனி கூறினார்.

பெண்கள் சார்ந்த விடயங்களையோ, சமையல் குறிப்புக்கள், அழகுக் குறிப்புக்கள் போன்றவற்றை மட்டுமோ எழுதுபவர்களாக இல்லாமல், ஊடகத்துறையின் அனைத்துப் பரிமாணங்களையும் இந்தப் பெண் ஊடகவியலாளர்கள் தொடவேண்டும் என்று சண்டே லீடர் பத்திரிகையின் ஊடகவியலாளர் அனா இப்ராஹிம் வேண்டுகோள் விடுத்தார்.

யங் ஏஷியா தொலைக்காட்சியின் பிரதம அதிகாரி ஷாமினி பொய்ல் தலைமையிலான தெற்காசிய சுதந்திர ஊடக அமைப்பின் பெண் ஊடகப் பிரிவினர், பி.பி.சி. ஊடகவியலாளர் சீவகன், டென்மார்க் வெளி-விவகார அமைச்சக பிரதிநிதி ஹென்ரிக் குருனெற் ஆகியோரும் முன்பு சிகரம் ஊடக இல்லத்துக்கு வருகை தந்து மாணவர்களுடன் கலந்துரையாடல்களை நடத்தியிருந்தனர்.

அதேபோன்று, தினகரன், ரூபவாஹினி, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், தகவல் திணைக்களம் ஆகியவற்றைச் சேர்ந்த சிங்கள, தமிழ், முஸ்லிம் ஊடகவியலாளர் குழு, இவ்வாண்டு தைப்பொங்கல் தினத்தை சிகரம் ஊடக இல்ல மாணவர்களுடன் இணைந்து கொண்டாடி சிகரம் பொங்கல் செய்திகளையும் வெளியிட்டிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

JAFFNA TODAY
Northern SriLanka News & Views
www.JaffnaToday.com


சீதா ரஞ்சனி உரையாற்றுகையில்...



சிகரம் மாணவர்கள்

'வடக்கின்போர்', 'பொன் அணிகளின் போர்' மற்றும் 'இந்துக்களின் போர்'!

பாடசாலைக் கிரிக்கெட் வரலாற்றில் மிக நீண்ட கிரிக்கெட் தொடர்களாக யாழ்ப்பா ணத்தில் வருடாவருடம் நடைபெற்றுவருபவையே இவை. உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டி ஒருபுறம் சூடுபிடித்துள்ள நிலையில், யாழ்ப்பாணத்துக் கிரிக்கட் போர்களும் சமாந்தரமாக நடைபெற்று வருகின்றன.

மூன்று தசாப்த யுத்த நெருக்கடிகள், பாதிப்-புக்களையும் தாண்டி எழுச்சி கொண்டு நிற்கும் எமது பிரதேச விளை யாட்டு வீரர்களை தேசிய ரீதியில் அடையாளப்படுத்தக்கூடிய போட்டிகளாக இவை அமைந்துள்ளன.

# வடக்கின் போர்



**'பொன் அணிகளின் போர்'**

வடக்கின் பெரும் துடுப்பாட்டப் போட்டிகளின் வரிசையில், 'பொன் அணிகளின் போர்' என்றழைக்கப்படும், யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி - வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி இடையேயான போட்டி வெற்றி-தோல்வியின்றி நடந்து முடிந்தது.




94ஆவது தடவையாக, பெப்ரவரி 24ம் திகதி நடைபெற்ற இப்போரில், யாழ்ப்பாணக் கல்லூரி முதல் இன்னிங்சில் எடுத்த 194 ஓட்டங்களுக்குப் பதிலளித்து சென் பற்றிக்ஸ் அணி 238 ஓட்டங்களைப் பெற்றது. இரண்டாவது இன்னிங்சில் யாழ்ப்பாணக் கல்லூரி 7 விக்கட் இழப்புடன் 52 ஓட்டங்களைப் பெற்ற நிலையில், போட்டி சமநிலையில் முடிந்தது.

இதுவரை...

31 போட்டிகளில் சென்.பற்றிக்ஸ், 16 போட்டிகளில் யாழ்ப்பாணக் கல்லூரி வெற்றி. 29 போட்டிகள் சமநிலை. 18 போட்டிகளுக்கான பதிவுகள் இல்லை. 2007 ஆம் ஆண்டு சென்.பற்றிக்ஸ் பெற்ற வெற்றியின் பின்னர், தொடர்ந்து அனைத்துப் போட்டிகளும் சம நிலையிலேயே முடிவடைந்து உள்ளன.

**'வடக்கின் பெரும் போர்'**

1904 ஆம் ஆண்டு இலங்கையிலேயே இரண்டாவதாகவும், யாழ்ப்பாணத்தில் முதலாவதாகவும் ஆரம்பிக்கப்பட்ட வடக்கின் போர் கிரிக்கெட் போட்டி இலங்கை முழுவதும் பிரபல்யமானது.

வடக்கில் கல்லூரிகளுக்கிடையே நடைபெறும் கிரிக்கெட் போட்டிகளில் மூன்று நாட்களைக் கொண்ட ஒரே ஒரு போட்டி இதுவென்பதும் குறிப்பிடத்தக்கது.

**யாழ் மண்ணுக்கு கலகலப்பூட்டும் போர்**

யாழ். மத்திய கல்லூரிதான் யாழ்ப்பாணத்தில் பாடசாலைமட்ட கிரிக்கெட் போட்டியை முதன்முதலில் ஆரம்பித்ததாகச் சொல்லப்படுகிறது. பின்னர் யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரியுடன் இணைந்து இவ் இரு கல்லூரிகளின் நட்புறவுப் பாலமாக 'வடக்கின் பெரும் போர்' கிரிக்கெட் போட்டி 105 ஆண்டுகளாக நடத்தப்பட்டு வருகிறது.

நாட்டின் சகல பாகங்களிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் கூடும் பழைய மாணவர்களின் ஒத்துழைப்புடன் விறுவிறுப்பாகும் 'வடக்கின் போர்' நீண்ட நாட்களின்பின் இம்முறை அதிகளவு களை கட்டுகிறது.

**இதுவரை....**

33 ஆட்டங்களில் சென்.ஜோன்ஸ், 26 ஆட்டங்களில் மத்திய கல்லூரி வெற்றி.

37 போட்டிகள் சமநிலை. மழை காரணமாக ஒரு போட்டி தடைப்பட்டதுடன், 7 போட்டிகள் பற்றிய பதிவுகளில்லை.


இறுதியாக நடைபெற்ற நான்கு 'வடக்கின் பெரும் போர்' போட்டிகளிலும் (2007, 2008, 2009,2010 ) யாழ். மத்திய கல்லூரியே வெற்றிபெற்றது.

**வாழ்த்துக்கள்!**

சிறந்த மானிடப் பண்புகளை வெளிக்கொண்டு வருவதும், நட்புறவை வளர்த்துக் கொள்வதற்கும் ஏற்ற களமான இப்போட்டியானது







சிறப்பாகவும், மகிழ்ச்சிகரமாகவும் அமையவேண்டும் என்பதுடன், துடுப்பாட்டத்தில் கலந்துகொள்ளும் கல்லூரிகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் குறிப்பாக விளையாட்டு வீரர்களுக்கு 'சிகரம் தொடு' வின் மனமான வாழ்த்துக்கள்!

**- ஞா.கிரிசாந்**



# 2011 அணிகள்

## யாழ் மத்திய கல்லூரி

**ஞானசீலன் ஜெறிக்துஷான்** - அணித்தலைவர். வலதுகை துடுப்பாட்ட வீரர், சகலதுறை ஆட்டக்காரர். 4 வருட அனுபவம். வர்ண விருது பெற்றவர். 2009-10 இல் 19 வயது பிரிவில் யாழ் வலய அணியில் விளையாடியுள்ளார்.

**இரட்ணம் எட்வேர்ட் எழன்** - உபதலைவர். வலதுகை துடுப்பாட்ட வீரர். விக்கெற் காப்பாளர். 3வருட அனுபவம். 2010இன் 21 வயது பிரிவு மாகாண அணி தலைவர். 19வயது பிரிவு மாகாண அணி உபதலைவர். 2011இல் மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கு எதிராக 247 ஓட்டங்கள் பெற்றுச் சாதனை.

**தங்கராசா கோகுலன்** - இடது கை சுழற்பந்து வீச்சாளர். சகலதுறை ஆட்டக்காரர். 17-19-21 வயது வடமாகாண அணியில் விளையாடியுள்ளார். 2011 பத்திரிசியார் கல்லூரிக்கெதிரான போட்டியில் 13 விக்கெற்றுகளை வீழ்த்திச் சாதனை.

**ரவி வதுசனன்** - வலதுகை பந்து வீச்சாளர். 17வயது வடமாகாண அணி, 19 வயது யாழ் மாவட்ட அணியில் விளையாடியுள்ளார். மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கு எதிரான போட்டியில் 10 விக்கெற்றுக்களை வீழத்திச் சாதனை.

இவர்களைத் தவிர 3வருட அனுபவம் வாய்ந்த வீரர்களான தங்கராசா தர்சன், விமலதாஸ் பில்சன், சுப்ரமணியம் ரிசாந்தன், மகேந்திரராஜா தர்சன், மதியழகன் கரிஸன் என்போரும், 2வருட அனுபவம் வாய்ந்த வீரர்களான பூபாலசிங்கம் டர்வின், குலேந்திரன் யுனிஸ் கனிஸ்ரஸ் உட்பட சுரேஸ் யதுர்சன், பாக்கியராஜா சிறோஜ், பாலசிங்கம் விமல்ராஜ், சிறி ரவிச்சந்திரன் லக்சன், முத்துவேல் கிசாந்தன் மற்றும் சதானந்த ராசன் சுலக்சன் ஆகியோரும் மத்திய கல்லூரி அணியில் விளையாடுகின்றனர்.

அணியின் பயிற்றுவிப்பாளர்:
**சுரேஷ்மோகன்.**

## பரியோவான் கல்லூரி

**ஆனந்தகுமார் விதுரசன்** - அணித்தலைவர். சிறந்த மத்திய துடுப்பாட்ட வீரர். வர்ண விருது பெற்றவர். 5வருட அனுபவம்.

**விவேகானந்தராஜா ஹரி-வதனன்** - உபதலைவர் - இடதுகை ஆரம்ப வேகப்பந்து வீச்சாளர். 5வருட அனுபவம். வர்ண விருது பெற்றவர். 2010இல் 21 வயதுக்குட்பட்ட வடக்கு-கிழக்கு மாகாண அணி, 19வயது வடமாகாண அணியில் விளையாடியுள்ளார்.

**சத்தியமூர்த்தி சஞ்சீவன்** இடதுகை முன்வரிசை துடுப்பாட்ட வீரர். 21 வயதுக்குட்பட்ட வடக்கு- கிழக்கு மாகாண அணியில் இடம்பெற்றுள்ளார். 19வயதுக்குட்பட்ட வடமாகாண அணியின் தலைவர். 3வருட அனுபவம். .

இவர்களைத் தவிர, 4 வருட அனுபவம் வாய்ந்த வீரர்களாக சிறீதரன் பிரியதர்சன், ஜேசுதாசன் அட்ரியன், 3வருட அனுபவமுள்ள வீரரான சூசைதாஸ் அலஸ்டியோன், 2வருட அனுபவம் வாய்ந்த வீரர்களான சிங்கராசா லக்ஷன், ஜெயக்குமார் அமிதயன், என்போருடன் சஜிந்திரன் றஜிந்தன், அலிஅக்பர் சஞ்சேயன், மகாலிங்கம் மதுஷன், சிவம் சத்தியேந்திரா, விவேகானந்தராஜா ஹரிகரன், T. விமல்ராஜ், ஞானபொன்ராஜா ஏபிரகாம் அனோஜன், பரமநாதன் துவாரசீகன், சஜிந்திரன் கபில்ராஜ் மற்றும் அந்தோனிப்பிள்ளை நிசாந்தன் என்போர் இவ்வணியில் இடம்பெற்றுள்ளனர்.

அணியின் பயிற்றுவிப்பாளர்:
**ப.லவேந்திரா.**



# உனக்குள் இருக்கும் அரக்கனைக் கொல்!

எலிசா – அழகில் அவளுக்கு நிகர் அவளே!

அவளின் செல்லப்பிராணியான பூனை எதிர்வுகூறுகிறது - 'எலிசா விரைவில் மகரனுக்கு பலியாகப்போகிறாள்' என்று...

யார் அந்த மகரன்?

மனிதர்களின் ஆன்மாவைக் கொன்று வாழும் கொடிய இராட்சஷன். அவனை எதிர்த்துப் போரிடவும், அவனை அழிக்கவும் முடியாமல் அவன் ஆட்சியின் கீழ் வாழும் அப்பாவிச் சமூகம்... இவர்களுக்கிடையில் வருடம் ஒரு ஆன்மாவைப் பலியெடுத்து வருகிறான் மகரன்!



இந்நகரில் சாதாரண குடும்பத்தைச் சேர்ந்த சொலமேன் என்பவரின் மகள் தான் எலிசா.

இவளின் அழகில் மயங்கிய மகரன் எலிசாவைத் தனது மனைவியாக்கிப் பலியெடுக்கக் காத்திருக்கிறான். நகரின் நன்மைக்காக வேண்டா வெறுப்புடன் தனது நிலையை ஏற்றுக்கொண்ட எலிசாவும் உளரீதியாக இந்த நரக வாழ்வுக்குத் தன்னைத் தயார்படுத்துகிறாள்...

எலிசா மகரனுக்குப் பலியாகப்போகிறாள் என்பதை எண்ணி நகரிலுள்ள அனைவரும் சோகத்தில் உறைந்திருந்தனர். அதேநேரம் இளம் இராணுவ வீரரான லான்ஸ்லொட் என்பவன் நகருக்குள் பிரவேசிக்கிறார். நகரின் சோகத்தை அறிந்த லான்ஸ்லொட் எலிசாவின் விதியை மாற்ற எண்ணுகிறான்.

தனது இராணுவப் படையையே நகருக்குள் வரவழைத்து மகரனுடன் எதிர்த்துப் போராட அவன் முடிவெடுக்கிறான். ஆரம்பத்தில் நகர் மக்கள் பெரியதொரு விளைவை இதனால் சந்திக்க நேரிடும் எனப் பயந்து மகரனை எதிர்க்க மறுக்கின்றனர். ஆனால், மகரனின் கொடுங்கோலாட்சியை உணரவைத்து, லான்ஸ்லொட் பிடிவாதமாக சம்மதம் வாங்குகிறான். பின்னர் மகரனுடன் எதிர்த்துப் போராடி எலிசாவை லான்ஸ்லொட் காப்பாற்றுவதாகக் கதையமைகிறது.

சோவியத் நாடகாசிரியர் யெவ்கினி ஷ்வாட்ஸ் எழுதிய நாடகமான 'The Dragon' என்பதை சிறில் C.பெரேரா என்பவர் சிங்கள மொழியில் 'மகராக்ஷயா' என்ற நாடகமாக மொழிபெயர்த்துள்ளார். இலங்கையின் தலைசிறந்த நாடக-திரைப்பட இயக்குநர் தர்மசிறி பண்டாரநாயக்க முதன்முதலாக



*1985* ஆம் ஆண்டு இந்நாடகத்தை நெறியாள்கை செய்து மேடையேற்றியிருந்தார். *1985* ஆம் ஆண்டு இடம்பெற்ற தேசிய நாடக விழாவில் சிறந்த இயக்குனர், சிறந்த மொழிபெயர்ப்பு, இசையமைப்பு, உடையலங்காரம், அரங்கவமைப்பு, ஒளியமைப்பு மற்றும் நடனவமைப்பு உட்பட 12 விருதுகளை இந்நாடகம் பெற்றுக்கொண்டுள்ளது.

*1985-1999* இற்கிடைப்பட்ட காலத்தில் 884 தடவைகள் மேடையேற்றப்பட்ட இந்நாடகம் இலங்கையில் பெருமைபெற்ற ஒரு நாடகமுமாகும்.

இன்றைய சந்ததியினருக்கும், அவர்களது எதிர்பார்ப்புக்களுக்கும் ஏற்ற வகையில் மீளவும் இதனைத் தயாரித்து நெறியாள்கை செய்துள்ளார் தர்மசிறி பண்டாரநாயக. நாடகத்தின் கருத்தாக்கத்தில் சிறு மாற்றங்களை உட்படுத்தி, நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய அரங்காக இந்நாடகம் 2010 ஆம் ஆண்டு முதன்முதலாக மேடையேற்றப்பட்டது.

புதிய நடிகர்கள், அரங்கு நுணுக்கங்கள், நவீன கணினித் தொழில்நுட்பத்துடன் கூடிய அரங்கின் ஒளியமைப்பு என, பார்வையாளர்களைக் கவரும் விதத்தில் நாடகம் உருவாக்கப்பட்டுள்ளமை தனிச்சிறப்பு.

"நாடக அரங்கை விட்டு பார்வையாளர்கள் விலகிச் செல்கி-றார்கள். சினிமாவின் கவர்ச்சி அவர்களை அதிகம் ஈர்க்கிறது. இதனால், அரங்குக்கு மீண்டும் பார்வையாளர்களை



'எலிசா' - யசோதா







வரவேற்கும் வகையில் பொருத்தமான சில சினிமா தொழில்நுட்ப உத்திகளை இந்த நாடகத்தில் பயன்படுத்தியுள்ளோம்" என்றார், இந்த நாடகத் தயாரிப்பில் ஈடுபட்டிருந்த தர்மசிறியின் மாணவன் அஷோக.

ஜெகன் அலோசியஸ் என்பவரின் வழிகாட்டுதலின் கீழ் நடனவமைப்பும், சிறந்த ஒளியமைப்பும் நாடகத்தின் கருத்தை சிறப்பாக பார்வையாளர்களிடம் எடுத்துச்சொல்கிறது.

லான்ஸ்லொட்டாக இயக்குனர் தர்மசிறியும், எலிசாவாக யசோதா என்பவரும் தமது பாத்திரத்தை மிகச்சிறப்பாக நடித்திருந்தனர். இவர்களைத் தவிர தர்மபிரிய டயஸ், லக்ஸ்மன் மெண்டிஸ், பிரியந்த சிறிகுமார, சுள்ளா ஜெயவர்த்தன, காமினி விஜயசிங்க, லியோனரட் குறே எனப் பலர் நடித்திருந்தனர்.

இந்த வருடம் இந்திய தேசிய நாடக விழாவில் இலங்கையைப் பிரதிநிதித்துவம் செய்த 'மகராக்ஷயா' முதன்முதலாக யாழ்ப்பாணத்தில் பெர்வரி19 ம் திகதியன்று வீரசிங்கம் மண்டபத்தில் மேடையேற்றப்பட்டது. சிங்கள நாடகமாதலால் யாழ்ப்பாண மக்களுக்குப் புரியும் விதத்தில் தமிழ் மொழிபெயர்ப்பு (Subtitles) திரையில் வீழ்த்தப்பட்டு காட்சிப்படுத்தப்படடு இருந்தது..




மகரன் என்ற அரக்கனின் அழிவு மூலம் இன்றைய சமகால சமூகத்தின் அரக்கரின் அழிவை கோடிகாட்டும் இந்த நாடகம், ஒவ்வொரு மனிதருக்குள்ளும் இருக்கும் அரக்க குணத்தின் அழிவை இறுதியில் வேண்டி நிற்கிறது.

ஆம், அழியவேண்டியது அரக்கர்கள் மட்டுமல்ல, நமக்குள்ளேயே இருக்கும் 'அரக்கமும்' அல்லவா?

**- நா.சாந்தரூபன், 2 ம் அணி**

# ஒரு தந்தையின் கடிதம்


ஒரு தந்தை தன் மகனை ஆரம்பப் பாடசாலையில் சேர்த்தார்.




அவர் தன் மகனுக்கு அறிவுரை சொல்லவில்லை. பள்ளி ஆசிரியருக்கு அவர் எழுதிய கடிதத்திலிருந்து சில பகுதிகள்!


- தோல்வியை ஏற்றுக்கொள்ளவும், வெற்றியைக் கொண்டாடவும் என் மகனுக்குக் கற்றுக் கொடுங்கள்.
- பொறாமையிலிருந்து அவன் விலகியே இருக்கட்டும்.
- வானப் பறவைகள், தேனீக்கள், சூரியன், பசுமையான செடிகள், மலர்கள் இவற்றை இரசிக்க அவனுக்குக் கற்றுக் கொடுங்கள்.
- பிறரை ஏமாற்றுவதைவிட, தோற்பது கண்ணியம் என்று அவனுக்குக் கற்றுக் கொடுங்கள்.
- சுய சிந்தனையில் நம்பிக்கை கொள்ளச் சொல்லுங்கள்.
- மென்மையானவர்களிடம் மென்மையாகவும், உறுதியானவர்களிடம் உறுதியாகவும் நடந்துகொள்ளக் கற்றுக்கொடுங்கள்.
- குற்றம் குறை கூறுபவர்களை அவன் அலட்சியப்படுத்தட்டும்.
- அளவுக்கு அதிகமாய் இனிமையாகப் பேசுபவர்களிடம் அவன் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.
- தன் மனதுக்கு சரி என்று தோன்றுவதை துணிந்து நின்று போராடி நிறைவேற்ற அவனைப் பழக்குங்கள்.

இதை எழுதிய தந்தை **ஆப்ரஹாம் லிங்கன்!**







அடிக்கடி வரும் பூகம்பம், வராது வந்த சுனாமி, குளோபல் வோர்மிங் எனச் சொல்லப்படும் புவி வெப்பமாதல் போன்ற நிகழ்வுகள் உலக மக்களைத் திக்குமுக்காடச் செய்துவருகின்றன. 2012 ஆம் ஆண்டு டிசம்பர் 12ம் திகதி உலகம் அழியப்போகிறது என்று பரவிவரும் செய்தி உண்மைதானோ என்று பலரையும் மிரளவைக்கின்றன.

**மாயன் நாட்காட்டி**

2012இல் உலகம் அழியப்போகிறது என்ற அச்சத்துக்குப் பிரதானமான காரணம் இந்த மாயன் நாட்காட்டிதான். மிக நுட்பமாக கணிதவியல் பரிமாணங்களின் துணையுடன் கி.மு.3113இல் தொடங்கி உருவாக்கப்பட்டிருக்கும் இந்த நாட்காட்டி, கி.பி. 2012-ல் நிறைவடைவதுதான் பலருக்கும் கிலி!

ஏன் 2012 டிசெம்பர் 12ம் நாள் நாள்காட்டி முடிக்கப்பட்டுள்ளது? அன்றுதான் உலகின் கடைசி நாளாம். அதாவது ஞாயிற்றுத்தொகுதியிலுள்ள கோளான பூமி 2012ஆம் ஆண்டு சூரிய மண்டலத்தின் நேர்கோட்டுக்கு வருமாம். இதையடுத்து முன்பு பயணித்த திசையிலிருந்து நேரெதிராக விலகி பயணிக்கும்போது பூமியின் காந்தப்புலங்கள் திசைமாறி, துருவங்களில் இடமாற்றம் ஏற்படும் என்பதாக மாயன் நாட்காட்டி கணிக்கிறது.

**'துருவங்களின் இடமாற்றம்'**

இது ஏற்கனவே விஞ்ஞானிகளால் பல ஆண்டுகளாக விவாதிக்கப்பட்டு வரும் விடயம்தான். ஆனால், அது 2012ஆம் ஆண்டுதான் ஏற்படுமா என்பதை எந்த விஞ்ஞானியும் உறுதியாகச் சொல்லவில்லை.

உலகை நிலைப்படுத்தி இயங்கவைக்கும், வடக்கு-தெற்காக இருக்கும் காந்தப்புலம், ஒவ்வொரு 750,000 வருடங்களுக்கும் ஒருமுறை தலைகீழாக மாறும் என்று சொல்லப்படுகிறது. அப்படி மாறும்போது அடுத்த 100 ஆண்டுகளுக்கு காந்தப்புலம் என்பதே இல்லாமல் போகுமாம். இதனால், புற ஊதாக் கதிர்கள் வெளிப்பட்டு மனிதன், விலங்கினம், தாவரங்கள் என அனைத்தையும் நொடியில் பொசுக்கிவிடும் என்று எதிர்வுகூறப்படுகிறது.

**திரையில் ' 2012 '**

2012இல் பூமி அழிவதான கற்பனைச் சித்திரம்தான் 2012 என்ற திரைப்படம். உலகம் முழுவதும் ஒரேநாளில் பூகம்பமும், சுனாமியும் ஏற்பட்டால் என்ன நிகழும் என்ற கற்பனையின் அடிப்படையில் 1200 கோடி ரூபா செலவில் இந்தப் படம் உருவாக்கப்பட்டது.


பெரிய பெரிய நகரங்கள் அத்தனையும் இடிந்து தரைமட்டம் ஆவது போலவும், உலகிலேயே உயரமான இமய மலையையே சுனாமி விழுங்குவது போலவும் காட்சிகள் படமாக்கப்பட்டுள்ளன.


**கதையா? நிஜமா?**


மாயன் கலண்டர் ஒரு நம்பிக்கை. 2012 திரைப்படம் கற்பனைச் சித்திரம். இவற்றை அடிப்படையாகக் கொண்டு உலக அழிவு தொடர்பான ஒரு முடிவுக்கு வந்துவிட முடியாதுதான். ஆனால், இன்னும் சில ஊகங்கள், இந்தக் கற்பனைகள் உண்மைதானோ என்று எண்ணவைக்கின்றன.

**சூரியப்புயல்**

சூரியனுக்குள் ஏற்படவிருக்கும் பனிப்புயல்கள் காரணமாக ஏற்படும் கதிர்வீச்சு பூமியை பொசுக்கிவிடும் என்கிறார்கள் சூரிய ஆராய்ச்சியாளர்கள்! தீவிரமான இப்புயலால் கணினிகள்,











துணைக்கோள்கள், விமானப் போக்குவரத்து, கப்பல் / வாகன வழிகாட்டி, மின்னலைத் தொலைத் தொடர்பு சாதனங்கள் போன்றன பாதிக்கப்படும். பல பகுதிகளில் மின்சக்திப் பரிமாற்றம் தடைப்படும். மின்னியல் ஏற்பாடுகள் யாவும் முடங்கிப்போகும் என்கிறார்கள்.

இந்தச் சூரியத் தீ நாக்குகள் (Solar Flares) பூமியின் காந்த மண்டலத்தை இடி தாக்குவதுபோல் நொடிப் பொழுதில் தாக்கி அனைத்தையும் நாசமாக்கிவிடும் என்று அஞ்சப்படுகிறது.

இதுதவிரவும், பெரிய எரிமலை ஒன்று உலகில் இருப்பதாகவும், அது வெடித்துச் சிதறினால் உலகம் தூள்தூளாகிவிடும்



என்றும் அமெரிக்க மண்ணியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். 2012-ல்தான் அந்த எரிமலை வெடிக்கும் என்பது இவர்களது ஊகம்.

**பைபிளிலும் சொல்லப்பட்டிருக்கிறது...**

விஞ்ஞானிகள் கூற்று ஒரு பக்கமிருக்க, கடவுளுக்கும் சாத்தானுக்கும் கடைசி யுத்தம் (Armageddon) நடக்கும்போது இந்த அழிவு நடக்கும் என்கிறது பைபிள். யுத்த முடிவில் கடவுள் தன் இறுதித் தீர்ப்பை பெருவெள்ளம், ஆழிப் பேரலை, பூகம்பம், கடல்கொள்ளுதல் என எந்த இயற்கை நிகழ்வு மூலமாகவும் வெளிப்படுத்தலாம். அந்த இறுதித் தீர்ப்பு 2012-ல் வரக்கூடும் என்பது சிலரது கருத்து.

இவ்வாறு, 2012இல் உலகம் அழிந்துவிடும் என்று கற்பனைச் சித்திரங்களும், ஆராய்ச்சி முடிவுகளும், பைபிள் வாக்கியங்களும் பல்வேறு ஊகங்களைத் தெரிவித்துள்ளன. இவற்றில் எந்தளவு உண்மை இருக்கிறது என்பதற்கு சரியான ஆதாரங்கள் எதுவும் இதுவரையில் முன்வைக்கப்படவில்லை.

# காலநிலை மாற்றம் அழிவுக்குக் கட்டியமா?

கற்பனைகளும், ஊகங்களும் என்ன சொன்னாலும், அண்மைய காலங்களில் உலக அளவில் ஏற்பட்டுவரும் காலநிலை மாற்றங்கள் புவியின் அழிவுக்குக் கட்டியம் கூறுவது போன்று அமைந்துள்ளன.

"காலநிலையானது சூழல் விவகாரத்திற்கு அப்பாற்பட்ட விடயமாக உருவெடுத்து வருகிறது" என பசுமைப் புரட்சிக்கான ஆலோசகர் டானியல் மில்லர் கூறியுள்ள்து இங்கு கவனிக்கத்தக்கது.

உலகளாவிய ரீதியில் வெப்பம் உயர்ந்து சிறிதளவும் எதிர்பாராத அளவிற்கு கனமழை, அதிக வெப்பம், வெள்ளப்பெருக்கு, சூறாவளி மற்றும் கடல் பெருக்கெடுத்தல் போன்ற காலநிலை மாற்றங்கள் ஏற்படுகின்றன.

2004 ஆம் ஆண்டு சுமாத்திர தீவுக்கருகில் ஏற்பட்ட சுனாமி, 2005 ஆம் ஆண்டு ஐக்கிய அமெரிக்காவில் ஏற்பட்ட கதிரினா சூறாவளி, 2008 இல் மியன்மாரில் ஏற்பட்ட நர்கீஸ் சூறாவளி, சீனாவில் ஏற்பட்ட பூகம்பம் மற்றும் 2009இல் அவுஸ்திரேலியாவில் பதிவுசெய்யப்பட்ட காட்டுத்தீ போன்றன அண்மைக்காலத்தில் உலகில் ஏற்பட்ட சில இயற்கை அனர்த்தங்களாகும்.

**பூமி வெப்பமாதல்**

பூமியின் வெப்பநிலை படிப்படியாக அதிகரித்து வருவதே இந்தக் காலநிலை மாற்றங்களுக்கான பிரதான காரணமென விஞ்ஞானிகள் கூறுகின்றனர். இதற்கு பச்சைவீட்டு வாயு விளைவும், ஓசோன் படையில் ஏற்பட்டுவரும் ஓட்டையும் காரணம் என அவர்கள் வாதிடுகின்றனர்.

**பச்சைவீட்டு வாயு விளைவு**


வளிமண்டலச் சேர்க்கையில் ஏற்பட்ட மாற்றங்களினால்தான் இவ் விளைவு ஏற்படுகின்றது. பூமியில் அதிகரித்துள்ள பச்சைவீட்டு வாயுக்கள்தான் இதற்குக் காரணம் என விஞ்ஞானிகள் காரணம் காட்டியுள்ளனர். CO2 (காபனீர்ஒட்சைட்டு), CH4 (மெதேன்), CFC (குளோரோபுளோராகாபன்). SO2(கந்தகவீர்ஒட்சைட்டு), CO (காபனோர்ஒட்சைட்டு), N2O (நைதரசன்ஒட்சைட்டு) என்பனவே இவ்வாயுக்கள்.





18 ஆம் நூற்றாண்டின் பின்பு தொடங்கிய தொழிற் புரட்சி உருவாக்கிய விளைவுகளின் தாக்கமே இந்த விளைவுக்குக் காரணம்.

சூரியனில் இருந்து பெறப்படும் கதிர் வீச்சு வளிமண்டலத்தினை ஊடறுத்து புவி மேற்பரப்பை அடைகின்றது. இவ்வாறு ஊடறுத்து புவி மேற்பரப்பை அடையும் கதிர்,




உறிஞ்சல், தெறித்தல், சிதறல் போன்ற செயல்முறைகளுக்கு உட்பட்டு சமுத்திரம், நிலம், தாவரப்போர்வை என்பனவற்றை வெப்பமாக்குகின்றது. பின்னர் அது பூமியை விட்டு வெளியேறுகின்றது. இதனால் ஞாயிற்றுச் சமநிலை தோற்றுவிக்கப்பட்டு எந்தக் கெடுதலும் நிகழ்வதில்லை.

ஆனால், இன்று ஞாயிற்றிலிருந்து உள்வரும், வெளிச்செல்லும் சக்தியானது வளிமண்டலத்திலுள்ள பச்சைவீட்டு வாயுக்களினால் உறிஞ்சப்படுவதனால் பூமி வெப்பமடைகின்றது.

### ஓசோன் படையில் ஓட்டை

சூரியனின் கதிர்களில் உயிர்ச்சூழலுக்கு தீங்கு விளைவிக்கும் புற ஊதாக் கதிர்களும், அகச்சிகப்புக் கதிர்களும் புவியை வந்தடையாத வண்ணம் அவற்றினை உறிஞ்சி எடுத்து, உயிர்ச்சூழலுக்கு நன்மை பயக்கக்கூடிய கதிர்களை தேவையான அளவு புவிக்கு வழங்குகின்ற ஒரு படலமே ஓசோன் படை ஆகும். இவ் ஓசோன் படையில் ஏற்பட்டுள்ள துவாரங்களே இன்று மனிதன் எதிர்நோக்குகின்ற மிகப்பெரிய பிரச்சினைகளில் ஒன்றாகும். இத் துவாரங்களின் வழியாகப் புறஊதாக் கதிர்களும், வெப்பமும் நேரடியாகப் பூமியை வந்தடைவதினால் நேரடியான வெப்பமும், பல நோய்களும் ஏற்பட வழிவகுக்கின்றது.

பனிமலைகள் உருகுதல், கடல் மட்ட உயர்வு, பருவநிலை மாற்றம், அதிகரித்து வரும் புயல்கள், தானிய உற்பத்திக் குறைவு, நோய்ப்பரவல், பாலைவன விஸ்தரிப்பு, உயிர்ப்பல்வகைமையின் அழிவு போன்ற பல பிரச்சினைகளுக்கு இதுவே காரணம் என்கின்றனர் விஞ்ஞானிகள்.



2010ஆம் ஆண்டிலேயே பூமி அதிகளவு வெப்பத்தைக் கொண்டிருந்தது என உலக வானிலை ஆராய்ச்சி நிலையத்தினர் செய்தி வெளியிட்டுள்ளனர்.

### 'எதிர்பாராத விதி' – காட்டுத்தீ!

● ரஷ்யாவின் மத்தியிலுள்ள காட்டுப்பகுதிகளில் 2010 ஜுலை முதல் பரவிய காட்டுத்தீ ஏழு மாநிலங்களைப் பாதித்தது. பல வாரங்களாக நீடித்த இக்காட்டுத்தீயினால் ஏறத்தாழ 50 பேர் கொல்லப்பட்டும், 3000க்கும் அதிகமானோர் இருப்பிடங்களை இழந்துமுள்ளனர்.

● இவ்வாண்டு பெப்ரவரியில் மேற்கு அவுஸ்திரேலியாவில் தலை-

## சூடான »

நகர் பெர்த்திற்கு வெளியே ஏற்பட்ட கட்டுப்படுத்த முடியாத காட்டுத்தீயினால் 40க்கும் மேற்பட்ட வீடுகள் முற்றாகப் பாதிப்படைந்தன.

### 'வெப்பத்தால் குளிரும் உலகம்'

துருவப் பகுதிகளில் உள்ள பனிக்கட்டிகள் உருகி வருவதால் வடஅமெரிக்கா, ஐரோப்பா, ஆசியா பகுதிகளில் நம்பமுடியாத அளவுக்கு குளிர் காலநிலை ஏற்பட்டுள்ளது. குறிப்பாக டென்மார்க், லண்டன், அவுஸ்திரேலியாவின் மெல்போர்ன், கனடா ஆகிய பிரதேசங்களில் அதிகுளிர் உணரப்பட்டுள்ளது

### நோய் உற்பத்தி

இந்தப் புவி வெப்பமாதல் பிரச்சினையாலேயே பன்றிக் காய்ச்சல் மற்றும் திடீர் வைரஸ் காய்ச்சல் அண்மைக் காலத்தில் ஏற்பட்டதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர். கடந்த நூற்றாண்டில் இதுபோன்ற காலமாற்றத்தால்தான் உயிர்க்கொல்லி நோயான எய்ட்ஸ் பரவியது. மேற்கு ஆப்பிரிக்காவில் சிம்பன்சி குரங்குகளில் இருந்து எச்.ஐ.வி. கிருமி மனிதர்களுக்கு பரவி இருப்பதாக அறிய முடிகிறது.

### 'இரண்டு பக்கமும் துன்பம்' – எல்நினோ!

எல் நினோ - இது ஒரு பக்கம் அதிக மழை பெய்ய வைத்து வெள்ளத்தையும், இன்னொரு பக்கம் மழையைக் குறைத்து அதிக வறட்சியையும் ஏற்படுத்தும். தென் அமெரிக்க நாடான பிரேசிலில் 2010 ஒக்டோபரில் அமேசன் நதிப்பிரதேசத்தில் தீவிர வறட்சி ஏற்பட்டதுடன், றியோடி ஜெனிரோ பிரதேசத்தில் இவ்வருடம் ஜனவரியில் வரலாறு காணாத வெள்ளப்பெருக்கு ஏற்பட்டிருந்தது. இதனால் 500க்கும் மேற்பட்டோர் பலியானதுடன், பல நகரங்களில் மோசமான நிலச்சரிவு ஏற்பட்டு, ஆயிரக்கணக்கானோர் தங்கள் வீடுகளை இழந்துள்ளனர்.

# 2010

இந்த எல்நினோவின் தாக்கம் 2010இல் இந்தியா, சீனா போன்ற நாடுகளிலும் ஏற்பட்டு இருந்தது. இதனால் உயிர், உடைமை இழப்புக்களுடன், விவசாய நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டு, பல நோய்களும் பரவின.

### 'கட்டுப்படுத்த முடியாதது' – வெள்ளப்பெருக்கு!

● சென்ற வருடம் ஆகஸ்ட் முதல் பாகிஸ்தானில் கடும் மழை, வெள்ளப்பெருக்கால் 1400 பேரளவில் உயிரிழந்ததுடன், ஆயிரக்கணக்கான வீடுகளும், பல விளை நிலங்களும் அழிந்துவிட்டன. பாதைகளும் தொலைத்தொடர்பும் துண்டிக்கப்பட்டன. 10 இலட்சத்துக்கும் மேலானவர்கள் வீடுவாசலின்றி அல்லல்படுகின்றனர். வெள்ளப்பெருக்கினால் ஏற்பட்ட நேரடி இழப்பு சுமார் 950 கோடி அமெரிக்க டொலராகும்!

● அவுஸ்திரேலியாவின் வடகிழக்குப் பகுதியான குயின்ஸ்லாந்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு கார-ணமாக மாநிலம் முழுவதும் ஆயிரக்கணக்கான வீடுகளும், வர்த்தக நிறுவன ங்களும் நீரில் மூழ்கியுள்ளன. இதனால் 2 இலட்சத்துக்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

# இலங்கையில் தாக்கம்



2001ஆம் ஆண்டு வரை இலங்கைக்கு இயற்கை அனர்த்தங்களால் பாரிய பாதிப்புக்கள் ஏற்படவில்லையாயினும் 2003, 2006, 2008 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்குகள் மற்றும் 2004ல் ஏற்பட்ட சுனாமிப் பேரலை காரணமாக இலங்கைக்கு பாரிய உயிரிழப்புக்கள் மற்றும் சொத்திழப்புக்கள் ஏற்பட்டன.

2010இல் இலங்கையின் வடக்கு, கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் நிலவிய வறட்சியான சூழலும், இவ்வருடத்தின் ஆரம்பத்தில் பெய்த அதிகூடிய மழைவீழ்ச்சியும் இலங்கையில் பருவம் தப்பிய காலநிலை மாற்றங்களே. இதனால் ஒரு மில்லியன் பேர் வரையில் பாதிக்கப்பட்டனர்.

### சுழல்காற்று

பூமி வெப்பமாதலினால் கடல்நீர் ஆவியாகி மேலே சென்று ஏற்படும் அமுக்க வேறுபாடுகளால் சுழல்காற்று ஏற்படுகின்றது. யாழ்ப்பாணத்தின் நவாலியில் ஏற்பட்ட நீர்ச் சுழல்காற்று, சிலாபம், மட்டக்களப்பு வவுணதீவுப் பிரதேசங்களில் ஏற்பட்ட சுழல்காற்று என்பன இலங்கைக்குப் புதியவை.

### லாநினா – தாக்கம்

இலங்கையில் 100 வருடங்களுக்குப் பின்னர் வழமைக்கு மாறாக 'லாநினா'வின் தாக்கம் நிகழ்ந்து, வடக்கு, கிழக்கு, உட்பட்ட பிரதேசங்களில் மழையுடன் கூடிய கடும் குளிரான காலநிலை ஏற்பட்டிருந்தது. இது தவிர மலைநாட்டில் ஏற்பட்ட பனிப்பொழிவு மற்றும் மண்சரிவால் மக்கள் உயிரிழந்ததுடன், தேயிலைப் பயிர்ச்செய்கையும் பாதிப்படைந்தது.

உலகளாவிய ரீதியில் ஏற்பட்டுவரும் புவி வெப்பமாதல் விளைவுகள் எமது வீட்டு வாசல் வரையில் இப்போது வந்து சேர்ந்துவிட்டது. இந்தப் பின்னணியில் 2012 உலக அழிவு பற்றிய பேச்சுக்களை வெறும் கற்பனையென்று எப்படி ஒதுக்கிவிட முடியும்?


புவிவெப்பமாதல் விளைவுகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக உலக நாடுகள் கூடி டென்மார்க்கின் கோப்பன்ஹேகனில் நடத்திய மாநாட்டு முயற்சிகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டாலே 2013ஐ உலகம் மகிழ்வுடன் வரவேற்கக்கூடியதாக இருக்கும்.

**- மகா யசோ**





# தாய் மொழியிலேயே தவறிவிடுவோமா?



தமிழுக்கும், தமிழர்களுக்கும் தனித்துவமான யாழ் மண்ணில், தாய்மொழியாம் தமிழ் மொழியில் மாணவர்களுடைய பரீட்சைச் சித்தி வீதம் வீழ்ச்சியடைந்து வருகிறது என்ற அதிர்ச்சித் தகவலறிந்து ஆடிப்போனோம்.

ஏன் இந்த அவலம்? கல்வியையே கண்களாகக் கொண்டு வாழ்ந்த நம் சமூகத்துக்கு ஏனிந்தப் பின்னடைவு?

இந்தக் கேள்விகளுக்கு விடை தேடும் நோக்கில் மேலதிக மாகாண கல்விப் பணிமனையையும், யாழ் வலயக் கல்விப் பணிமனையையும் நாடினோம்.

**யாரோடு நோவோம்?**

“யாரைக் குறை கூறுவதென்று புரியவில்லை. முதுகலைப் பட்டப்படிப்பை முடித்தவர்களே பலர் எழுத்துப்பிழை, இலக்கணப்பிழையுடன் எழுதுவதைப் பார்த்திருக்கிறேன். அவர்களே இப்படி என்றால் மாணவர்களின் நிலை எப்படி இருக்கும்?” என்று மனம் நோகிறார் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம்.

“பெரிய பாடசாலைகளில் பிரச்சினை இல்லை. கிராமப்புறப் பாடசாலை -களில் அடிப்படைக் கல்வி ஒழுங்காகக் கிடைக்காமையினால், மாணவர்கள் மொழிப்பிரச்சினையை எதிர்கொள்கின்றனர். அண்மைக் காலங்களில் நடந்த பொதுப் பரீட்சைகளில் தமிழ்ப் பாடத்தில் சித்தியடைந்த மாணவர்-களின் சதவீதத்தைக் காட்டும் அட்டவணை மாணவர்களின் இந்தப் பின்னடைவைத் தெளிவாகக் காட்டுகிறது” என்றார் அவர்.

**க.பொ.த உதரம்**

| ஆண்டு | சதவீதம் |
|---|---|
| 2003 | 84.68 |
| 2004 | 82.63 |
| 2005 | 88.15 |
| 2006 | 90.12 |
| 2007 | 82.11 |
| 2009 | 81.6 |

2010இல் வலய ரீதியாக யாழ் மாவட்ட தமிழ்ப் பாடப் பெறுபேற்று விபரங்கள் வருமாறு:

| ஆண்டு | சதவீதம் |
|---|---|
| 2004 | 81 |
| 2005 | 86 |
| 2006 | 91.54 |
| 2007 | 90.7 |
| 2010 | 77 |

தமிழுக்கு மட்டுமல்ல, கணிதத்தில் 42% சித்தியும், ஆங்கிலத்தில் 15 - 20% சித்தியுமே பெறப்படுகிறது என்ற அதிர்ச்சித் தகவலையும் இவர் போட்டுடைத்தார்.

ஓரளவு முன்னேற்றமான பாடசாலைகள் பெறும் அதிக வீதாசார பெறுபேறுகளுடன் சேர்த்துக் கணிக்கப்படுவதால், இந்த வீதாசாரங்கள்கூட பின்தங்கிய பாடசாலைகளின் நிலையைச் சரியாகக் காட்டாது என்று கூறிய அவர், உண்மையில் பின்தங்கிய பாடசாலைகளின் நிலைமை இதைவிட மோசமாக இருப்பதாகச் சொன்னார்.

**பெற்றோரும் பங்காளிகள்தான்!**

இந்தப் பின்னடைவுக்கு தனியே மாணவர்களை மட்டும் குறை கூறிவிட முடியாது. வீட்டில் பெற்றோரின் கவனிப்பும் அவசியமாகிறது. பிள்ளைகளிடையே வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிப்பதற்கு அவர்கள் முயற்சிப்பதில்லை. பாடசாலை முடிந்ததும் தனியார் வகுப்புக்களுக்கு விரட்டப்படும் பிள்ளைகளுக்கு வாசிப்பதற்கு நேரமும் கிடைப்பதில்லை.

இவ்வாறு, சிறு வயது முதலே பொது வாசிப்புப் பழக்கம் இல்லாமல் வளரும் பிள்ளைகள் தமது தாய்மொழியையே கோட்டை விட்டுவிடுவதில் ஆச்சரியம் என்ன இருக்கிறது?

இதனை ஏற்றுக்கொள்வதுபோலவே, “ஐந்தாம் வகுப்பு வரை பிள்ளைகள் மேல் பெற்றோர் காட்டும் அக்கறை ஏனோ அதன் பின் தொடர்வது இல்லை. பிள்ளைகளுக்கு கைத்தொலைபேசிகள் வாங்கிக் கொடுப்பதை விடுத்து அவர்களை நல்வழிப்படுத்த முயலவேண்டும்” என்றும் கூறினார்.

### ஆசிரியருக்குப் பங்கில்லையா?

"ஆறாம் ஆண்டுக்கு மேல் படிக்கும் பிள்ளைகளின் எழுத்துத்திறன், பேச்சுத்திறன், வாசிப்புத்திறன், கிரகித்தல் திறன் போன்றவற்றை வளர்க்கும் செயற்பாடுகளை மேற்கொள்ளவேண்டும். 'மொழி பேசும் ஆற்றலே ஆளுமையைத் தீர்மானிக்கும் காரணி' என்பதனால், உரத்து வாசிக்கச் செய்தல், பேச்சுப் போட்டிகள் வைத்தல் என்பன மூலம் மாணவர்களிடையே அவற்றை ஊக்கப்படுத்தவேண்டும்" என்றும் ஆலோசனை கூறினார் செல்வரத்தினம்.

**"யாரைக் குறைகூறுவதென்று புரியவில்லை. முதுகலைப் பட்டப்படிப்பை முடித்தவர்களே பலர் எழுத்துப்பிழை, இலக்கணப் பிழையுடன் எழுதுவதைப் பார்த்திருக்கிறேன். அவர்களே இப்படி என்றால் மாணவர்களின் நிலை எப்படி இருக்கும்?"**


தி.செல்வரத்தினம்

### யாழ் வலயக் கல்விப்பணிப்பாளர்

இந்த நிலைமையைப் பற்றி யாழ் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி.அ.வேதநாயகம் வித்தியாசமான ஒரு விளக்கத்தை அளித்தார்.

"தேசிய ரீதியில் தமிழ்ப் பாடத்தில் சித்தியின்மை அதிகரித்துச் செல்கிறது என்பதென்னவோ உண்மைதான். ஆனால், எமது வலயத்தில் சித்தியின்மை வீதம் குறைவடைந்து செல்கிறது" என்று கூறிய அவர், பொதுவாக தமிழ்ப் பாடச் சித்தியில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கான காரணத்தையும் விளக்கினார்.

"இடப்பெயர்வு, யுத்தம் போன்றவற்றால் மன உளைச்சலுக்குள்ளான பல ஆசிரியர்களும், மாணவர்களும் எமது சமூகத்தில் உள்ளனர். அவர்களின் மனநிலையை கருத்தில் கொள்ளாது மாணவர்களையும், ஆசிரியர்களையும் குறை கூறுவது எந்த வகையில் நியாயம்?" என்று கேள்வியெழுப்பிய அவர்,

"மன உளச்சலுக்குள்ளான ஆசிரியர்கள், மாணவர்களை நாங்கள் நேரடியாகச் சந்தித்து அவர்களை சாதாரண நிலைக்கு இட்டுச்செல்லும் முயற்சிகளைவும் மேற்கொண்டு வருகிறோம்" என்று, நிலைமையைச் சீர்செய்ய தாம் மேற்கொண்டுவரும் முயற்சிகளையும் விளக்கினார்.

யாழ் மக்களின் மூலதனம் கல்வி என்றே சொல்லி வருகிறோம்.


திருமதி.அ.வேதநாயகம்

அப்படியிருக்க, தாய்மொழியாம் தமிழிலேயே நாம் தரம் குறைந்து செல்வது எத்தனை ஆபத்தான விடயம்? இதனை உணர்ந்து மாணவச் செல்வங்களைத் தாய்மொழியில் தேர்ச்சிபெறச் செய்ய பெற்றோரும், ஆசிரியர்களும் முடிந்தளவு முயற்சிகளை எடுக்கவேண்டும்.

### மாணவர்களின் பங்கு

உங்கள் வாசிப்புப்பழக்கத்தைக் கூட்டுங்கள். இதற்கென நூலகங்களைப் பயன்படுத்தவும், புத்தகக் கடைகளுக்கு அடிக்கடி சென்று பிரயோசனமான புத்தகங்களை வாங்கிப் படியுங்கள், வீட்டில் உங்களுக்கென்றே முக்கியமான சில நூல்களைக் கொண்ட சிறிய நூலகம் ஒன்றை அமைத்துக் கொள்ளுங்கள்.

**தேர்ச்சி உங்கள் கைகளில்... அறிக்கைகள் உங்கள் முன்னேற்றத்தைச் சொல்லும் உலகுக்கு!**



**- சிந்து.சச்சி, 2ம் அணி**

### வாசிப்பு வழிகாட்டி

- தினமும் பள்ளிப் பாடங்களுக்கு அப்பால் ஏதேனும் ஒரு விடயம் தொடர்பாக அரை மணித்தியாலமேனும் வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக்கொள்ளுங்கள்!
- பாடசாலை நூலகம் மற்றும் ஊரில் அருகிலுள்ள நூலகத்தில் அங்கத்துவராகி கிரமமாகப் புத்தகங்களை எடுத்து வாசியுங்கள்!
- வீட்டிலேயே ஒரு சிறிய நூலகத்தை உருவாக்குங்கள்!
- தினமும் பத்திரிகை பார்ப்பதை ஒரு பழக்கமாக்கிக்கொள்ளுங்கள்!
- சஞ்சிகைகள், சிற்றிதழ்களை நிறைய வாங்கி வாசியுங்கள்!
- மாதாந்தம் உங்கள் செலவுகளில் ஒரு சிறு தொகையை புத்தகங்கள், சஞ்சிகைகள் வாங்குவதற்கென ஒதுக்குங்கள்!




# ‘வியாபாரத்துக்கான நுழைவாயில்’ இனங்காட்டிய கல்வி வாசல்கள்

யாழ் வர்த்தக-கைத்தொழில் கண்காட்சியில் பங்குபற்றிய சில கல்வி நிறுவனங்கள், அவை வழங்கும் கற்கைநெறிகள் பற்றி பெப்ரவரி இதழில் தந்திருந்தோம். இதன் தொடர்ச்சியாக ஏனைய சில கல்வி நிறுவனங்களையும் அங்கு தொடரக்கூடிய கற்கைநெறிகளைப் பற்றி இங்கே தருகிறோம்.

## விஞ்ஞான மற்றும் முகாமைத்துவ பட்டப்படிப்பு நிறுவனம் (GISM)

நியூசிலாந்தின் மாசே பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான மற்றும் முகாமைத்துவக் கற்கைநெறிகளைக் கொண்டமைந்த கல்வி நிறுவனமாகும். இலங்கையில் உள்ள GISM கல்வி நிறுவனத்தில் முதலாம் வருடக் கற்கையினையும், இரண்டாம் மூன்றாம் வருடங்களுக்கான கற்கைநெறியை நியூசிலாந்தில் உள்ள பல்கலைக்கழகத்திலும் தொடரலாம்.



## GISMஇல் தொடரக்கூடிய கற்கை நெறிகள்:

- கணினி விஞ்ஞானத்தில் பட்டப்படிப்பு
- இலத்திரனியல் மற்றும் தொடர்பாடலுக்கான டிப்ளோமா கற்கை
- தகவல் தொழில்நுட்ப பட்டப்படிப்பு
- இலத்திரனியல் மற்றும் தானியங்கி தொழில்நுட்பத்திற்கான டிப்ளோமா கற்கை
- மென்பொருள் பொறியியல் கற்கை
- வணிக நிர்வாக டிப்ளோமா கற்கை
- வணிகவியல் பட்டப்படிப்பு
- IELTS

**மேலதிக விபரங்களுக்கு:**
GISM, 550, பழைய கொட்டாவ வீதி, உடகமுல்ல, நுகேகொட., தொ.பே.: 011-2835935 , 011-2811914

## IDM கணினிக் கற்கை நிலையம்

மாணவர்களை உலகளாவிய ரீதியில் முன்னெடுத்துச் செல்வதற்கு பெரிதும் வழி வகுக்கக்கூடிய கற்கை-நெறிகளை இந்த நிறுவனம் தன்னகத்தே கொண்டுள்ளது. தகவல் தொழில்நுட்பத்தில் பட்டப்படிப்பு மற்றும் தொழிற்துறைக் கல்வியினை வழங்கும் நிறுவனமான IDM 1981 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இலங்கையில் 54 கிளை நிறுவனங்களைக் கொண்ட இதன் தலைமைக் காரியாலயம் 25, விசாகா வீதி, பம்பலப்பிட்டி, கொழும்பு-4 எனும் முகவரியில் அமைந்துள்ளது.

சான்றிதழ், டிப்ளோமா மற்றும் பட்டப்படிப்பு கற்கைநெறிகளை இங்கே தொடரமுடியும். தகவல் தொழில்நுட்பத்தில் நீங்கள் பட்டம் பெற்று சிறந்த தொழிலொன்றைப் பெற்றுக்கொள்ள IDM கைகொடுக்கும். IDM யாழ்ப்பாணத்தில் 216,நாவலர் வீதி எனும் முகவரியில் அமைந்துள்ளது.

**மேலதிக விளக்கங்கள், தொடர்புகளுக்கு:**
யாழ்ப்பாணம்:021 2229901, கொழும்பு:011-2361801

## தகவல் தொழில்நுட்ப கல்வி நிறுவனம் IIT

பிரித்தானிய கற்கைநெறிகளை இலங்கையிலும் மாணவர்கள் தொடரவேண்டும் எனும் நோக்கில் 1990 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட நிறுவ-னம். 57, இராமகிருஷ்ண வீதி, வெள்ளவத்தையில் உள்ளது.

இந்த நிறுவனம் மூலம் இதுவரையில் 2000ற்கும் மேற்பட்ட மாணவர்கள் லண்டனிலுள்ள பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பை முடித்து வெளியேறியுள்ளனர். மாணவர்களுக்கு முழுநேரக் கல்வியாக தகவல் தொழில்நுட்பத்தில் தொழிற்துறைக் கல்வியினை வழங்கும் ஐஜவு யாழ்ப்பாணத்தில் லக்ஸன் பிளாசா, நாவல வீதியிலமைந்துள்ளது.

## IITயில் தொடரக்கூடிய கற்கை நெறிகள்:

- அடிப்படைக் கணினிக் கற்கை (இலங்கை)
- மென்பொருள் பொறியியற்துறையில் பட்டப்படிப்பு (BSc, MSc லண்டன்)
- வணிக தகவல் தொழில்நுட்ப பட்டப்படிப்பு (லண்டன்)

**மேலதிக விபரங்களுக்கு:** 011-2360212

**- சிந்து.சச்சி**

ஊடகத்துறையில் அறிமுகமாகி தேர்ச்சிபெற உங்களுக்கு ஆர்வமுண்டா?

செய்திகள், துணுக்குகள், ஆக்க எழுத்துத் துறையில் தேர்ச்சிபெற விரும்புகிறீர்களா?

அப்படியாயின், சிகரம் மாணவப் பத்திரிகையாளர் திட்டத்தில் இணைந்துகொள்ளுங்கள்.

உங்கள் பெயர், முகவரி, கடவுச்சீட்டு அளவு ஒளிப்படம், பாடசாலை அதிபர் அல்லது கிராமசேவையாளரின் உறுதிப்படுத்தல் கடிதம் என்பவற்றுடன், இளையோருக்குப் பயன்தரக்கூடிய தகவல்கள் நிறைந்த உங்களுடைய சிறந்த ஆக்கமொன்றையும் எங்களுக்கு எழுதியனுப்புங்கள்.

தரம் கண்டு ஆக்கம் பிரசுரமாவதுடன், சிகரம் மாணவப் பத்திரிகையாளர் குழுவில் நீங்கள் இணைத்துக் கொள்ளப்படுவீர்கள். இது தொடர்பான விபரங்கள் 'சிகரம் தொடு' இதழிலேயே உங்கள் படத்துடன் வெளியாகும்.

சிகரம் மாணவ பத்திரிகையாளர் குழுவில் நீங்கள் இணைத்துக்கொள்ளப்பட்டால், தொடர்ந்து உங்கள் ஆக்கங்களை 'சிகரம் தொடு'வில் வெளியிட முடிவதுடன், சிகரம் ஊடக இல்லத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் கருத்தரங்குகள், ஊடகச் செயலமர்வுகள், பயிற்சிகளில் பங்குபெற உங்களுக்கும் வாய்ப்புக் கிட்டும்.




# மாணவ பத்திரிகையாளர் திட்டம்

கூடவே, சிகரம் ஊடக இல்லத்தில் நடைபெறும் ஊடகப் பயிற்சி நெறியில் இணைந்துகொள்ளவும் உங்களுக்கு வாய்ப்பளிக்கப்படுவதுடன், ஊடகத்துறையில் பயிற்சிபெற்று தொழில்வாய்ப்பு ஒன்றைப் பெற்றுக்கொள்ளவும் உங்களுக்கு வழிகாட்டப்படும்.

என்ன? ஊடகவியலாளர் ஆகும் ஆர்வம் உண்டா?

உங்கள் ஆக்கத்திறனை நிரூபிக்கும் ஆக்கமொன்றை இன்றே எழுதியனுப்புங்கள்

**சிகரம் மாணவ பத்திரிகையாளர் திட்டம்**


**'சிகரம் தொடு'**

**சிகரம் ஊடக இல்லம்**

**இல.221, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**

**sikaramthodu@gmail.com**

---



பிரிட்டிஷ்காரர் ஃப்ரெஞ்சுக்காரர் எந்த ஆண்டு தோற்கடித்தார்கள்?

'சரியாகத் தெரியவில்லை' என்றார் ஐன்ஸ்டீன்.

ஆசிரியர் கிண்டலாக ஐன்ஸ்டீனிடம் கேட்டார்.

'சரியாகப் படிக்கவில்லையா?

'ஆம் படிக்கவில்லை'

'ஏன் படிக்கவில்லை'

'எனக்கு முக்கியமாகப்படவில்லை'

"அப்படியா? அப்படியானால், தங்களுடைய மேலான கருத்துப்படி எது முக்கியமானது?'

ஐன்ஸ்டீன் தயங்காமல் பதிலளித்தார்.

'என்னைப் பொறுத்தவரை, யார், யாரை, எப்போது, எங்கே அடித்து வீழ்த்தினார்கள் என்பது முக்கியமல்ல. தேவைப்படும்போது அதைப் புத்தகத்தில் பார்த்துத் தெரிந்துகொள்ளலாம். ஆனால், ஒரு நாட்டினர் இன்னொரு நாட்டினர் மீது ஏன் படையெடுத்தார்கள் என்பது தான் முக்கியமான கேள்வி.'

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பதில் இது என்பதில் ஏதாவது சந்தேகம் இருக்க முடியுமா?

ஐன்ஸ்டீனால் முடியும். அவர் பெரிய ஆள். சிந்தனைவாதி. எல்லோருக்கும் இது சாத்தியமா? இப்படிக் கேட்பவர்கள் ஒரு விஷயத்தை மறந்து விடுகிறார்கள்.

ஒரு விஞ்ஞானியாக இருந்தபோது ஐன்ஸ்டீன் அளித்த பதில் அல்ல இது.

ஒரு மாணவனாக இருந்தபோது அளித்த பதில்.



ஈழத்தின் முக்கிய படைப்பாளியான கவிஞர் வ.ஐ.ச.ஜெயபாலனைத் தெரிந்தவர்கள், அறிந்தவர்கள் என அனைவருக்கும், 'ஆடுகளம்' பேட்டைக்காரனாக அவரைத் திரையில் காண்கையில், வியப்புடன் கூடிய மகிழ்ச்சி!

எம்மண்ணில் பிறந்த ஒருவர் தமிழகத்தவரோடு இணைந்து, இந்திய தமிழ் சினிமாவுக்குள்ளே சாதித்துக் காட்டியுள்ளார்.

**பேட்டைக்காரராய் ஆடுகளத்தில்:**

மதுரை மாவட்டத்திலே கிராமத்தில் ஒரு காலத்தில் நடைபெற்ற சேவற்சண்டையை மையமாகவைத்துப் பின்னப்பட்ட கதையிலே, பரம்பரை பரம்பரையாகச் சேவற் சண்டையை நடத்தி வரும் பேட்டைக்காரனாகத் தோன்றியுள்ளார் கவிஞர் வ.ஐ.ச. ஜெயபாலன்.

சேவற்சண்டை நுணுக்கங்களின் குலவழிப் பிதாமகர். ஒவ்வொரு பந்தயத்துக்கும் சேவலைத் தேர்வு செய்கையில் சண்டையில் நிற்காது எனத் தெரிந்துவிட்டால் சேவலை அறுத்துப்போட்டுவிடும் வேட்டைக்காரர் அவர்....


அறுத்துப்போடச் சொன்ன சேவல் தனுஷின் முயற்சியால் இறுதியில் ஜெயித்துக்காட்டியதால் தன் கணக்குப் பொய்த்ததைத் தன்மானக்

# நம்மூர் (கதா)நாயகன்

ஈழத்தவர்கள் படங்கள் தயாரிக்கவும், நடிக்கவும், பல்வேறு சினிமாத்துறையில் ஈடுபடும் இன்றைய சூழலில், ஜெயபாலனின் பேட்டைக்காரன் அழுத்தமான ஒரு பதிவு!

இயல்பான நடிப்பு. முகத்தின் ஒவ்வொரு நரம்பும் நடிக்கிறது இவருக்கு. கோபமாகட்டும், கனிவாகட்டும், அகங்காரமாகட்டும், பொறாமையாகட்டும், குழப்பமாகட்டும் கை காலை அசைக்காமல்

குறைவாகக் கருதி, தனது கண்களைத் தானே விரல்களால் மாற்றி மாற்றிக் குத்திப் பார்வை கெடுக்கும் பரிதாபம் இவருடைய நடிப்பின் உச்சக்கட்டம்!



**"சிங்கம் மாதிரி ஒராளைத் தேடுறோம். நீங்க நடிக்கிறீங்களா?" என்று என்னைக் கேட்டார். "எனக்கு வாழ்க்கை முழுக்க அட்வெஞ்சர்ஸ்தான். இதுவும் அப்படியொன்று என்று ஏற்கிறேன். உங்களால் முடியுமானால் என்னை நடிக்க வையுங்கள், முடியாட்டி என்னை விட்டுவிடுங்கள் என்றேன் "**

இளைஞர் மத்தியில் தனக்கென தனியிடம் பிடித்த நடிகர் தனுஷ் படத்தில் இடம்பெற்றிருந்தாலும், கதையின் நிஜமான நாயகன் என்னவோ பேட்டைக்காரன் - ஜெயபாலன் தான் என்பதை படத்தைப் பார்க்கும் எவரும் ஏற்றுக்கொள்வர்.

கண்களிலேயே அனைத்தையும் காட்டிவிடுகிறார்.

அசல் கிராமத்தவனாக, கிராமத்து ஆளுமைகள் நிரம்பிய தலைமைப் பாத்திரமாகப் படம் முழுவதும் பவனி வரும் பேட்டைக்காரர்,

"உலக சினிமாவைப் பார்த்த அனுபவம் எனக்கிருந்தாலும், சினிமா நடிப்பைப் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. நான் நிறைய உயிர்த்த ஆளுமைகள் பிறந்த மண்ணிலிருந்து வந்த வகையிலும், நிறையப் போராட்டங்களில்

ஆளுமைகள் பலரைப் பார்த்தவன் என்ற வகையிலும் என்னிடத்தில் ஒரு பெரிய வீடியோக் களஞ்சியம் இருப்பதை நான் உணர்ந்தேன். வெற்றிமாறன் கதைச்சூழலை சொல்லும்போது என் வீடியோக்-களஞ்சியத்தில் இருந்து மீள நினைவூட்டி நடித்தேன்'' என்று பெருமையுடன் கூறுகிறார் பேட்டைக்-காரனாக வாழ்ந்து காட்டிய கவிஞர் வ.ஐ.ச.ஜெயபாலன்!

### ஆடுகளம் வாய்ப்பு

ஈழத்தில் பிறந்து புலம்பெயர் வாழ்க்கைச் சூழலில் உள்ள கவிஞர் ஜெயபாலன், தமிழக இயக்குனரின் பார்வையில் பட்டு 'ஆடுகளம்' என்ற புதிய களத்தில் நடிகராகி-யமை பற்றிய அனுபவங்களை அவர் அவுஸ்திரேலியா தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் சார்பில் கானா பிரபாவுக்கு வழங்-கிய செவ்வியில் இவ்வாறு கூறுகிறார்.

''உண்மையில் இயக்குனர் பாலுமகேந்திராவுக்கும் எனக்குமான நட்பே இந்த வாய்ப்புக்குக் காரணம். வெற்றிமாறன் பாலுமகேந்திராவின் மாணவன். என்னுடைய கவிதைகளூ டாகத்தான் வெற்றிமாறனுக்கு என்னைத் தெரியும்'' என்று கூறும் ஜெயபாலன்,

''இந்தப் படத்துக்கான கலந்துரையா-டலின்போது வெற்றிமாறன், 'சிங்கம் மாதிரி ஓராளைத் தேடுறம். நீங்க நடிக்கிறீங்களா?' என்று என்னைக் கேட்டார். எனக்கு வாழ்க்கை முழுக்க அட்வென்சர்ஸ்தான். இதுவும் அப்படியொன்று என்று ஏற்கிறேன். உங்களால் முடியுமா-னால் என்னை நடிக்க வையுங்கள். முடியாட்டி என்னை விட்டுவிடுங்கள் என்றேன்'' என்று முடிக்கிறார்.

''87 ஆம் ஆண்டு திருமணம் ஆனதிலிருந்து எனது மனைவிக்கு முன் நடித்த அனுபவம் உண்டு என்று சொன்னபோது, அது போதும் என்று வெற்றிமாறன் கூறி ஆரம்பித்ததுதான் இந்தப் பயணம்'' என்கிறார் அவர்.

உண்மையில் தமிழ் சினிமாவானது, உலகத் தமிழ் சினிமாவாக மாறும் உலகமயமாக்கலின் ஒரு பரிமாணமே கவிஞர் ஜெயபாலனின் சினிமா வாய்ப்பு.

(தொடர்ச்சி 18ம் பக்கம்) ➤

**யாத்தே யாத்தே யாத்தே என்னாச்சோ..?**

**அட வெள்ளாவி வைச்சுத்தான் வெளுத்தாங்களா இல்ல, வெயிலுக்குக் காட்டாம வளர்த்தாங்களா...**

ஜி.வி.பிரகாஷின் இசையில் உருவான இந்தப் பாடல், தனுஷின் ஆடுகளம் படத்தில் வருகிறது.

சேவல் படமோ அல்லது சேவற்-சண்டைப் படமோ இல்லை. முழுக்க முழுக்க சேவற்சண்டை மனிதர்கள் பற்றிய படம் இது!

இரண்டு கால் சேவல்கள் சீறியும் கீறியும் கிழித்துக்கொள்ளும் சண்டைக்களத்தின் பின்னணியில்.... இரண்டு கால் மனிதர்கள் கோபமும் துரோகமுமாக அழித்துக்கொள்ளும் நிஜக்களம்தான் ''ஆடுகளம்''



வெற்றிமாறனின் இரண்டாவது திரைப்படம்.... நாயகன் தனுஷ் (கருப்பு) மெலிந்த உடலில் பொருத்-தமான உடல் மொழி, முகபாவனை-கள்.... என அசத்தியிருக்கிறார்.

படத்தின் இரண்டாம் நாயகன் கிஷோர் (துரை) நேசமும் துவேஷ-மும் என மாறி மாறி அபாரமாக ஆடியுள்ளார் என்றே சொல்லலாம்.

இத்திரைக்கதையின் ஆதார




மூலமே, ஈழக்கவிஞர் ஜெயபாலன் மற்றும் ராதாரவி இருவரும் சேர்ந்து உயிர்கொடுத்திருக்கும் (ஆம், நடித்தது ஜெயபாலன் என்றாலும், குரலுக்குச் சொந்தக்காரன் நம்ம முன்னால் வில்லன் ராதாரவிதான்) பேட்டைக்காரரின் பாத்திரம். ஆங்கிலோ இந்தியப் பெண்ணாக வலம் வரும் நாயகி டாப்ஸி அழகுக்கு அழகு!

திரைக்கதையில் திருப்பங்கள் எல்லாமே இயல்பாய் தோன்றுகின்-றன. ஒவ்வொரு கதாபாத்திரத்தின் நடவடிக்கைக்கும் காரணங்கள் அழகாய் காட்சிகளின் மூலம் சொல்லப்பட்டிருக்கின்றன. அதிலும், சூழ்நிலைகளையே வில்லனாக்கும் யுக்தி அருமையாக பயன்படுத்தப்-பட்டுள்ளது.


கதைக்களத்தின் மண்ணையும், மனிதனையும் இடம், பொருள், காலம் பார்த்து கருப்பொருள் சிதையாமல் படைத்திருக்கிறார் வெற்றிமாறன்!

ஆடுகளம் பார்ப்பவர்களின் மனதில் நிஜக்களம்!



# ஜெயபாலன்: ஒரு பன்முக ஆளுமை!

''யாழ் நகரில் என் பையன்
கொழும்பில் என் பெண்டாட்டி
வன்னியில் என் தந்தை
தள்ளாத வயதினிலே
தமிழ் நாட்டில் என் அம்மா
சுற்றம் பிராங்பேட்டில்
ஒரு சகோதரியோ பிரான்ஸ் நாட்டில்
நானோ
வழி தவறி அலாஸ்கா வந்து விட்ட
ஒட்டகம் போல்
ஒஸ்லோவில்
என்ன நம் குடும்பங்கள்
காற்றில்
விதிக்குரங்கு கிழித்தெறியும்
பஞ்சுத் தலையணையா?'



என்று, ஈழத்தமிழர் உணர்வுகளைத் தன் கவிதைகளால் வாழ்ந்து கொண்டிருக்கும் நம்மூர் நாயகன் வ.ஐ.ச.ஜெயபாலன், இப்போது தமிழ(கத்தவ)ர்களால் சிறந்ததொரு திரைக்கலைஞர் என்றதொரு அவதாரமும் எடுத்திருக்கின்றார்.

கோடம்பாக்கம், காதல் டாட் கொம், பேசாத கண்ணும் பேசுமே ஆகிய திரைப்படங்களைத் தயாரித்த நம்மூர்க்காரன் செவ்வேள், பனைமரக்காடு என்ற திரைப்படத்தை இலங்கையிலேயே தயாரிக்க எடுத்திருக்கும் முயற்சிபற்றி நாம் சிலாகித்துக்கொண்டிருக்க, தமிழக மண்ணிலேயே நின்று 'ஆடி'க் காட்டியிருக்கிறார் ஜெயபாலன்.

உடுவிலில் பிறந்து கிளிநொச்சியிலே வளர்ந்த கவிஞர் ஜெயபாலன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பொருளியல் சிறப்புப் பட்டதாரி ஆவார். இவர் நல்ல கவிஞர் மாத்திரமல்ல, சிறுகதை எழுத்தாளரும், சிறந்த ஆய்வாளரும்கூட.

இவரது முதல் நூல் 1984ல் வெளியாகிய 'தேசிய இனப் பிரச்சினையும் முஸ்லீம் மக்களும்' என்பதாகும். 'சூரியனோடு பேசுதல்', 'நமக்கென்றொரு புல்வெளி', 'ஈழத்து மண்ணும் எங்கள் முகங்களும்', 'ஒரு அகதியின் பாடல்', 'பெருந்தொகை', 'தோற்றுப் போனவர்களின் பாடல்', 'சேவல் கூவிய நாட்கள்', 'அவளது கூரையின்மீது நிலா ஒளிர்கிறது' ஆகிய நூல்கள் இவரால் எழுதப்பட்டனவாகும்.

இவைதவிர அரசியல் நாடகப் பிரதிகளையும், பல இசைப் பாடல்களையும் ஜெயபாலன் எழுதியுள்ளார்.

இவரது கவிதைகள் இலங்கை கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினர் வெளியிட்ட தமிழ்ப் பாடப் புத்தகங்களிலும் இடம்பெற்றுள்ளன. கவிஞர் வைரமுத்து தொகுத்த "எல்லா நதியிலும் என் ஓடம்" என்னும் கவிதைத் தொகுதியிலும் இவரது கவிதைகள் இடம்பெற்றுள்ளன.

**இல்லறம்**

ஆற்றங்கரையில்
இன்னமும் தோற்றுப்போகாத மரம்
நான்.
இன்று தெளிந்து போய்
புல்லும் சிலம்பாமல் நடக்கிறது
காட்டாறு.
விடியலில் இருந்தே ஒளியைக் கசக்கி
ஹோலிப் பண்டிகைக் குறும்போடு
வண்ணங்கள் வீசி
தொட்டு தொட்டுச் செல்கிறது அது
நேற்று வெறி கொண்டாடியது
தானல்ல என்பதுபோல.

எனது கன்றுகள்
முளைத்தெழுகிற நாள்வரையேனும்
கைவிட்டகலும் வேர்மண் பற்றி
பிழைத்திருக்கிற போராட்டத்தில்
நேற்று அடைந்த விரக்தியை
மறந்தேன்
அது நானல்ல என்பது போல.

நேற்றைய துன்பமும் உண்மை.
நாளைய பயமோ அதனினும்
உண்மை
எனினும் இன்றில் மொட்டவிழ்கிறதே
வாழ்வு
சிறகசைக்கிறதே வண்ணத்துப்
பூச்சிகள்
துள்ளி மகிழுதே பொன்மீன்கள்

நமது அன்றாட மறதிக்குப் பரிசுதானே
இந்த நட்பும் வாழ்வும்!


(வ.ஐ.ச.ஜெயபாலன் கவிதைகள்
தொகுப்பிலிருந்து)


**- மகா யசோ**



# கணி-நீ

**எதிர்கால இலட்சியத்தை – அதற்கான கல்வியை**









## மைக்ரோசொப்ட் சேர்பேஸ் 2.0

கணினிக்கும் மனிதர்களுக்குமான நெருக்கத்தை அதிகரிக்க மைக்ரோசொ·.ப்ட்டினால் உருவாக்கப்பட்டுள்ளதுதான் நீங்கள் மேலே காணும் Surface 2.0 (3 சதுர அடி தொடுதிறனுள்ள கணினி இயங்குதளம்)

Samsung நிறுவனத்தின் அதிஉயர் துல்லிய காட்சித்திரையுடன் கூடிய கணினி இயங்குதளமான இது 360 டிகிரி கோணத்தில் ஒளிக்கலவைகளை காட்சிப்படுத்தவல்லது. மேலும் 50க்கும் மேற்பட்ட தொடுதல் உள்ளீட்டுகளைப் பெற்று செயல்படுத்தக்கூடிய வல்லமை கொண்டது.

சாதாரண கணினி மூலம் செய்யும் அனைத்து விடையங்களையும் விசைப்பலகை மற்றும் சுட்டியின் துணையின்றி இதில் செய்து முடிக்கலாம்.



# கணினி அறிமுகமும் அடிப்படைக்கட்டமைப்பும்


## System Software (கட்டமைப்பு மென்பொருள்)

கணினியின் Hardware பாகங்களை பயனுள்ளதாக்குகின்ற செய்நிரல்களின் தொகுப்பு மென்பொருள்கள் இயங்குவதற்கான அடித்தளத்தினையும் வழங்குவது System Software எனப்படும்.

கணினியை ஒழுங்கமைத்துக் கட்டுப்படுத்துதல், Hardware பாகங்களை பயனுள்ளதாக்குதல், தரவுகளை சேமிப்பு ஊடகங்களில் பதித்தல், கோப்புக்களை ஒழுங்கமைத்தல், அச்சடிக்கும் இயந்திரத்திற்கு அச்சடிப்பிற்காய் தகவல்களை அனுப்புதல், பயன்பாட்டாளர் தரும் கட்டளைகளை கணினியின் மொழிக்கு மொழிபெயர்த்து மாற்றுதல், மற்றும் மேலதிக கருவிகளுடன் தொடர்புகளை வைத்திருத்தல் போன்ற பல்வேறுபட்ட செயற்பாடுகளை செய்யப் பயன்படும் செய்நிரல்களின் தொகுப்பு System Software ஆகும்.


இது Loaders, Linkers, Utility software, Desktop environment / Graphical user interface, Shells, BIOS, Hypervisors, Boot loaders, Database Management Systems (SQL, NoSQL) போன்ற பலவகையான நிகழ்ச்சித் திட்டங்களை உள்ளடக்கியதாகும். இவற்றினைப் பற்றி பிறிதொரு முறை விரிவாகக் காணலாம்.

## Operating System (இயக்கத்தொகுப்பு)




கணினியின் பாவனையாளர்களும் மென்பொருள்களும் வேலை செய்வதற்கான அடிப்படை இயங்கு சூழலை ஏற்படுத்திக்கொடுக்கும் செய்நிரல்களின் தொகுப்பே Operating System.

வன்பொருள்களை அதாவது ஞாபகசக்தி மற்றும் சேமிப்பகம் என்பவற்றை கட்டுப்படுத்துதல், செய்யவேண்டிய செய்கைகளை கணினியின் பிரதான சேமிப்பகத்தினூடு செயற்படுத்துதல், பிரயோக மென்பொருளின் செயற்பாட்டிற்கு உறுதுணையாக நிற்றல் மற்றும் ஏனைய அனைத்துச்செய்நிரல்களும் நின்று இயங்கும் முக்கிய பெருந்தளமாக விளங்கும் செய்நிரல்களின் ஒரு பெருந்தொகுப்பே Operating System எனப்படும்.







**E.g.: Windows, Dos, Unix, Linux, OS/2**

## Device Drivers (இயக்கும் கருவிகள்)

கட்டமைப்பு மென்பொருளானது ஒரு மேலதிக கருவியை கட்டுப்படுத்த கணினிக்கு உதவி செய்தலை இயக்கும் கருவிகள் என அழைக்கப்படுகிறது.

## Utilities (துணைக்கட்டமைப்புத் தொகுதி)

துணைக்கட்டளைத் தொகுதியானது கட்டமைப் மென்பொருளின் மற்றொரு சிறு வகையாகும் இத்துணைக் கட்டளைத் தொகுதியானது பயன்பாட்டாளருக்கும் கணினியின் வன்பொருளுக்குமான தொடர்பு மற்றும் கட்டுப்பாட்டை ஏற்படுத்தும் இயக்கத் தொகுதியுடனான வாக்குவாதத்திற்காகப் பயன்படுத்தப்படுகிறது. சில துணைக்கட்டளைத் தொகுதிகள்



இயக்கத் தொகுப்புடன் இணைக்கப்பட்டிருக்கும். இவை தரவுகளைச் சேமிப்பதற்காக சேமிப்புத்தட்டுக்களை தயார்படுத்துதல், கோப்பு சம்பந்தமான தரவுகளை வழங்குதல் மற்றும் ஒரு சேமிப்பு ஊடகத்திலிருந்து மற்றொரு சேமிப்பு ஊடகத்திற்கு பிரதியெடுத்தல் போன்ற வேலைகளை செய்ய ஏதுவாகிறது. இவ்வகை மென்பொருட்கள் பிரத்தியோகமாக பல நிறுவனங்களால் வெளியிடப்படுகின்றன உதாரணமாக Norton Utilities எனப்படும் மென்பொருள் மேற்கூறிய செய்கைகளை செய்வதற்கென மிகவும் பிரபல்யம் வாய்ந்ததாக இருக்கின்றது.

## Computer Programming Language

**(கணினி கட்டளைக் கோர்வை)**

பல தொடர் கட்டளைகளைப் பயன்படுத்தி குறிப்பிட்ட பணியைச் செய்து முடிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் அறிவுறுத்தல்கள் கணினி மொழி எனப்படும்.

## Program (செய்நிரல்)

கணினி செய்நிரல் உருவாக்குனரால் கணினி மொழியினை பயன்படுத்தி உருவாக்கப்படும் அறிவுறுத்தல்களின் தொடர்.

**இயக்கத்தொகுப்பின் செயற்பாடுகள் சில**

I.வன்பொருளைக் கட்டுப்படுத்தி மென்பொருளின் கட்டளைகளை பயனுள்ளதாக்குகின்றது.

II.தரவுகளை சேமிக்கக்கூடியவாறு சேமிப்பு ஊடகங்களை ஒழுங்கமைக்கிறது.

III.சேமிப்பு ஊடகங்களில் தரவுகளை பதிதல், எடுத்தல் போன்ற செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துகிறது.

IV.பிரயோக மென்பாகத்தின் செயற்பாட்டைக் கட்டுப்படுத்துகிறது.

**கணினியில் பிரதானமாகப் பயன்படுத்தப்படும் கணினி மொழிகள்:**

1. **Machine Language**
2. **Assembly Language**
3. **High Level Language**
4. **Medium Level Language**

## (I) Machine Language

1,0 ஆகிய இரு இலக்கங்களை மட்டுமே இம்மொழி கொண்டிருக்கும். ( 1.0 இனையே இருமக்குறிமுறை (Binary Codes) என அழைக்கப்பட்டிருக்கிறது) இது கணினியின் அடிப்படை மொழியாக விளங்குவதோடு கணினி இதை மிக இலகுவாகவும் விளங்கிக் கொள்ளும்.

## (II) Assembly Language

இது விளங்குவதற்கு கடினமானகுறியீட்டு வடிவில் அமைந்த மொழியாகும். இம் மொழியில் தயாரிக்கப்பட்ட செய்நிரல் (Program)களை கணினி நேரடியாக ஏற்றுக்கொள்ளமாட்டாது. எனவே (Binary Code) இருமக்குறிமுறை இற்கு மாற்றப்படல் வேண்டும். இம்மாற்றத்தினை செய்வதற்கு உற்பத்தியாளர்களால் தயாரிக்கப்படும் Assembler எனும் மொழிபெயர்ப்பு செய்நிரல் (Translator Program) பயன்படுத்தப்படுகின்றது.

## (III) High Level Language

Machine Language மற்றும் Assembly Language ஆகிய இவ்விரண்டு மொழிகளும் விஞ்ஞானிகளாலும், கணினி பற்றிய அதிக கல்வியறிவு கொண்டவர்களாலும் மட்டுமே பயன்படுத்த முடிந்தது. ஆனால் High Level Languageஐ சாதாரண பாமர மக்களாலும் இலகுவாக விளங்கிக்கொள்ள முடியும். மற்றைய இரண்டு மொழிகளில் பல வரிகளில் கொடுக்கப்படவேண்டிய அறிவுறுத்தல்களை இம்மொழியில் ஒரு சில வரிகளிலேயே கொடுக்கலாம். High Level Language சிலவற்றைக் கவனிக்கவும்.

Java, Visual Basic,C,Oracle, C++, Pascal, Etc.




ஆனாலும் High Level Language இல் தயாரிக்கப்பட்ட செய்நிரல் (Program)களை கணினி நேரடியாக ஏற்றுக்கொள்ள மாட்டாது. எனவே, இதனையும் இருமக்குறிமுறை (Binary Code) இற்கு மாற்றப்படல் வேண்டும். இம்மாற்றத்தினைச் செய்வதற்கும் உற்பத்தியாளர்களால் உருவாக்கப்படுகின்ற இரண்டு விசேட மொழிபெயர்ப்பு செய்நிரல்கள் Translator Programs பயன்படுத்தப்படுகின்றன.

**அவை:**

1. Compiler (மொழிமாறி செய்நிரல்)
2. Interpreter (மொழிமாற்றி செய்நிரல்)


5

கணினி மொழியில் இவ்விரண்டின் செயற்பாடுகள் குறித்து அடுத்த இதழில் விரிவாகக் காண்போம்.

**- சு.நேதாஜி**


வேர்ட் 2003ஐப் பயன்படுத்தி வெவ்வேறான முறைகளில் ஒளிப்படங்களை ஆவணத்திற்கு கொண்டு வருவது பற்றி கடந்த இதழில் பார்த்தோம். அதனைத் தொடர்ந்து Insert ⟶ Picture மெனுவில் மீதமுள்ள கட்டளைகளான Word Art, Organization Chart, Chart போன்றவற்றை சிறப்புற பயன்படுத்துவது பற்றி காணலாம்.

# புதியவர்களுக்கு Microsoft Word2003




Word Art கட்டளையின் மூலம் ஒளிப்படங்கள் மற்றும் வர்ணக் கலவைகளை எழுத்துருக்களின் உள்ளே பயன்படுத்தி முப்பரிமாணத் தோற்றத்தை ஏற்படுத்த முடியும். இதன் மூலம் ஆவணங்களில் வர்ணஜாலம் படைப்பது எப்படி எனக் காண்போம்.

வேர்ட் 2003ல் ஒரு கோப்பினைத் திறந்து கொள்ளுங்கள். பின் File Menuல் Open கட்டளையை கொடுப்பதன் மூலம் கிடைக்கும் Option கீழ்க்கண்டவாறு அமைந்திருக்கும்.




இதன் மூலம் நாம் ஏற்கனவே சேமித்து வைத்துள்ள கோப்புகளை தேடிப்பெற முடியும். உங்களுக்கு வேண்டிய கோப்பு ஒன்றை தெரிந்துகொண்டு Open கட்டளையைச் சுட்டுங்கள். திறந்து கொள்ளும் ஆவணத்தில் நாம் Word Art செய்ய தொடங்குவோம். தேவையான இடத்தில் சுட்டியைக் கொண்டு கிளிக் செய்து கொள்ளுங்கள். இப்போது Insert Picture ⟶ WordArt கட்டளையை கொடுக்கும்போது வேர்ட்டில் முன்கூட்டியே உருவாக்கப்பட்ட 3D எழுத்துருக்கள் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் (படம்:2). அவற்றில் ஏதேனுமொன்றைச் சுட்டி மூலம் தெரிவுசெய்யும்போது (படம்: 3) காட்டப்படுவது போன்ற கட்டளை தோன்றும்.



(படம்:2)

அதில் நமக்குத் தேவையான விடயத்தைத் தட்டச்சு செய்து Ok கொடுக்கும்போது, நாம் தெரிவுசெய்த Word Art ஐப் போன்று தட்டச்சு செய்தவை மாறியிருக்கும். (படம்:4) அதேபோல் நமக்குத் தேவையான எழுத்துக்களை மாதிரியில் தெரிவு செய்து பயன்படுத்திக் கொள்ளலாம்.




(படம்:3)

(படம்:4)






Do one of the following: To insert a picture from a Web page: Open the Microsoft Office Word 2003 document. From the Web page, drag the picture you want into the Woinsert a linked picture from a Web page: Open the Word documOn the Web page, right-click the picture, and tIn the Word document, right-click where you want to insert the picture, and then click Paste.


அடுத்து உள்ள Organization Chart மற்றும் Chart ஆகியன வெவ்வேறு விதமான வரைபுகளை எமது தரவுகளுக்கு ஏற்றாற்போல் அமைக்க உதவுகிறது. முதலாவதாக உள்ள Organization Chartஐ தெரிவு செய்யும்போது கிடைக்கப்பெறும் துணை மெனுவில்




Insert Shape, Layer, Select, Style மற்றும் Zoom ஆகியன அடங்கியிருக்கும். Insert Menu இலுள்ள








Organization Chart ஐ தெரிவு செய்யும் போது Drawing Box உடன் ஒரு Organization Chart கட்டளைத் தொகுப்பும் தோன்றும். முதலாவதாக உள்ள Insert Shape ஐ சுட்டும் போது தேர்வுசெய்த வரைபில் மேலதிகமாக ஒரு கட்டம் சேர்க்கப்படும். இது எல்லா வரைபு வடிவங்களுக்கும் பொருந்தும்.





Insert Shapeஇல் முதலாவதாக உள்ள Subordinate கட்டளையும் இதைத்தான் செய்கிறது. Assistant





கட்டளையானது வரைபில் புதிதாக ஒரு கிளையினை உருவாக்க உதவுகிறது. அதேபோல் Co worker கட்டளையானது நாம் தெரிவு செய்துள்ள கட்டத்தில் அருகில் புதிதாக ஒரு கட்டத்தினை உருவாக்க பயன்படுகிறது. Layout கட்டளையானது வரைபு எப்படி ஒழுங்கமைய வேண்டும் என்பதனை கட்டுப்படுத்துகிறது.


Standard, Both Hanging, Left Hanging, Right Hanging, Layout ஆகியன முறையே பெயர்களுக்கு ஏற்றாற்போல்




சமமாக , இடது மற்றும் வலது பக்கங்களில் வடிவமைக்க உதவுகிறது. Auto Layout கட்டளை




நமது விருப்பத்திற்கு ஏற்றாற்போல் வடிவங்களை மாற்றியமைக்க உதவும்.




அடுத்ததாக உள்ள Select தெரிவானது நமது வரைபுகளை தேவைகளின் அடிப்படையில் தெரிவு செய்யப் பயன்படுகிறது. இதிலுள்ள Level ஆனது முதன்மை தலைப்புகளைத் தெரிவு செய்யவும், Branch முதன்மை தலைப்புகளிலுள்ள கிளை அல்லது உப தலைப்புகளைத் தெரிவு செய்யவும் உதவும். All Connecting lines ஆனது வரைபுகளில் உள்ள அனைத்து இணைப்புகளையும் தெரிவு செய்ய உதவுகிறது. Auto Format கட்டளையானது Word 2003 இல் ஏற்கனவே தயார் நிலையிலுள்ள வடிவமைப்புகளை பயன்படுத்தி மாற்றங்களை செய்வதற்கு உதவுகிறது. Text Wraping பற்றி பிற்பகுதியில் காணலாம். ■

**- அ.பெஸ்ரியன்**

தெளி-தீ தகவல் தொழில்நுட்ப இணைப்பிதழ்

# கணினி
## சந்தேகங்கள் - தீர்வுகள்

**Q** இமேஜ் (image) மற்றும் டெக்ஸ்ட் (text) ஆகியவற்றின் அடிப்படை வேறுபாடு என்ன?

**A** இமேஜைப் பொறுத்தவரையில் திரையில் உள்ள ஒவ்வொரு புள்ளியும் (Dot) கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும். ஒரு புள்ளியில் என்ன நிறம் இருக்கிறது என்பது முக்கியம். ஒவ்வொரு புள்ளியையும், எண்களால் கோடிங் (Coding) செய்வார்கள். VGA திரை என்பது 640X480பிக்சல்களைக் கொண்டது என்பது உங்களுக்குத் தெரியும். இந்தத் திரையிலுள்ள ஒரு இமேஜைக் குறிப்பிட 640X480 எண்கள் அதாவது 307,200 எண்கள் தேவைப்படுகிறது.

டெக்ஸ்டை பொறுத்தவரையில், ஒவ்வொரு எழுத்தும் ஒரு எண்ணால் குறிப்பிடப்படும். மேற்கூறிய VGA திரையில் 25 வரிகளும் ஒவ்வொரு வரியில் 80 எழுத்துக்களும் இருப்பதாக வைத்துக்கொண்டால், திரையிலுள்ள டெக்ஸைக் குறிப்பிட 25X80 எண்கள் அதாவது 2000 எண்கள் போதுமானது.

சுருக்கமாகக் கூறினால், இமேஜில் புள்ளிக்கு எண்ணையும், டெக்ஸ்டில் எழுத்திற்கு எண்ணையும் கோடிங் செய்யப் பயன்படுத்துவார்கள்.

**Q** என்னுடைய கணினியில் A ட்ரைவ் வழியாக பூட்டிங் செய்து C ட்ரைவிற்கு செல்ல முடிகிறது. C வழியாக பூட்டிங் ஆக என்ன செய்யலாம்?

**A** கணினி பூட் ஆகி, நினைவகப் பரிசோதனை நடப்பதின் அடையாளமாக திரையில் எண்கள் வேகமாக ஓடிக் கொண்டிருக்கும். அப்பொழுது, Del கீயை அழுத்தி செட்டப்பை அழையுங்கள். அதில் வரும் Advanced CMOS Setup என்ற மெனுவில் Booting Sequence : A:C என்றிருப்பதை C:A என்று மாற்றி விட்டால்போதும். இனிமேல் C ட்ரைவ் வழியாக பூட்டிங் நடைபெறும்.

**Q** கணினித்திரையினால் கண்கள் கெட்டுவிடும் வாய்ப்பு உள்ளதா? பாதிப்பை எப்படித் தவிர்க்கலாம்?

**A** தரமான கணினித்திரை வாங்கவேண்டும். இதிலிருந்து வெளிப்படுகிற கதிர்கள் குறைவாக இருக்கவேண்டும். கணினியை இயங்கச் செய்த பின்பு உங்கள் கையை கணினித்திரைக்கருகே கொண்டு செல்லுங்கள். மயிர்கள் விறைப்பாக நிற்கின்றனவா? உடனடியாக கணினித்திரையை மாற்றுங்கள்.

ஸ்கிரீன் கார்ட் (**Screen Guard**) கடைகளில் கிடைக்கின்றது. அதை வாங்கி கணினித்திரைக்கு முன்பு பொருத்துங்கள். வெளிப்படுகிற கதிர்கள் உங்கள் கண்களைத் தாக்குவதைக் குறைக்க முடியும்.

உங்கள் கண்ணுக்கும், கணினித்திரைக்கும் இடையில் 1.5 அடி தூரம் இருக்கவேண்டும். மிகுந்த உயரத்திலோ அல்லது தாழ்வாகவோ கணினித்திரை இருந்தால் கழுத்து வலிக்கும். கண்ணுக்கும் கூடாது.

**Q** என் கணினியில் 80GB ஹார்ட்டிஸ்க் உள்ளது. 500GB ஹார்ட் டிஸ்க்கையும் இதனுடன் சேர்த்துப் பயன்படுத்த விரும்புகிறேன். எப்படி இணைப்பது?


**A** ஏற்கனவே உள்ள ஹார்ட் டிஸ்க்கை மாஸ்டர் ஹார்ட் டிஸ்க்காகவும், புதிய ஹார்ட் டிஸ்க்கை, ஸ்லேவ் ஹார்ட் டிஸ்க்காகவும் மாற்றவேண்டும். இதற்கு ஹார்ட் டிஸ்க்குகளின் ஜம்பர்களை மாற்றி அமைக்கவேண்டும். ஜம்பர்கள் எவ்வாறு இருந்தால் மாஸ்டர் அல்லது ஸ்லேவ் என்ற விபரம் ஹார்ட் டிஸ்க்கில் எழுதப்பட்டிருக்கும்.

**கணினித் திரைக்கருகில் கையைக் கொண்டுபோனால் மயிர்க்கூச்செறிகிறதா? உடனடியாகக் கணினித்திரையை மாற்றுங்கள்!**

கணினியைத் திறந்து பாருங்கள். ஏற்கனவே உள்ள ஹார்ட் டிரைவ் கேபிளில் ஒரே ஒரு டிஸ்க்கை மட்டும்தான் இணைக்கமுடியும் என்றால், இரண்டு ஹார்ட் டிஸ்க்குகளை இணைப்பதற்கான கேபிளை விலைக்கு வாங்கவேண்டும்.

**உங்கள் கணினி சந்தேகங்களை எழுதி Sikaramthudu@gmal.com அனுப்புங்கள்.**





# ஒரேநேரத்தில் பல கணக்குகள்

இணைய உலாவிகள் தங்கள் பயனாளர்களை கவரும் விதத்தில் போட்டிபோட்டுக் கொண்டு புதுப்புது வசதிகளை வழங்கிய வண்ணம் உள்ளன. பல காரணங்களுக்காக நாம் ஒன்றுக்கு மேற்பட்ட இணையத்தள முகவரிகள் மற்றும் சமூக வலைப்பின்னல் தளங்களில் பயனாளர் Account வைத்திருக்கிறோம்.

ஆனால் ஒரே நேரத்தில் இரண்டு Accountsஐ திறப்பது என்பது சிரமமான காரியம். அதற்காக நாம் ஒவ்வொரு Accountஐயும் வேறுவேறு இணைய உலாவிகளில் திறக்கவேண்டியிருக்கும். இதற்கென .:.பயர்பொக்ஸ் ஒரே நேரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட Accountsஐ திறக்க ஒரு புதிய இணைய நிகழ்ச்சித்திட்டமான (Addon) Multifox ஐ அறிமுகப்படுத்தியுள்ளது.

இதை எவ்வாறு நிறுவுவது என பார்க்கலாம்.


**step 1:** http://br.mozdev.org/multifox/ இணையத்தளத்திற்குச் சென்று Multifoxஐ click செய்து நிறுவிக்கொள்ளுங்கள். நீங்கள் install செய்ய கிளிக் செய்யும்போது Allow Popup ஒன்று தோன்றும். அதை கிளிக் செய்யுங்கள் (படம்:1)

**step 2:** இப்போது Firefoxஐ மீளத்திறவுங்கள் (Restart).

**Step 3:** இப்போது புதிதாக திறந்த விண்டோவில் சுட்டி மூலம் வலது கிளிக் செய்து Open in a new identity profile கொடுக்கவும். (படம்:2)

**Step 4:** ஒன்றுக்கு மேற்பட்ட பயனாளர் Accountஐ இப்போது திறக்கலாம்.

**Step 5:** நீங்கள் இவ்வாறு திறந்த புதிய விண்டோவில் வலப்பக்க மூலையில் நீலநிற சதுரக்குறியீட்டைக் காணலாம்.




(படம்:1)





**Mozilla Firefox பயன்படுத்துபவரா நீங்கள். உங்கள் கணினியின் வேகத்தை அதிகரிக்க இதோ ஒரு எளிய Tips:**

இணையஉலாவியை Minimized செய்து வைத்துக்கொண்டால் RAM (Random Access Memory)ல் இருந்து எடுத்துக் கொள்ளப்படும் நினைவக அளவு குறைக்கப்பட்டு நாம் இணையத்தில் வேகமாக வேலைகளைச் செய்ய முடியும்.


**எப்படிச் செய்வது?**

Step 1: வின்டோஸ் இயங்குதளத்தில் Firefox இணைய உலாவியை திறந்து கொள்ளுங்கள்.


Step 2: Address Barல் கீழ்க்கண்டவாறு தட்டச்சு செய்யுங்கள் about:config




கீழ்க்கண்டவாறு எச்சரிக்கை செய்தி ஒன்று தோன்றும். I Will Be Careful, I Promise கட்டளையினை கொடுத்து தொடர்ந்து முன்னேறுங்கள்




Step 3: கிடைக்கப்பெறும் விண்டோவில் உள்ள Filter பகுதியில் கீழ்க்கண்டவாறு தட்டச்சு செய்யுங்கள். config.trim_on_minimize இதன் நிரந்தர மதிப்பாக Minimiz-ed Setting மாறிவிடும்.




பிறகென்ன? தொடர்ந்து விளையாட வேண்டியதுதானே?


# PHOTO SHOP இல் எடிட்டிங்

கடந்த இதழில் Pen tool ஐப் பயன்படுத்தி எவ்வாறு ஒளிப்படத்திலிருந்து தேவையற்ற பகுதிகளை நீக்குவது மற்றும் Custom Shape Tool பற்றிய அறிமுகம் ஆகியவற்றைப் பார்த்தோம். தொடர்ச்சியாக இந்த Tool ஐக் கொண்டு எவ்வாறு உருக்களை வரைவது என்பது பற்றிப் பார்ப்போம்.


போட்டோஷொப் 7.0 ல் வெவ்வேறு உருக்களை எளிதில் வரைவதற்காக பயன்படுவது Custom Shape Tool ஆகும். ஆவணத்தை தேவைக்கேற்ற அளவில் திறந்துகொள்ளுங்கள். Custom Shape Toolல் ஏதேனும் ஒன்றை சுட்டி மூலம் தெரிவு செய்யும்போது move Tool ✚ வடிவம் போன்று மாற்றமடையும். இப்போது Option Barல் Shape சுட்டுங்கள். இப்போது பல வித





வடிவங்களுடன் கூடிய Drap down box ஒன்று தோன்றும். இதில் நீங்கள்



விரும்பும் ஒரு வடிவத்தினை சுட்டியைக் கொண்டு தெரிவுசெய்து திறந்த ஆவணத்தில் ஏதேனும் ஓர் இடத்தில் சுட்டியை வைத்து கீழ் மற்றும் அகலவாக்கில் இழுக்கும் போது தெரிவு செய்த வடிவமானது கோட்டோவியமாக





உருவாகும். இதை Ctrl + Enter கொடுத்து தெரிவு





செய்யும் போது கோட்டோவியமானது உயிர்பெற்று தொடர்கோடாக ஓடிக் கொண்டிருக்கும்.

இப்போது Layer Menu இல் New ⟶ Layer கட்டளை-





யைக் கொடுத்து புதிய Layer ஒன்றை உருவாக்க




(படம் 1)

வேண்டும். பின் லேயருக்குத் தேவையான பெயர் மற்றும் வண்ணம் போன்றவற்றை கொடுக்க முடியும். ( Layer என்பது நாம் போட்டோஷொப்பில் செய்யும்



ஒவ்வொரு வேலைகளையும் தனித்தனியாக கொண்டு





வந்து வேண்டியவாறு தெரிவுசெய்து ஒன்றிணைத்து





பயன்படுத்த உதவுகிறது. Layer Menu பகுதியில் இது பற்றி விரிவாகக் காணலாம்)

(படம் 1) Group With Previous Menu ஆனது தற்போதுள்ள லேயருடன் தொடர்ந்து வரும் லேயர் சேர்ந்திருக்க உதவுகிறது. Opacity என்பது நாம் உருவாக்கும் புது லேயரில் எந்த அளவுக்கு ஒளி ஊடுருவ வேண்டுமென்பதைக் குறிக்கிறது.





தேவையான விடயங்களைத் தெரிவுசெய்து பின் Ok கட்டளையை சுட்டும்போது புதிய Layer ஒன்று Layer Palletல் உருவாகும். இதில் உள்ள கண் போன்ற அமைப்பிலுள்ள கட்டளையானது நாம் வேலை செய்யும் இடத்தில் உள்ள Layers காட்சிப்படுத்தப்பட வேண்டுமா



(படம் 2)

இல்லையா என்பதை கட்டுப்படுத்துகிறது.



இப்போது Edit Menu இல் Fill கட்டளையைக் கொடுக்க வேண்டும். (படம் 2) அதில் முதலாவதாக உள்ள Contents Use பகுதியில் Foreground அல்லது Background ஏதேனும் ஒன்றை தெரிவு செய்யலாம். இது Tool Boxல் காணப்படும் முன் அல்லது பின் வர்ணத் தெரிவில் ஏதேனும் ஒரு வர்ணத்தை முன்கூட்டியே தெரிவுசெய்து வைத்திருப்பதை (Edit Menu ⟶ fill பகுதிக்குச்



செல்வதற்கு முன்) பயன்படுத்தி நாம் வரையும் வடிவங்களுக்கு வர்ணத்தை நிரப்புகிறது. இப்போது நாம் foreground நிறமான கறுப்பை பயன்படுத்தி முன் வரையப்பட்ட வடிவத்துக்கு நிறத்தினைக் கொடுப்போம். அது கீழ்க்கண்டவாறு காட்சியளிக்கும்.

5

இதேமுறையில் Edit menu ⟶ Strock கட்டளையின் மூலம் நாம் வரைந்து உள்ள வெவ்வேறான வடிவங்களுக்கு விளிம்புகளை தேவைக்கேற்ற அளவுகள் மற்றும் விதங்களில் கொடுக்க முடியும். இதை எப்படிச் செய்வதென்பதை அடுத்த இதழில் பார்ப்போம் ■

**- அ.பெஸ்ரியன்**

ஆங்கில மொழியே இணையத்தில் மிகவும் பிரபல்யமான மொழியாக இன்றுவரை காணப்படுகிறது. நாளாந்தம் 550 மில்லியனுக்கும் அதிகமான ஆங்கில மொழியைப் பயன்படுத்துவோரே இணையத்தில் உலாவந்து கொண்டிருக்கின்றனர்.







# எதிர்கால இணையத்தின் மொழி என்ன?

ஆனால், கடந்த ஆண்டு மட்டும் சீன மொழியைப் பயன்படுத்தும் 36 மில்லியன் புதிய பயனர்கள் இணையத்துடன் இணைந்துள்ளார்கள். இதனடிப்படையில், சீன மொழியை இணைய மொழியாகப் பாவிக்கின்றவர்களின் எண்ணிக்கை 440 மில்லியனைத் தற்போது தாண்டியிருக்கிறது.

இணையப் பரப்பில் அதிகளவில் பாவிக்கப்படுகின்ற இரண்டாவது பெரிய மொழியாக உருவெடுத்துள்ள சீன மொழியின் இணையப் பரப்பிலான இந்த வளர்ச்சி இனிவரும் காலங்களில் இன்னுமின்னும் கூடிச்செல்லும் என்றே கூறலாம்.

The Next Web தளத்தின் ஆய்வின் படி, இன்னும் ஐந்து ஆண்டுகளுக்குள் இணையத்தில் பாவிக்கப்படும் முதன்மையான மொழியாக சீன மொழி மாறிவிடக்கூடிய சாத்தியங்கள் இருப்பதாக எதிர்வு கூறப்படுகிறது.




எது எப்படியாயினும், மேற்குலக நாடுகளோடு ஒப்பிடுகையில், இணைய உட்கட்டமைப்பு வசதிகளில் சீனா பின்தங்கியிருப்பதும் சுட்டிக்காட்டப்படவேண்டியதே!

இந்தத் தகவல்களைச் சொல்லுமாய்ப் போல் அமைந்த அழகிய தகவல்கள் நிறைந்த வரைபடமொன்றை அண்மையில் The Next Web வெளியிட்டது.

இந்தத் தகவல் உரு பல விடயங்களைச் சொன்னாலும், அது சொல்கின்ற எதிர்காலம் பற்றிய செய்தி அர்த்தமானது.

இணையப்பரப்பில் மொழிகளின் இந்த வளர்ச்சி இன்னும் புதிய பல முன்னேற்றங்களுக்கு வழிகோலும். மொழிகளின் விரிவாக்கத்தால், பல புதிய சிந்தனைகள் தோன்றத் தொடங்கும். அது மட்டுமல்லாமல், பாகுபடின்றி மொழிகள் பற்றி அறிவதற்கான தேட்டம் இன்னும் வளரும்.

**பிரித்தானியாவிலிருந்து தாரிக் -**
www.puthunutpam.com

## ESPN cricinfo

உலகக் கிண்ண கிரிக்கெட் திருவிழா தற்போதுதான் ஆரம்பமாகியுள்ளது. இணைய ஆர்வலர்களுக்கு ஒவ்வொரு போட்டியினதும் நிலவரங்களையும், தகவல்களையும் போட்டி நடந்து கொண்டிருக்கும் போதே அறியத்தருகிறது. www.espncricinfo.com

கூடவே இந்த தளத்திலிருந்து ஒவ்வொரு பந்து பற்றிய நேர்முக வர்ணனையை எழுத்து வடிவில் பார்க்க முடியுமென்பது போனஸ் தகவல்!

இது தவிர உலகின் அனைத்துப் பகுதிகளிலும் நடைபெறும் கிரிக்கெட் போட்டி நிலவரங்களையும் கடந்த காலங்களில் நடைபெற்ற போட்டிகளின் விபரங்கள் பற்றியும், கிரிக்கெட்டில் நிகழ்த்தப்பட்டிருக்கும் சாதனைகள் பற்றியும் அறிய முடியும்.



தகவல்களின் பெருக்கமும் வியாபிப்பும், எதைக் கற்பது, எதை விடுவது என்று தீர்மானிக்க முடியாத அளவுக்கு வேகமாக விரிவடைந்து செல்கின்றது.

பல்கிப் பெருகிப் பரந்து கிடக்கும் இந்த தகவல்களுக்கிடையே எமக்கு தேவையானவற்றை மட்டும் எப்படிச் சுட்டிப்பாகத் தேடி அறிந்துகொள்வ-தாம்?

கணினி - இணைய யுகத்தில் வாழும் எமக்கு இது சுலபமான காரியம். மனிதர்கள் ஞாபகத்தில் வைத்திருக்க முடியாத பல


கையாளவேண்டும். உதாரணமாக, இலங்கைச் செய்திகளை நீங்கள் தேடிப்பெற வேண்டுமானால், வெறுமனே News என்று தட்டச்சு செய்து தேடக்கூடாது. அவ்வாறு செய்யும்போது உலகிலுள்ள எல்லாச் செய்திகளையும் பெறக்-கூடிய இணையத்தளங்களின் பட்டியலே கிடைக்கப்பெறும்.

உங்களுக்குத் தேவையானது, சுட்டிப்பாக இலங்கைச் செய்தி என்பதால், Sri Lankan Tamil News என்று தட்டச்சு செய்து தேடவேண்டும்.

உதாரணமாக, நாய்கள், பூனைகள் தவிர ஏனைய விலங்குகள் பற்றித் தெரிய-வேண்டுமானால், ANIMALS – CATS AND DOGS என்று டைப் செய்து தேடவேண்டும். இலங்கைச் செய்திகளோடு இந்தியச் செய்திகளும் தேவையாயின், SRI LANKAN NEWS + INDIAN என்று டைப் செய்து தேடலாம்.

சரி, தேடும் விடயத்தின் ஆங்கில மொழிப் பதம் புரியவில்லை என்றால்..? define: என டைப் செய்து பின்னர் அர்த்தம் தெரிய-வேண்டிய ஆங்கில சொல்லை

# கற்றலுக்கு கைகொடுக்கும் Google




விடயங்களை விஞ்ஞானம் தகவல் தொழில்நுட்பம் மூலம் மனனம் செய்து கொடுத்திருக்கின்றது. கணினி சேமிப்பகங்களில் சேமிக்கப்பட்டுள்ள தகவல்களில் எமக்குத் தேவையானவற்றைச் சுட்டிப்பாகத் தேடிப்பெற, தேடற்-பொறிகள் கைகொடுக்கின்றன.

**தேடலில் கில்லாடி**

இணையத்தில் தேடற் பொறிகள் பலவிருந்தாலும், கூகிளிற்கு நிகர் கூகிள் தான்!

கூகிள்(Google) என்ற பதம் அதன் அதிகளவு பயன்பாடு காரணமாக ஆங்கில அகராதியில் ஒரு வினைச்-சொல்லாகவே இடம்பிடித்துக் கொள்ளும் அளவிற்கு பிரபல்யம் அடைந்துள்ளது. தேடல் என்பதற்-கான ஒத்தசொல்லாக இது இப்போது பயன்படுத்தப்படுகிறது (Googling).

**தேடலை இலகுவாக்கும் உத்திகள்:**

சொற்களை டைப் செய்து தேடுவது இதில் ஒரு வழிமுறை. நீங்கள் அறிந்துகொள்ளவேண்டிய ஒரு விடயத்தை அதற்கான சரியான ஆங்கிலப் பதத்தை, அல்லது பத வரிசையை டைப் செய்து தேடுவ-தன் மூலம் இலகுவாக அறிந்து கொள்ளலாம்.

ஆனாலும், நீங்கள் தேடும் தகவலை சுட்டிப்பாக, அதிக நேர விரயமின்றி தேடுவதற்கு மேலதிகமாகச் சில உத்திகளைக்

இதிலும் ஒரு சிரமம் உண்டு. Sri-Lankan Tamil News என்று தட்டச்சு செய்து தேடும்போது, தேடல் பொறி, Sri, Lankan, Tamil, News ஆகிய ஒவ்வொரு பதங்கள் மற்றும் அவற்றின் சாத்தியமான அனைத்து சேர்மானங்களுடனும் ( Sri Lankan/ Lankan Tamil/ Tamil News/ Lankan News…) தொடர்பான அனைத்து விடயங்களையும் தேடிப் பட்டியலிடும்.


எனவே, சரியாக இலங்கைத் தமிழ்ச் செய்திகளை மட்டும் பெற வேண்டுமானால் “SriLankan Tamil News” என்று தட்டச்சு செய்து தேடவேண்டும்.

நீங்கள் தேடும் விபரங்களை துல்லி-யமாகத் தேடிப் பெறுவதற்கு AND, OR, NOT போன்ற பதங்களை உரிய முறையில் தட்டச்சு செய்தும் பயன்படுத்தலாம். சொற்கள் மட்டுமன்றி, சில குறியீடுகளையும் தேடலைச் சுட்டிப்பாக்கும் வகையில் பயன்படுத்தலாம். சக, சய (+, -) குறியீடுகள் இதில் முதன்மையானது.

டைப் செய்து அழுத்தினால் போதும் Google அழகாகப் பட்டியலிடும்.


இதைவிட, கூகிள் தேடற்பொறியில் தமிழிலேயே டைப் செய்து தேடவும் முடியும். இதற்கு நீங்கள் யுனிகோர்ட் முறையில் தங்கிளிஸ் பயன்படுத்தி டைப் செய்யவேண்டும்.

அல்லது NHM Writer மென்பொருள் உங்களுக்குக் கைகொடுக்கும். (அதென்ன NHM Writer? சிகரம்தொடு ஒக்டோபர் இதழில் ‘எங்கும் எதிலும் எப்போதுமே தமிழ்’ என்ற ஆக்கத்தைப் பார்வையிட http://www.jaffnatoday.com/?p=5311 என்ற இணையத்தொடுப்புக்குச் செல்லுங்கள்.




## ஹிட்டாச்சி ஃபோன் (W61H):

கறுப்பு வெள்ளை நிறத்தில் 2.7அங்குல திரையையுடைய இந்த தொலைபேசியில் முன்திரை மின்னியல் மை மூலம் செயல்படுகிறது. இதில் நிறுவப்பட்டுள்ள 95 விதமான வடிவமைப்புகளை பயனாளர் தனது விருப்பத்துக்கு ஏற்றவாறு மாற்றியமைத்துக் கொள்ளலாம். மேலும், இணையத்தில் இருந்தும் இன்னும் அதிக வடிவங்களை பதிவிறக்கி பயன்படுத்திக்கொள்ளவும் முடியும்.



இந்த முதற்கட்ட முயற்சி தற்போது ஜப்பானில் மட்டுமே கிடைக்கக் கூடியதாக உள்ளது. எதிர்காலத்தில் மின்னியல் மை மற்றும் மின்னியல் தாள்களைக் கொண்டு அதிகப்படியான செயல்முறைகளைச் செய்ய முடியும் என்று ஹிட்டாச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது. எதையெதையெல்லாம்தான் மின்னியல் மூலம் உருவாக்குகிறார்கள் பார்த்தீர்களா?

## சூரியஒளி லப்டாப் மின்னேற்றி :






மடிக்கணினிப் பாவனையாளர்களின் நீண்டநாள் கவலையைப் போக்கும் விதமாக தற்போது சூரிய ஒளியில் மின்னேற்றிக்கொள்ளக்கூடிய மடிக்கணினி கைப்பையைத் (Laptop) தயாரித்து உள்ளது வோல்டே நிறுவனம்.

14.7 வோல்ட் மின்சக்தியை உற்பத்தி செய்யும் வல்லமை கொண்டுள்ள இது, 24 மணித்தியாலமும் பயன்படுத்தக்கூடிய மின்சாரத்தைத் தரவல்லது. இந்தப் பையுடன் மடிக்கணினி, கைத்தொலைபேசி மற்றும் மற்றும் பிற இலத்திரனியல் சாதனங்களையும் மின்னேற்றும் வண்ணம் இணைப்பு வயர்களையும் கொண்டுள்ளது. யு.எஸ்.பி. வயர் மூலமும் இதனைச் செய்யலாம்.

புது வரவு


## எச்.பி. 3டி பிரின்டர் :





எச்.பி. கணினி தயாரிப்பு நிறுவனம் புதிதாக வெளியிட்டுள்ள இந்த 3டி பிரின்டரானது கணினியில் நாம் கொடுக்கும் உள்ளீட்டைப் பெற்று அதை முப்பரிமாணமாக 8வித ஐவரி வர்ணத்தில் அச்சிட்டுத் தருகிறது. இது மருத்துவம், வர்த்தகம், பொறியியல் மற்றும் கல்வி செயற்பாடுகளில் துணைபுரிவதுடன் வடிவமைப்பாளர்களுக்கும் மிக்க துணையாக இருக்கும் என இந்நிறுவனம் தெரிவித்துள்ளது. சுமார் 17,000 அமெரிக்க டொலர் விலையுள்ள இந்த 3டி பிரின்டரானது ஐரோப்பிய நாடுகளில் மட்டுமே தற்சமயம் விற்பனையில் உள்ளது.

## Creative Zii Sound :



ஷி சவுண்ட் என்ற பெயருடன் புதிதாக ஒரு ஒலிபெருக்கியினை தயாரித்து வெளியிட்டுள்ளது கிரியேட்டிவ். இது வயரில்லாத் தொழில்நுட்பமான புளுடுத்தை கொண்டு இயங்கக் கூடியது தனிச்சிறப்பு. மிகக்கூடிய செறிவில் ஒலி வெளியீட்டினை தரும் இது இரண்டு துணை ஒலிபெருக்கிகளைக் கொண்டுள்ளது. ஷி சவுண்ட் சுமார் 366 டொலர் பெறுமதியுடன் விற்பனைக்கு வந்துள்ளது.

**ஆரோக்கியமான ஆண்–பெண் நட்பை வளர்த்துக் கொள்வது எப்படி? அந்த நட்பு வாழ்க்கைத் துணை ஆக முடியுமா?**

ஆணுக்கு பெண் மீதும், பெண்ணுக்கு ஆண் மீதும் ஈர்ப்பு வருவது இயற்கை. அதே நேரத்தில் இளம் வயதில் அவர்களுக்கிருக்கும் மனமுதிர்ச்சி குறைவு. இதனால் அவர்கள் தேர்ந்தெடுப்பது நல்ல நட்பா அல்லது தகாத நட்பா என்று உணரும் பக்குவம் அவர்களுக்குக் குறைவு. மிக சாதுர்யமாக, நல்ல நட்பின் முக்கியத்துவத்தை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

பெற்றோர் மதம், ஜாதி என்ற ரீதியில் ஆண்-பெண் உறவைப் பற்றிச் சிந்திக்கிறார்கள். உங்கள் சமூகத்தி-லேயே பல தரப்பட்ட மக்களும் இருக்கக்கூடும். ஆக சாதி, மதம் பார்க்கலாம், ஆனால் அது மட்டுமே வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுக்க தகுதியாக நினைக்கக் கூடாது.

அடுத்து அறிவுபூர்வமாகவும் நிதி சம்மந்தமான நோக்கும் ஒத்துப் போகிறதா என்று சிந்திக்க வேண்டும். ஐந்தாவதாக கொள்கை ரீதியாக சரிப்படுகிறதா என்று யோசிக்கவேண்டும்.

மூடத்தனமான மத நம்பிக்கைகள் முக்கியமல்ல. நல்ல வாழ்க்கை நெறி, சத்தியம், அன்பு, பரோபகாரம், பரஸ்பரம் போன்ற குணாதிசயங்கள் முக்கியம்.

ஆண் பெண் உறவென்பது அந்த இருவர் மட்டும் சம்மந்தப்பட்ட



# ஆண்–பெண் நட்பு
## வாழ்க்கைத்துணையாக!

இளம் பிராயத்தினரோ, உடல் ரீதியான ஈர்ப்பைப் பற்றி மட்டுமே சிந்திக்கிறார்கள். உடல் ரீதியான

**உடல் ரீதியான ஈர்ப்பைத் தாண்டி உணர்ச்சிப் பூர்வமான ஒற்றுமை முக்கியம்.**

ஈர்ப்பு அவசியம் என்பது உண்மை, உடல் ரீதியான ஈர்ப்பைத் தாண்டி உணர்ச்சிபூர்வமான ஒற்றுமை முக்கியம். ஓர் ஆண் மிகவும் அழகானவனாக இருக்கலாம் ஆனால் மனப்பூர்வமாக ஒத்துப்பே ாகவில்லையென்றால், அந்த உறவு நீடிக்காது.

விஷயம் அல்ல. இருவரது குடும்பங்களும் சம்பந்தப்பட்ட விஷயம். குடும்பம் பிள்ளைகளுக்கு சரியான வளரும் சூழ்நிலையை அளிக்க முற்படும்போது, அவர்கள் சரி-தவறு என்று பாகுபடுத்தும் பக்குவத்தை இயற்கையாகப் பெறுகிறார்கள்.

மேற்கத்திய நாடுகள் போல் அல்லாமல் நம் உறவுகள் எல்லாம் குடும்பத்தைச் சார்ந்தே வளர்கின்றன என்ற உணருதல் இருந்தால், இந்த உறவு மேம்படும்.

**- சுவாமி சுகபோதானந்தா**
**மங்கையர் மலர்**

**சும்மா இருக்க**
## சுகம் வருமா?

ஒருநாள், ஓர் ஊருக்குள் வெள்ளம் புகுந்தது. ஒரு வீட்டின் முதல் தளத்தில் ஒருவன் மாட்டிக்கொண்டிருந்தான். கீழ்த்தளம் எல்லாம் வெள்ளத்தில் மூழ்கிவிட்டது. அவன் ஜனன்ல் வழியாக எட்டிப் பார்த்தான்.



ஒருவன் ஒரு படகில் தப்பித்துப் போய்க்கொண்டிருந்தான். அவன் இவனைப் பார்த்து, 'குதித்து வா, நாம் இருவரும் இந்தப்படகில் தப்பித்து-விடலாம்' என்று சொன்னான்.

ஆனால் இவன், 'எனக்குக் கடவுள் மீது நம்பிக்கை இருக்கிறது. நீ போ' என்று சொல்லிவிட்டான். ஒவ்வொரு தளமாக வெள்ளம் சூழ்ந்த போதும் உதவிக்கு வந்தவர்களிடம் அவன் இதே பதிலையே ஒப்புவித்தான். கடைசியாக எல்லாத் தளங்களையும் வெள்ளம் சூழ்ந்துகொண்டபோது, ஒரு ஹெலிகொப்டர் வந்தது. அதில் இருந்தவர்கள் அழைத்தும் அவன் கடவுள் காப்பாற்றுவார் எனச்சொல்லி, போகாமல் இருந்துவிட்டான்.

கடைசியில் வெள்ளத்தில் மூழ்கி இறந்தே போனான். இறந்தவன், சொர்க்கத்தின் வாசலில் கடவுளைப் பார்த்தான். அவனைப் பார்த்த கடவுள் புன்னகைத்தார்.

இவன் ரொம்ப சோகமாகவும், கோபமாகவும் முகத்தை வைத்துக்-கொண்டு, 'என்ன கடவுளே இப்படிச் செய்துவிட்டாய்? உன்னை முழுசாக நம்பினேனே?' என்று கேட்டான்.

அதற்கு கடவுள், 'நான் என்ன செய்ய? உனக்காக இரண்டு படகுகளை அனுப்பினேன். கடைசியாக ஒரு ஹெலிகொப்டரையும் அனுப்பினேன். நீ எதையும் பயன்படுத்திக் கொள்ள-வில்லையே' என்றார்!

# நாம் பேச நினைப்பதெல்லாம்...

‘இதயம் என்ன நினைக்கிறதோ, அதை உதடுகள் பேசுகின்றன’ என்பது ரோமானியப் பழமொழி. ஆனால், அப்படி மனதில் பட்டதையெல்லாம் ‘துடுக்’ எனப் பேசிவிட முடியுமா?

எந்த இடத்தில் என்ன பேசவேண்டும்? யாரிடம், எப்படி, எதற்காகப் பேசவேண்டும்? என்பதுபற்றியெல்லாம் சரியாகத் திட்டமிட்டுப் பேசினாலே, பேச்சின் மூலம் நாம் அடைய விரும்புவதை வெற்றிகரமாக அடையமுடியும்.

**அறிந்து கொள்ளுங்கள்!**

இன்றைய காலகட்டத்தில் பேச்சுத் திறன் எவ்வளவு அவசியம்,.. அத்தியாவசியம்?

**வார்த்தைகளைக் கொட்டிவிட்டால் அள்ள முடியாது. அதே சமயம், மனதின் கருத்தை மறைத்து ஒளிக்கவும் முடியாது.**

மேடைப் பேச்சின் அத்தியாவசிய விதியை உரைக்கிறார் விஜய் ரீவியின் ‘நீயா நானா’ புகழ் கோபிநாத்!

“நம் பேச்சைக் கேட்டு மக்கள் இரசிக்கிறார்களா என்பதைவிட, அதைப்பற்றிச் சிந்திக்கிறார்களா என்பதே முக்கியம். உங்களுக்குத் தெரிந்ததை நீங்கள் பேசும்போது அதை மக்கள் இரசிப்பார்கள். அவர்களுக்குத் தேவையானதை நீங்கள் பேசும்போதுதான் அது குறித்து அவர்கள் சிந்திப்பார்கள்”

“நீங்கள் பேசும் பேச்சு, கேட்பவர்களை இரசிக்க வைக்கக் கூடியதாக மட்டும் அல்லாமல், சிந்திக்க வைக்கக் கூடியதாகவும் இருக்கவேண்டும். அழகான வார்த்தைகளை -விட, ஆழமான உண்மைகள் முக்கியம்!” என்று

“பேச்சாளர்களாக மட்டுமே தங்கி தேங்குவீர்களா..? அல்லது சிந்தனையாளரா-கவும் பரிணமிக்கப்-போகிறீர்களா?” என்று கேள்வியுடன் முடிக்கிறார் கோபிநாத்.



எண்ணங்களைக் கோவைப்படுத்தி வெளிப்படுத்துவ-துதான் பேச்சு. ஆனால், இன்று நிறையப் பேருக்கு தங்கள் எண்ணங்களைக் கோவைப்படுத்தத் தெரியவில்லை.

பாடப் புத்தகங்களுக்கு வெளியே உள்ள வாசிப்புத் தளம் தான் உங்கள் பேச்சை எப்போதும் வளம்படுத்தும். ● மேடையில் பேச அச்சப்படத் தேவையில்லை. ஆனால், நீங்கள் பேசியதை மக்கள் உள்வாங்கிக் கொண்டார்களா என்ற அச்சம் எப்போதும் இருக்க வேண்டும். அது ‘அச்சம் அல்ல அறிவு!’.

அஞ்ச வேண்டிய செயல்களுக்கு அஞ்ச வேண்டும் என்ற வள்ளுவனின் வாக்கை நினைவில் கொள்ளுங்கள். ‘அஞ்சுவது அஞ்சாமை மடமை’யல்லவா?

‘உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின் வாக்கினில் ஒளி உண்டாகும்’ என்ற பாரதியின் வரிகளை மேடைப் பேச்சாளர்கள் மட்டுமன்றி நாம் ஒவ்வொருவருமே நினைவில் நிறுத்திக்கொள்வது நல்லது.




எனவே பேசுங்கள்.

உண்மையை உணரவைக்க...

உள்ளம் தெளியவைக்க....

உங்களை உயரத்தில் வைக்க...

பேசுங்கள்!

பேசுங்கள்!

பேசிக்கொண்டே இருங்கள்!

– ‘விகடன்’ இலிருந்து

# நினைத்ததை அடையும் அலாவுதீன் மந்திரம்

எந்த ஒரு பொருளுக்கும் நாம் உரிமையாளராக வேண்டுமென்றால், அதற்கெனச் சில தகுதிகளை நாம் வளர்த்துக்கொள்ளவேண்டும். அறியாமை காரணமாக நமது தேவை என்ன, எவையெல்லாம் நமது வாய்ப்புகள் என்பதை உணராமலேயே நாம் காலத்தைக் கழித்து வருகிறோம்.

நமக்கு என்ன தேவை என்பதைக் கேட்டுப் பெறும் தகுதியை வளர்த்துக்கொண்டாலே, அலாவுதீனின் அற்புத விளக்குப்போல், எதையும் இலகுவில் அடைந்துகொள்ள முடியும் என்று சொல்கிறார்கள் ஜாக் கான்ஃபீல்ட் மற்றும் மார்க் விக்டர் ஹான்சன்.




'Chicken Soup for the Soul' என்ற தொடரைப் படைத்த அமெரிக்காவின் சிறந்த விற்பனை எழுத்தாளர்களான இவர்களின் இன்னோர் படைப்பான The ALADDIN FACTOR என்ற புத்தகத்திலிருந்து...

**அலாவுதீனின் அற்புத விளக்கின் உரிமையாளர் பின்வரும் தகுதிகளை உடையவராக இருப்பர**

* தனக்கு என்ன தேவை என்பதைச் சுட்டிப்பாக உணர்ந்திருப்பார்!
* தனது தேவையை அடைவதற்கு உண்டான அனைத்து தகுதிகளும் தனக்கு இருப்பதாக அவர்கள் உறுதிபட நம்புவார்!
* அதைத் தன்னால் அடைய முடியும் என்ற நம்பிக்கையும் அவருக்கு இருக்கும்!
* ஒருவேளை தான் ஆசைப்பட்டது தனக்குக் கிடைக்காவிட்டால் என்ன செய்வது?' என்ற சின்னப் பதற்றமும் அவருக்ளுக்குள் ஒளிந்திருக்கும். அதற்கேற்ப மாற்று ஏற்பாடுகளையும் யோசித்து வைத்திருப்பார்கள்!
* தங்களது அனுபவங்களிலிருந்து அவர்கள் பாடம் கற்றுக்கொண்டிருப்பார்கள்!
* நினைத்ததை அடையும்வரை மிகப் பொறுமையாக, அதே சமயம், துடிப்புடனும் காத்திருப்பர்!

இந்தத் தகுதிகளை வளர்த்துக்கொள்ளும் அனைவரிடமுமே அலாவுதீன் விளக்கு ஒன்று தானாகவே வந்தடையும்!




நமக்குத் தேவையானதைக் கேட்டுப்பெறுவதில் என்ன தேவை...ஏன் தேவை? என்ற தெளிவும் தீர்க்கமும் சுட்டிப்பாக இருப்பது அவசியம்.

உதாரணமாக, 'எனக்குச் சம்பள உயர்வு வேண்டும்' என்று கேட்பதைவிட, 'இந்த மாதத்திலிருந்து நான் 5000 ரூபாய் சம்பள உயர்வு எதிர்பார்க்கிறேன்' என்று சுட்டிப்பாகக் கூறுங்கள்.

என்ன தேவை? எப்படித் தேவை? எப்போது தேவை? என்பதை மிகத் தெளிவாக எதிராளியிடம் தெரிவித்தால்தான் தேவைகளை நாம் நிறைவேற்றிக்கொள்ளமுடியும்.

கூடவே, உங்களது தேவை நியாயமானதா? எதிராளி அதை நிறைவேற்றக்கூடியவரா என்பதிலும் தெளிவாக இருங்கள்!

## பேசும்போது இதையும் கவனியுங்கள்..!

* தகவல்களுக்குத் தகுந்தவாறு குரலில் ஏற்ற இறக்கம் காட்டுங்கள். தேவை இல்லாத எதுகை, மோனை வேண்டாம்!
* மற்றவர்கள் உங்களைப் பார்க்கவேண்டும். நீங்கள் ஆயிரம் பேரைப் பார்த்துப்பேச வேண்டும். அந்த ஒரு வசதிக்காகத்தான் மேடை என்பதை மனதில் இருத்திக்கொண்டுவிட்டால் மேடைப்பயம் பறந்துவிடும்!
* தனி மனித விமர்சனங்கள், ஆபாச வார்த்தைகள், வேற்றுமொழிச் சொற்களைக் கண்டிப்பாகத் தவிர்க்கவும்.
* கூட்டத்தின் ஒரு பகுதியை மட்டுமே பார்த்துப் பேசாமல், பரவலாகப் பார்வையைப் படரவிடுங்கள்.
* தேவையான இடத்தில் கொஞ்சம் நிறுத்திப் பேசினால், அது பார்வையாளர்களை உங்கள் பேச்சுடன் இணைந்து பயணிக்கச் செய்யும்.
* பேச்சினூடே நகைச்சுவைத் துணுக்கு, குட்டிக் கதை போன்றவற்றை அதிகம் பயன்படுத்துவதைக் குறையுங்கள்.
* கவனிக்க...வெறும் 'பொழுதுபோக்கு' அல்ல, 'சிந்திக்க'வும் செய்வதே பேச்சு!

# 'அறிவுலகம்' காட்டிச்சென்ற 'முப்பரிமாண' தேடல்

"நீரளவே ஆகுமாம் நீராம்பல் தான் கற்ற நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு..."

நாம் படிக்கும் புத்தகங்களின் அளவில் தான் எமது நுண்ணறிவு தங்கியுள்ளது என்பதை மிகத்தெளிவாக உணர்த்துகிறது இந்த மூதுரை!

அறிவின் எல்லையைத் தாண்டிய சுயசிந்தனைக்கும், தேடலுக்கும் ஆதாரமாக அமைவது வாசிப்புப் பழக்கமேயாகும். இதனை இன்றைய தலைமுறையினரிடையே தோற்றுவிப்பதற்கும், விருத்தி செய்வதற்கும் தேவையான அனைத்து வளங்களையும் ஒன்றிணைத்து உயிர்ப்புடைய மனித சமூகத்தை தோற்றுவிக்க ஒன்றிணைதல் என்ற நோக்கத்துடன் 'அறிவுலகம்' கண்காட்சி நடாத்தப்பட்டிருந்தது.



யாழ் காரைநகர் தியாகராஜா மகாவித்தியாலயத்தில் பெப்ரவரி 15- 21 வரையில் நடைபெற்ற இக் கண்காட்சியை நூலக விழிப்புணர்வு நிறுவகத்தினர் ஏற்பாடு செய்திருந்தனர்.

மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கத்தை உயர்த்துவதற்கும், சுயகற்றல் செயற்பாட்டை ஊக்குவிக்கும் பொருட்டும் குறித்த பாடத்துறையில் பொருள் தரும் வகையில் உருக்கள், ஆவணங்கள், தகவல்கள் என்ற மூன்று மூலங்களை உள்ளடக்கிய 'முப்பரிமாண நூலகமாக' இக்கண்காட்சி ஒழுங்குபடுத்தப்படுத்தப்பட்டிருந்தது.

கண்காட்சியின் முதற்பகுதியாக முன்பள்ளி கல்விக்கான பகுதி காணப்பட்டது. சுற்றுச்சூழல், சித்திரம், ஆற்றுகை, மணல்நீர், இசையும் அசைவும், தகவல், புலன்விருத்தி, ஆக்கத்திறன் பண்பாட்டியல் என குழந்தைகள் தெளிவாக உணரக்கூடிய வகையில் உருவங்கள், பொருள்கள், தகவல்கள் என எளிய முறையில் இவை ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தன.

இன்னோர் பகுதியில் முப்பரிமாணத்தை உணர்த்தும் வகையில் பிரமிட் அமைப்பில் 3 படிநிலைகளின் தமது நோக்கத்தை மிகத்தெளிவாகக் காட்சிப்படுத்தியிருந்தனர். இதன் முதல் படிநிலையாக "உருவும் அதன் பொருளும்" எனும் தலைப்பில் பொருள்கள், உருக்கள் ஊடாக உரு ஆவணம்சார் தகவல் வழங்கலை நோக்காகக் கொண்ட பல பொருள்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

பூச்சிகள், பழைய நாணயங்கள், தபால் தலைகள், கருவிகள், விளக்குகள், எழுதுவினை பொருள்கள், அச்சியந்திரம் என பல்வேறுபட்ட நிலையிலும், காலங்களி-லும் பயன்படுத்தப்பட்ட பொருள்கள் அவற்றுள் சிலவாகும்.

"நூலும் அதன் வடிவங்களும்" எனும் இரண்டாவது பகுதியில் பருவ இதழ், கட்டுரை, சிறுநூல்கள், ஆய்வுக்கட்டுரை, இணையத்தளம், ஒலி-ஒளிநாடா போன்றனவற்றின் காட்சிப்படுத்தல் மூலம் சமூகத்தின் அனைத்து உறுப்பினர்களுக்கும் சமமான இடத்தை வழங்கும் நோக்கத்தில் எழுத்தாளர்களுக்கு முக்கியத்துவத்தை வழங்கியிருந்தார்கள்.

"தகவலும் அதன் தரங்களும்" எனும் மூன்றாவது பகுதியில் அறிஞர்கள், பெரியவர்களின் நேர்காணல்களிலிருந்து பெறப்பட்ட தகவல்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.


நூலக விழிப்புணர்வு நிறுவகத்தின் அமைப்பாளரான செல்வி.எஸ்.அருளானந்தன் என்பவரிடம் இக்கண்காட்சி தொடர்பாக பேச்சுக்கொடுத்தோம்.

"மாணவர்களின் வாசிப்புத்திறன் மற்றும் நூல்கள் பற்றிய விழிப்புணர்வையும் ஊக்குவிக்கும் நோக்கத்தை மையமாகவைத்தே இக்கண்காட்சியை நடாத்தினோம்" என்று கூறியவர்,





விருந்தினர்களை அழைத்துவரும் செல்வி.எஸ்.அருளானந்தன்





"நூலகங்கள், தகவல் நிறுவனங்கள், ஆவணவாக்க நிலையங்கள் போன்றவற்றைச் சமூகத்தின் பயன்பாட்டுக்கு உதவக்கூடியதாயும், அறிவு - ஆற்றல் அனுபவம் என்பவற்றை வளர்த்தெடுக்கக்கூடிய தகவல் மையங்களாக்கவேண்டும் என்ற நோக்கில் உருவாக்கப்பட்டதே இந்த முப்பரிமாண நூலகம்" என்றார்.

காரைநகர் பிரதேசத்தில் இக்கண்காட்சியை நடாத்தியதன் நோக்கம் பற்றிக் கேட்டபோது, "கல்வி, நிதிவசதி கொண்ட பிரதேசமெனினும், தொடர்பாடற்திறனில் பின்தங்கியதாகவே உள்ளது. யாழ் மாவட்டத்தில் 30க்கும் மேற்பட்ட நடமாடும் நூலகக் கண்காட்சியை ஒழுங்குபடுத்தியதன் மூலம் சான்றாதாரக் கல்வியின் முக்கியத்துவம், பயன் என்பனவற்றைத் தெளிவாக கண்டுணர்ந்ததன் பின்னரே இங்கு நடாத்த முடிவெடுத்தோம்" எனக் கூறினார்.

"வரையறுக்கப்பட்ட ஆளணி, நிதி வசதிகளுடன், அகலத்திறக்கும் தகவற் சேவைகளின் நுழைவாயில்களை மூடிவிடாமல் முன்னெடுப்பது என்பது சிரமமான தொன்றாகும். எனினும் சமூக மேம்பாட்டை மாத்திரம் முதன்மைப்படுத்தியே இக்கண்காட்சியை முன்னெடுத்தோம்" எனத் தெரிவித்த செல்வி.எஸ். அருளானந்தம்,

மேலும் தமது நிறுவகம் வளங்களாலும், சேவைகளாலும் வளர்ந்து வரும் அதேநேரம் "சிந்தனைப் பதிவேடுகள் அன்றும் இன்றும்" என்ற தலைப்பில் முப்பரிமாண நூலகம் என்ற புதிய கருத்து நிலையினூடாக வாசிப்பை மேம்படுத்தும் புதிய உத்தியை அறிமுகம் செய்துள்ளதாகவும் கூறினார்.

இக்கண்காட்சியானது, மாணவர்களுக்கு பல்லூடகக் கல்வியின் முக்கியத்துவத்தை அனுபவத்தினூடாகவும், எமது பண்பாடு மற்றும் புதுமைகளை மாதிரிகளூடாக ஆவணப்படுத்தி வெளிப்படுத்தியதையும் தெளிவாக உணர வைத்திருந்தது.

நூலகத்தை நாடும் அனைத்துத்துறை வாசகர்களுக்கும் அவர்களது தேவையை பூர்த்திசெய்யவேண்டிய கடப்பாடு நூலகங்களுக்கு உண்டு என்பதையும், அறிவுத்தேடலை விருத்திசெய்ய நூலகர்களுக்கான பொறுப்பு அதிகமென்பதையும் உணர்த்திச் சென்றுள்ளது **'அறிவுலகம்'**!



**க.கோபி**
**2ம் அணி**

## சிகரம் புத்தகச் சந்தை

புதிய வெளியீட்டு முயற்சிகளிலும், ஏற்கனவே வெளியான நூல்களை மாணவர்களுக்குக் குறைந்த விலையில் பெற்றுத்தரும் முயற்சியிலும் சிகரம் ஊடக இல்லம் ஈடுபட்டுள்ளது.

பின்வரும் நூல்கள் இப்போது சிகரம் ஊடக இல்லத்தினரால் பாடசாலை மற்றும் நூலக மட்டத்தில் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

இன்னும், உங்களுக்குத் தேவையான எந்த வகையான புத்தகங்கள் என்றாலும், அதை எமக்கு அறியத்தந்தால், மலிவு விலையில் அவற்றைப் பெற்றுத்தரவும், புதிய வெளியீடுகளை மேற்கொள்ளவும் சிகரம் சித்தம் கொண்டுள்ளது.

**சிகரம் ஊடக இல்லம்,**
**இல.221, பலாலி வீதி,**
**கந்தர்மடம்,**
**யாழ்ப்பாணம்.**



சந்தை விலை 250/-

நமது விலை 200/-

**விலங்குப் பண்ணை**
(மொழிபெயர்ப்பு நாவல்)



சந்தை விலை 200/-

நமது விலை 160/-


**எதுவுமல்ல எதுவும்**
(கருணாகரன் கவிதைகள்)




சந்தை விலை 450/-

நமது விலை 360/-

**மாணவர் தேசப்படப் புத்தகம்**
(முழு வர்ண இந்தியப் பதிப்பு)





சந்தை விலை 900/-

நமது விலை 720/-

**Word Master Dictionary**
(35,000க்கு மேற்பட்ட சொற்கள்)

## மொழியோடு விளையாடு

**முகிலனின் கவிதைகள்**



உள்ளத்து உணர்ச்சிகளைச் சுண்டி இழுத்து சிந்திக்க வைக்கும் கவிதைகளைப் படைக்கும் இளம் கவிஞர் - நெடுந்தீவைச் சொந்த இடமாகக் கொண்ட முகிலன். மிக இள வயதிலேயே ஏழு தொகுப்புகளை வெளியிட்டுள்ளார்.

எல்லோரும் கவிதை எழுதுகிறார்கள் என்பதற்காக கவிஞர்கள் ஆகிவிட-முடியாது. கவிதைகளில் உயிரோட்டம் இருக்கவேண்டும். படிப்பவர்களின் மனதில் அவை ஆழப்பதிய வேண்டும். காலவோட்டத்தில் நின்று நிலைக்கக்கூடியவையாக அவை இருக்கவேண்டும்.

முகிலனின் கவிதைகள், கவிதைகளின் இந்தப் பண்புகளைக் கைக்குள் அடக்க முயல்கின்றன. 'கடவுளின் சயனத்தைக் கலைக்கும் மணியோசை'யுடன் வரும் முகலனின் கவிதைகள் பிரகாசிக்கவே செய்கின்றன.

இளம் கவிதைத்துறைக்குக் கிடைத்திருக்கும் ஆரோக்கியமான எதிர்கால கவிஞர்களில் ஒருவராக நெடுந்தீவு-முகிலன் தன்னை அடையாளப்படுத்தியுள்ளார். இவரது கவிதைத் தொகுப்புகளின் வெளியீட்டு விழா ஜனவரி 30 அன்று யாழ் திருமறைக் கலாமன்ற கலைத்தூது மண்டபத்தில் நடைபெற்றது.

இதுவரை வெளியான இவரது கவிதைத் தொகுப்புக்கள்: கிறுக்கி, மனத்திரை மேகங்கள், அகதியின் முகம், கனவுகளின் வாசகன், சாடிகள் கேட்கும் விருட்சங்கள், ∴, கடவுளின் சயனத்தை கலைக்கும் மணியோசை.

∴.பேஸ்புக்கிலும் இவரது கவிதைகளைப் பார்க்கக் கிடைப்பது போனஸ் தகவல்!

### இரவல் கனவு

கனவு
காண்பதற்கு
விழிகளைக்
கடன்
வாங்க வேண்டியிருக்கிறது.

### தலையணை

பழசான
தாவணி
பிறவி எடுக்கிறது
புதுத் தலையணையாய்...

### காகிதப் பறவை

காகிதத்தில்
வரைந்து வைத்த
பறவைகளும்
பறந்து விட்டன
காற்றின் அசைவுகளுக்கு...

### நிகழ்காலம்

இறந்தவர்களின் நினைவாக
தூபி கட்டுவதா?
இருப்பவர்களின்
நிகழ்காலத்திற்கென
வீடு கட்டுவதா?

### அனாதைப் பிணம்

சவப்பெட்டியை மொய்க்கும்
ஈக்களை கலைத்துக்கொண்டு...
தலைமாட்டில் புலம்பியபடி மனைவி
காணல் வடித்தபடி கால்மாட்டில்
வளரப்பு நாய் - பிள்ளைகள்
வெளிநாட்டில்...

### முதிர் கன்னி

கல்யாணக் கனவோடு
கை நீட்டி வாங்கும்
சம்பளமும்
மாதம் இருமுறை
"டை"
அடிக்கவே பத்தாது.

### ஃபேஸ்புக்

வயிற்றுக்கு சோறு
போட்டு
வளர்த்து விட்ட
அம்மாவுக்கு...
வாய்க்கரிசி போடவும்
வரவில்லை...
அந்நிய நாட்டில்
வசிக்கும்
மகன்மார்...
ஆனால்
அனுதாபம் மட்டும்
வருகிறது
"∴.பேஸ்புக்கில்"

### சேலை

நகரத்து பாட்டிகளே!
உங்கள்
பழைய சேலைகளைத் தாருங்கள்.
கிராமத்திலே...
குமரிகள் இருக்கிறார்கள்.

### பசுப்பால்

தாய்ப்பசுவை
விட்டு விட்டு
கன்றுக் குட்டிகள்
பால்க்காரனுக்கு
பின்னால் ஓடுகின்றன...

### வழக்கு

தீர்ப்புகள்
எழுதப்பட்ட பிறகே
விசாரணைக்கு வருகின்றன
வழக்குகள்

## பருவம்

பருவம்
அடைவதற்கு முன்னரே
பிரசவம் பற்றி
தெரிந்திருக்கிறது
சில பூக்களுக்கு

## ஈரக் கனவுகள்

இடம்பெயர்ந்த பறவைகளின்
ஈரக் கனவுகள்...
வறுமையின் வெப்பத்திற்கு
ஆவியாகிவிட்டன

## இருட்டு

இருட்டுக்குப் பழகிய கறையான்
வெளிச்சத்தை
இரை என்று
அரித்துக்கொண்டிருக்கிறது

## அழுக்கு

சிலர் அழுக்கு சமூகம் என
வாய் கூசாமல் பேசுகிறார்கள்
முதலில் அவர்களை
சலவை செய்யவேண்டும்!











## திருடர்களை திருடவேண்டும்

எல்லைப் புறத்தில்
யாருமே அற்ற
பாழடைந்த வீட்டில்
அவள்
கனவுகளோடு
தனியாக வசிப்பவள்

கல்யாணமாகி
நான்கு
மாதங்களுக்குள்
கர்ப்பப்பை நிறைக்கப்பட்டபோதும்
அவள் - கணவன்
காலனால்
களவெடுக்கப்பட்டு
விட்டான்

கணவனுக்காய்
கௌரிவிரதம்
அனுஸ்டித்ததில்
அவளுக்கு மிஞ்சியது
வறுமையும்
வெறுமையும் - கூடவே
வயிற்றில்
குழந்தையும்...

"கடவுளுக்கு கண்கள்
இல்லை என்பது
இப்போது "நிரூபனமாகிறது"

அந்த
உத்தமியை
ஊரார்கள்
விதவை என்றும்...
விபச்சாரி என்றும்...

பலர்
மோசமாய்
விவாதிப்பதுண்டு
தெருவைக்கடக்கும்
ஒவ்வொருவரும்
அவள் குடிசையின்
கதவைத்
தட்டிப் பார்த்தபடியே...

"அதிகம்
முதியவர்களின்
கைரேகைதான்
கதவில்
படிந்திருக்கிறது"

–சாடிகள் கேட்கும் விருட்சங்கள்

## முகிலன் பற்றி பாலன்

நான் சிலகாலமே அனுபவித்த நெடுந்தீவின் காவிய வாழ்வை முழுவதுமாக வாழக் கொடுத்து வைத்தவர். சில வருடங்கள் நான் படித்த நெடுந்தீவு மகா வித்தியாலத்திலும் படித்திருக்கிறார். என்னுடைய தோழர்களும் தோழியர்களும் ஆடியும் பாடியும் கூடியும் திரிந்த வீதிகளிலும் புல்வெளிகளிலும் கடற்கரைகளிலும் தனது தோழர் தோழிகளுடன் என்னை விட அதிக காலம் செழித்திருக்கிறார். நான் படிக்க விரும்பி வாய்க்காது போன ஊடகத் துறை பயில்கிறார். போரும் புலப்பெயர்வும் இடுக்கண்களும் என்று சூறாவளியில் அடிபட்ட இலவம் பஞ்சாக நம் வாழ்வு சிதறாமல் இருந்திருந்தால் எப்பவோ முகிலனையும் அவரது கவிதைகளையும் அறிந்திருப்பேன்.

ஈழத்தில் ஜாதிபேதங்கள் ஒழிந்த முதல் ஊராக என் தீவு மாற வேண்டும் என்ற கனவை நனவாக்கக்கூடிய கவிஞன் நெடுந்தீவு-முகிலனின் தலைமுறையை வாழ்த்துவது பாக்கியமாகும்...

கவிஞர்
வ.ஐ.ச.ஜெயபாலன்

# கிராமத்திற்கு தொழில் நுட்பம் 'வேலை தா' என்று கேட்போருக்கு விதாதா

யாழ்ப்பாணத்தில் நடைபெற்று முடிந்த வர்த்தகக் கண்காட்சியும், கைத்தொழில் கண்காட்சியும் நிறையவே சுயதொழிலாளர்களை சமூகத்திற்கு இனங்காட்டின. கச்சான் பிஸ்கட், மோர் மிளகாய், வேப்பம்பூ வடகம் போன்ற உணவுப் பொருள்கள் முதல், சிரட்டை, பாக்கு, சோடாப்போத்தல் உள்ளிட்ட கழிவுப்பொருள்களில் செய்யப்பட்ட அலங்காரப் பொருள்கள் மற்றும் மெழுகுதிரித் தயாரிப்புகள் என பலவிதமான கைவினைப்பொருள்களை இங்கு நம்மூர்ப் பெண்கள் காட்சிப்படுத்தி அசத்தியிருந்தனர்!

இத்தனை காலமும் எங்கேயிருந்தன இந்தத் திறன்கள்? இவற்றையெல்லாம் எங்கேதான் செய்கின்றார்கள்? என்ற கேள்விகளுடன், பொருள்களைக் காட்சிப்படுத்தியிருந்த பெண்களுடன் பேச்சுக்கொடுத்தோம்…

"நான் விதாதா வள நிலையத்தில் முறையான பயிற்சி பெற்ற பின்னரே சுயமாக இப்பொருள்களைத் தயாரித்து வருகிறேன். தற்போது கச்சான் பிஸ்கட், மோர் மிளகாய், வேப்பம்பூ வடகம் என எனது தயாரிப்புகள் யாழ்ப்பாணச் சந்தையில் அதிகளவில் விற்பனை செய்யப்படுகிறது." எனக் கூறிய அ.ஆனந்தமாலினி என்பவர்,

"எனக்கு மட்டுமன்றி, போர், இயற்கை அனர்த்தங்கள் ஆகியவற்றாலும், பாலியல் துஷ்பிரயோகங்களாலும் பாதிக்கப்பட்ட ஏராளமான யுவதியருக்கு விதாதா நிலையம் சுயதொழில் பயிற்சிகளை வழங்குகிறது" எனவும் கூறினார்.

இவரைப் போலவே இன்று நிறைய இளைஞர் யுவதிகளுக்கு சுயதொழில் பயிற்சிகளையும், கணினிப் பயிற்சிநெறியையும் வழங்குகிறது விதாதா வள நிலையம்.



அ.ஆனந்தமாலினி

**விஞ்ஞான தான தொழில்நுட்பம் [விதாதா]**

விஞ்ஞான தொழில்நுட்பத்தை கிராமங்களுக்கு வழங்கி, கிராமத்து மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தலும், அதற்காக கிராம மக்களை ஊக்குவித்தலும் எனும் நோக்கிலேயே விதாதா வள நிலையம் 2005 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

"மக்களின் வாழ்க்கை நிலையை உயர்வடையச்செய்ய வேண்டுமாயின் எங்களது இயற்கை வளங்களில் தங்கிய உற்பத்தி நடவடிக்கைகளை மேம்படுத்தவேண்டும். இதற்கென விதாதா வேலைத் திட்டத்தை இலங்கை முழுவதும் பரவலடையச் செய்து வருகிறோம்" என விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் கலாநிதி திஸ்ஸ விதாரண கூறியுள்ளார்.

விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சின் மூலம் இலங்கையில் உள்ள 323 பிரதேச செயலகங்களின் கீழ் விதாதா வள நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அந்நிலையங்களுக்கு அருகாமையில் ஒவ்வொரு கிராமசேவகர் பிரிவிற்குமாக ஒவ்வொரு விதாதா குழு அமைக்கப்பட்டு விதாதாவின் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.



**செயற்பாடுகள்:**

- விஞ்ஞானக் களத்தின் அறிவினை மேம்படுத்துவதற்கு உதவி செய்தல்
- சக்தி ஆதார மூலம் என்ற வகையில் உயிர் வாயுவின் பாவனையை மேம்படுத்துதல்
- பாரம்பரிய அறிவுக்கு தொழில்நுட்ப அறிவைச் சேர்த்துக்கொள்ளல்
- கணினி எழுத்தறிவினை மேம்படுத்த பங்களிப்புச் செய்தல்


**யாழ்ப்பாணத்தில் விதாதா**

விதாதா நிகழ்ச்சித்திட்டமானது நல்லூர், யாழ்ப்பாணம், கோப்பாய், சண்டிலிப்பாய், சங்கானை, கரவெட்டி மற்றும் பருத்தித்துறை ஆகிய பிரதேச செயலகங்களில் நிறுவப்பட்டுள்ள விதாதா வள நிலையங்களுடாக முன்னெடுக்கப்படுகின்றது.

வடக்கின் வசந்தம் நிகழ்ச்சித்திட்டத்துடன் விதாதா செயற் திட்டமும் இணைந்து, யாழ்ப்பாணத்தில் உள்ள வேலையற்று இருக்கும் இளைஞர், யுவதிகளுக்கு சுயதொழில் பயிற்சிகளையும், வேலைவாய்ப்புகளையும் வழங்கி வருகின்றன.

**கந்தர்மடம் விதாதா வள நிலையம்**

2007ம் ஆண்டு ஜனவரியில் இரண்டாவது கிளையாக ஆரம்பிக்கப்பட்டது கந்தர்மடம் விதாதா. இந்நிலையத்தின் பணிப்பாளர் தவேந்திரனிடம் விதாதா செயற்திட்டத்தின் நோக்கம் மற்றும் செயற்பாடுகள் பற்றிக் கேட்டோம்.






"எமது நாட்டில் நிலவும் வேலையில்-லாப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு பல தொழிற்பயிற்சி நெறிகளை விதாதா வள நிலையங்கள் வழங்கி வருகின்றன. பத்திரிகைகளிலும் வானொலியிலும் (இலங்கை வானொலி) இப்பயிற்சிநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டு இளைஞர்கள் தெரிவு- செய்யப்ப-டுகின்றனர்" என்றார் அவர்.

"18 வயதிற்கு மேற்பட்ட அனை-வரும் இக்கற்கைநெறிகளைத் தொடரலாம். இதன் மூலம் தங்கள் வாழ்வாதாரங்களையும் முன்னேற்ற முடியும்" என்று உறுதியளித்தார் அவர்.

கந்தர்மடம் விதாதா வள நிலையத்-தில் மட்டும் இதுவரை ஆயிரத்து-க்கும் மேற்பட்டவர்கள் பயிற்சி-நெறிகளை பூர்த்தி செய்துள்ளனர்.

**இந்நிறுவனத்தால் வழங்கப்–படும் பயிற்சிநெறிகளாவன:**

- கணினிக் கற்கைநெறிகள்
- கையடக்கத்தொலைபேசி திருத்துதல்
- மெழுகுவர்த்தி செய்தல்
- ஊதுபத்தி செய்தல்
- பப்படம் செய்தல்
- அறுவடைத் தொழில்நுட்பம்
- பழங்களை அடிப்படையாகக் கொண்ட பயிற்சிகள் (பழப்பாகு, பழரசம்)
- சாடி முறை பயிர்ச்செய்கை
- பனையை அடிப்படையாகக் கொண்ட பயிற்சிகள்
- தும்பு உற்பத்திப் பொருள்கள்
- நெசவு

உற்பத்தியாளர்களை ஊக்குவிப்ப-தற்காக ஒவ்வொரு வருடமும் உலக விஞ்ஞான தினத்தை முன்னிட்டு பாடசாலை மட்டத்தில் பல போட்டிகளும் கண்காட்சிகளும் நடாத்தப்படுகின்றன. இப்போட்டி-களில் வெற்றி பெறுவோருக்கும், பயிற்சி நெறியைப் பூர்த்திசெய்வோ-ருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படு-கின்றன.

**விதாதா கடன்**


இங்கு பயிற்சி பெறுபவர்கள், தொடர்ந்து தொழிலை முன்னெடுப்-பதற்கு 'விதாதா கடன் திட்டம்' மக்கள் வங்கியூடாக வழங்கப்பட்டு வருகின்றது. அத்துடன், இங்கு பயிற்சி பெற்றவர்கள் செய்யும் பொருள்களைச் சந்தைப்படுத்த நல்லூர் திருவிழாக்காலங்களில் விற்பனை செய்தல், கடைகளுக்கு ஓடர் கொடுத்தல் போன்ற வாய்ப்புக்களையும் இவர்களே பெற்றுக்கொடுக்கிறார்கள்.

இதுதவிர கிராமப்புறங்களிலிருந்து தரமான பொருட்கள் மற்றும் சேவைகள் ஆகியவற்றை சந்தைப்படுத்தி அவர்களின் வருமானத்தை நிலையானதாக உறுதிப்படுத்துகின்றது.


இவ்வாறு வறுமையை ஒழிக்கவும், வேலை வாய்ப்புக்களை அதிகரிக்கச் செய்யவும், சிறிய நடுத்தர மட்டத்து வினை முயலுனர்களை உருவாக்கத் தேவையான தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தும் விதாதா வள நிலையம் எமக்குக் கிடைத்த வரப்பிரசாதமே!


ஊக்கமுள்ள இளைஞர் யுவதிகள் காலத்தை வீணடிக்காது விதாதாவுடன் இணைந்து உங்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்தலாமே?

**- சி.ஜெயந்தி**



தவேந்திரன்





கந்தர்மடம் 'விதாதா' வில்...

## ஊரெல்லாம் தேரோட்டம்

# திருநெல்வேலி

"இப்போதைய தலைமுறை கலையம்சத்துக்கு மதிப்புக் கொடுப்பது குறைவு. எது மலிவு என்றே பார்க்கிறார்கள். அந்தக் காலத்தில் சாதாரண வீடுகளில்கூட கதவு, நிலை, யன்னல் எல்லாமே விதவிதமான மரவேலைச் செதுக்கல்களைக் கொண்டவையாக இருந்தன. இன்று தனியே தெய்வச் சிலைகளில் மட்டுமே இத்தகைய வேலைப்பாடுகளைக் காணமுடிகிறது".



அ.ஜீவரட்ணம்

இவ்வாறு ஆதங்கப்படுகிறார் யாழ் திருநெல்வேலி ஆறுமுகம் சிற்பால-யத்தைச் சேர்ந்த சிற்பக் கலைஞர் ஆறுமுகம் சிவலிங்கம்.

நமது மண்ணின் சிற்பக்கலைப் பாரம்பரியம் பற்றி அறிந்துகொள்ளும் நோக்குடன், ஆறுமுகம் சிற்பால-யத்துக்கு ஒரு விசிட் அடித்தபோதே அவர் இவ்வாறு தமது மன ஆதங்கத்தை எம்முடன் பகிர்ந்துகொண்டார்.

பிள்ளையார் சிலையொன்றை மிக நுட்பமாக மரத்தில் செதுக்கிய வண்ணம் இருந்த அவர், அந்த மனநிலையிலிருந்து விடுபட்டு எம்முடன் பேசத் தொடங்கினார். அவருடன் பேசியும், தொகுத்தும் நாம் அறிந்துகொண்ட நம்மூர்ச் சிற்பக்கலைஞர்கள், அவர்கள் ஆக்கிய சிற்ப வேலைப்பாடுகள் பற்றிய விபரங்-களை இங்கே உங்களுக்காகத் தருகிறோம்.

**பாரம்பரியம்**

குமரிக்கண்டத்தில் கடல் கொண்டதுபோக எஞ்சிய பாகத்தில் ஒன்று என்று சொல்லப்படும் இலங்கையும் தமிழ்க் கலைகளின் பிறப்பிடம் என்பதில் ஐயமில்லை. பழங்காலந்தொட்டு யாழ்ப்பாணத்தில் தமிழ்க்கலைகள் வளர்க்-கப்பட்டே வந்துள்ளது.

நல்லூர் அரசர் காலத்தி-லேயே, முத்திரைச் சந்தையடி, ஆனைப்பந்தியடி, திருநெல்வேலி, வண்ணார்பண்ணை, கொக்குவில், கோண்டாவில் ஆகிய இடங்களில் சிற்பக்கலைஞர்கள் வசித்து வந்திருக்கிறார்கள். இவற்றுள் சிற்பக்கலை-ஞர்கள் அதிக செறிவாக வாழ்ந்த இடம் யாழ் திருநெல்வேலி. 1800ம் ஆண்டுகளிலேயே இங்கு சிற்பக்கலை வளர்ச்சியடைந்திருந்தமைக்கான ஆதாரங்கள் உள்ளன.

இரும்பு, மரம், உலோகம் என்னும் ஐம்மூலப் பொருள்-களினால் வடிவமைத்தல் செய்வதை பொதுவாகச் சிற்பம் என்றே வாஸ்து சாஸ்திர நூல்கள் குறிப்பிடு-கின்றன. அவற்றில் பொறியியலும் நளினத் தன்மையும் இணைந்த நிலையே சிற்பம் என ஏற்கலாம்.


திருநெல்வேலியில், இரும்பு மரம் ஆகியவற்றில் சிற்பம் வடிக்கும் கலைஞர்களே அதிகமாகக் காணப்படுகின்ற-னர்.

'சிற்பரசர் வாழும் பூமி' என்றும், 'கம்மாளர் குலதேவி' என்றும், பத்திரகாளியம்மை பக்திப்பாடல்களில் திருநெல்வேலி சிறப்பிக்கப்பட்டுள்ளதைக் காணலாம். இங்குள்ள சிற்பிகளுக்கு நாயகியாக ஸ்ரீ பத்திரகாளி விளங்குவது குறிப்பிடத்தக்கது.

**பரம்பரை**

விஸ்வகர்ம பிராமண மரபைச் சேர்ந்த சீமான் ஐயங்கர் என்பவர் 20ம் நூற்றாண்டளவில் சிறந்த சிற்பியாக விளங்கியிருந்தார். அவரைத் தொடர்ந்து அவர் வழித்தோன்றல்-களாக மகன் விநாயகர், அவர் மகன் ஆறுமுகம் என்று தொடர்ந்து, இன்று அவரது பரம்பரை சிற்பக்கலையை இங்கு வளர்த்து வருகிறது.

இவரது கைவண்ணத்-தில் வண்ணை வீரமாகாளி அம்மன் ஆலயத்தின் சிற்பரதம் மற்றும் நல்லைக் கந்தனின் குதிரை வாகனம், கைலாய வாகனம் என்பன உரிய அளவுடனும், மிக நேர்த்தியாகவும் வடிவமைக்கப்பட்டு இன்றும் அழியாச் சிற்பங்களாகக் காட்சி தருகின்றன.



கல்முனை சந்தான ஈஸ்வரர் ஆலயத்தேர்

ஆறுமுகம் ஸ்தபதியின் மகன் ஜீவரட்ணம் ஸ்தபதி, 'ஆறுமுகம் சிற்பாலயம்' என்ற கலைக்கூடத்தை நிறுவி, உலகளாவிய ரீதியில் பல சிற்ப வேலைப்பாடுகளைச் செய்து வந்தார். 140க்கும் அதிகமான தேர்களைச் செய்து சாதனை படைத்த இக்கலைஞர், 'கலாபூஷ' ணம்', 'தேர்க்கலையரசு', 'சிற்பச் சக்கரவர்த்தி' போன்ற விருதுகளையும் பெற்றுள்ளார். இவரால் உருவாக்கப்பட்ட தேர்களுள் திருக்கேதீஸ்வர பஞ்சரதங்-கள் குறிப்பிடத்தக்கவை.



ஆ.சிவலிங்கம்

இவைதவிர, யாழ்ப்பாணத்தின் பிரபல்யமான ஆலயங்களான புங்குடுதீவு கண்ணகை அம்மன், திருநெல்வேலி பரவைக்குளம் சிவன், ஆவரங்கால் சிவன், திருநெல்வேலி பழங்கிணற்றடிப் பிள்ளையார், பராளை விநாயகர் மற்றும் இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் உள்ளிட்ட பல ஆலயங்களின் தேர்களும், நல்லூர் கந்தசாமி கோவிலின் தங்க ரதமும் இவரா லேயே அமைக்கப்பட்டவை ஆகும். இவரது கைவண்-ணத்தில் அமையும் தேர்கள் யாவும் நாகர், திராவிட கலைப்பாணியில் அமைந்துள்ளன.

இவரது சகோதரனான தம்பித்துரை ஸ்தபதி, கவின்கலை ஆசிரியராகவும் திகழ்ந்தார். 'கவின் கலைக்கு ஓர் கலாகேசரி' என அழைக்கப்பட்ட இவர், சுதுமலைப் புவனேஸ்வரி அம்மன், தெல்லிப்பளை துர்க்காதேவி அம்மன், சுன்னாகம் கதிரைமலை சிவன், கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணியர் ஆகிய ஆலயங்களுக்குத் தேர்களை வடிவமைத்துள்ளார்.


தம்பி ஜீவரத்தினத்துடன் இணைத்து வண்ணை நாச்சிமார் ஆலயத்திற்கு இவர் அமைத்த சித்திரப் பெருந்தேர் பிரசித்தமானது.




இவரது மறைவைத் தொடர்ந்து, இவரது தம்பிமார்களாகிய சிவலிங்கம், கந்தசாமி துரைராஜா ஸ்தபதிகளும், ஜீவரத்தினத்தின் புதல்வர் ஜெயபிரகாஷ்' ஸ்தபதியும் நூற்றுக்கணக்கான வாகனங்கள், கைலாயவாகனங்களை உருவாக்கியுள்ளனர்.

**புதிய பரம்பரை**

ஆறுமுகம் சிற்பாலய ஸ்தாபகர் ஜீவரட்ணம் ஸ்தபதியின் புதல்வனான ஸ்தபதி ஜெயபிரகாஷ் தந்தை வழியிலேயே தேர்ச்சிற்பங்களை வடிவமைப்பதில் கைதேர்ந்தவர். இவரது கை வண்ணத்தில்



30க்கும் மேற்பட்ட தேர்கள் வடிவமைக்-கப்பட்டுள்ளன. அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரி அம்மை, அல்வாய் ஆலடிப்பிள்ளை-யார், கைதடி விநாயகர், அளவெட்டி தவளக்கிரி முத்துமாரி அம்மை, திருநெல்வேலி சிவகாமி அம்மை உள்ளிட்ட கோவில் தேர்களும், கொக்குவில் மஞ்சவனப்பதி மஞ்சமும் இவற்றுள் குறிப்பிடத்தக்கனவாகும்.



வி.ஆறுமுகம்

இவர்களைத் தவிரவும், ஆறுமுகம் சிற்பாலயத்தினால் உருவாக்கப்பட்ட மாணவன் சற்குருநாதன் ஸ்தபதி, ஸ்ரீஸ்கந்தசாமி ஆசாரியார், இவரால் உருவாக்கப்பட்ட மாணவன் செ. பாலச்சந்திரன் ஸ்தபதி (கொக்குவில் காளிகா சிற்பாலயம்), கருணாகரன் ஸ்தபதி, சத்தியசிறி ஸ்தபதி, கலைச்செல்வன் ஸ்தபதி, சதீஸ்வரன் ஆசாரியார், செல்வராஜா ஸ்தபதி, தம்பித்-துரை ஆசாரியாரின் மாணவன் இராசரட்ணம், இவரது மாணவர்களாக சிவநேசன், ராசா, சிவகுமார் என்று சிற்பக் கலைஞர்களின் பாரம்பரியம் நீண்டு செல்கிறது.



நீண்டுசெல்லும் இந்தச் சிற்பக்கலைப் பாரம்பரியம் ஈழத்து சிற்பக்கலை வரலாற்று ஆதாரமாக நின்று நிலைத்து வரும்போதும், இன்றைய சிற்பக்கலை பற்றிய புரிதலில் தரம் பற்றிய மதிப்பீடு குறைந்துவருகிறது என்ற கவலை பொதுவாக முன்வைக்கப்படுகிறது.

மலிவு பார்த்து தரமான நமது சிற்பக்கலைப் பாரம்பரியத்தைத் தொலைத்துவிடுவோமா?





**2ம் அணி**

**- மு.சிவநாதன்** **- சி.சிவப்பிரபா**

**"எழுந்தது சூரியன் எழிலுடனே**
**மலர்ந்தன மலர்கள் மண்மீதே**
**மங்கையர் ஆடினர் மயிலெனவே**
**வசந்தம் வந்தது இவ் வையகத்தே"**

பெப்ரவரி 22-23ம் திகதிகளில் யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் ஏற்பாட்டில் நடைபெற்ற 'புலர்ந்தது புதுவசந்தம்' என்ற கலை நிகழ்வில் அரங்கேறிய 'வசந்த உற்சவம்' நடன நிகழ்வில் ஒலித்த வார்த்தைகள் இவை.

திருமதி பத்மினி செல்வேந்திரகுமாரின் நெறியாள்கையில், உரும்பிராய் 'கலைக்கோவில்' மன்றத்தினர் அரங்கேற்றிய ஆற்றுகை இது. இந்த நிகழ்வுடன் சேர்த்து மொத்தம் 16 இசை-ஆடல்-நாடக ஆற்றுகைகள் நிகழ்வை அலங்கரித்தன.

வடக்கு மாகாணசபையின் காரியாலயங்கள் அனைத்தும் யாழ் குடாநாட்டுக்கு மாற்றப்பட்ட பின்னர், மாகாணசபையின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட இந்த நிகழ்வு, நீண்ட நாட்களுக்குப் பின்னர் வீரசிங்கம் மண்டபத்தில் ஒரே நாளில் பல கலை முயற்சிகளுக்கு களமமைத்துக் கொடுத்தது.

# புலர்ந்தது புதுவசந்தம்




வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி, பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர் இளங்கோவன் மற்றும் வடக்கு மாகாணசபையின் முக்கிய பிரமுகர்கள் அனைவரும் இந்த நிகழ்வில் கலந்து சிறப்பித்திருந்தனர்.

ஈழத்தின் பிரபல நாதஸ்வர கலைஞர் மறைந்த சுந்தரமூர்த்தியின் புதல்வர் கோபிதாஸின் 'மரபில் இருந்து மாற்றத்துக்கு' இட்டுச்சென்ற 'வாத்தியபிருந்தா' இசை நிகழ்ச்சியுடன் ஆரம்பித்த நிகழ்வில், தொடர்ந்து, நல்லூர் ஆனந்த தரிசன நிறுவனம் வழங்கிய வரவேற்பு நடனம் மற்றும் மானிப்பாய் கலைக்கோயில் கலைமன்றம் வழங்கிய விநாயகர் வணக்க நடனம் என்பன அரங்கேறின. இந்த நிகழ்வுகள் இரண்டையும் கலாநிதி சி.தர்ஷனன் மற்றும் திருமதி செல்வாம்பிகை வீரசிங்கம் ஆகியோர் நெறியாள்கை செய்திருந்தனர்.

மனிதனது பிறப்பு, குழந்தைப் பருவம், இளமைப் பருவம், தாலாட்டு, இறப்பு போன்ற வாழ்வின் ஒவ்வொரு படிநிலைகளிலும் இசை பெறும் முக்கிய வகிபாகத்தை ஊமம், நடனம் என்பவற்றுடன் இணைந்த இசையின் மூலம் வெளிப்படுத்தியது 'உயிரின் ஓசை' என்ற வவுனியா கலைநிலா கலையகத்தினரின் ஆற்றுகை.

நிகழ்வில் அனைவரது கவனத்தையும் அதிகம் ஈர்த்த நிகழ்வாக அமைந்தது, தமிழ் - சிங்கள கலைஞர்கள் இணைந்து அரங்கேற்றிய 'புலர்ந்தது புதுவசந்தம் - வசந்த உதான சிரிய' என்ற ஆற்றுகை. உழவும், மீன்பிடியும் என பல்தொழில் செய்து வாழும் இலங்கை மக்களின் வாழ்க்கைக் கோலங்களை, ஆண்-பெண் கலைஞர்களின் இணைந்த-இசைந்த





ஆடல் கோலங்களால் மேடையில் காட்சிப்படுத்திய இந்த நிகழ்வு, மூவின மக்களின் ஒற்றுமையான வாழ்வையும் பார்வையாளர்முன் கொண்டு வந்தது.

சுதத்த குணதிலக, திருமதி இசாந்த நிர்மலா ஆகியோரின் நெறியாள்கையில், மடுக்கந்தை இசைக்குழு கந்தப்பு ஜெயந்தனின் இசையமைப்பில் உருவான இந்த ஆற்றுகையில், வவுனியா பரக்கும்பா வித்தியாலய மாணவர்கள் பங்கேற்றிருந்தனர்.

கொக்குவில் கலாபவனம் மன்றத்தினர் வழங்கிய 'புதியதோர் உலகம் செய்வோம்' பாரதிதாசன் கவிதை நாட்டிய நிகழ்வு, தமிழின் பெருமைகளையும், தமிழ் வாழ்வியல் கலைகளின் சிறப்பியல்புகளையும் சித்திரிப்பதாக அமைந்திருந்தது. கலாகீர்த்தி சாந்தினி சிவநேசனின் நெறியாள்கையில், இசைக்கலைமணிகள் என். செல்வச்சந்திரன் மற்றும் ஸ்ரீமதி சுகன்யா அரவிந்தன் ஆகியோரின் இசையமைப்பில் உருவாக்கப்பட்ட இந்த ஆடல் நிகழ்வு யாழ்ப்பாணத்தின் நடனப் பாரம்பரியத்தின் செழுமையை நினைவூட்டிச் சென்றது.

வன்னி மண்ணிலிருந்து கிளிநொச்சி கனகபுரம் மகாவித்தியாலய மாணவர்கள் வழங்கிய 'மல்லாரி' நாட்டிய நிகழ்வு, எத்துணை துயர் வந்தாலும் இன்னும் மங்காப் புகழுடன் நின்று நிலைக்கும் அவர்களின் கலை ஆளுமையை மேடையில் பறைசாற்றியது.

போரின் அழிவுகளையும் அது தந்த துன்பியலையும் உணர்ந்து சமாதானத்தின் வழி தன் வாழ்வியலை நெறிப்படுத்திய அசோக மன்னனின் வாழ்க்கையைச் சித்திரித்தது திருமறைக் கலாமன்றத்தின் 'அஷோகா' வார்த்தைகள்



அற்ற நாடகம், ஏற்கனவே பல மேடைகளில் பார்வையாளர்களை மகிழ்வித்ததெனினும், பல்லின சமூகங்கள் இணைந்து கலைநிகழ்வாற்றிய இந்த மேடையில் புதிய அர்த்தம் பெற்றிருந்தது.


இந்திய சாஸ்திரிய நடன வகைகளின் தனித்துவங்களை புதியவர்கள் புரிந்துகொள்ளக்கூடிய வகையில், ஒடிசி, மோகினி, பரதம், குச்சுப்பிடி, கதக் ஆகிய நடன வடிவங்களின் அடிப்படைக் கோலங்களைச் சித்திரிக்கும் வகையில், அவற்றுக்குரிய தனித்துவமான ஆடையலங்காரங்களுடன், நர்த்தனாலய நாட்டிய மன்றத்தினர் வழங்கிய செவ்வியல் நடனம் அமைந்திருந்தது.

இவைதவிரவும், இராமநாதன் நுண்கலைக் கல்லூரி மாணவர்களின் 'மல்லாரி', வவுனியா நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரி மாணவர்களின் 'மலர்ந்தன மலர்கள்', வவுனியா பரதஷேத்திரம் மாணவர்களின் 'கைகோர்ப்போம்', வவுனியா சிதம்பரேஸ்வரம் நடனாலய மாணவர்களின் 'தேவலோகத்தில்' என, எல்லா ஆற்றுகைகளுமே இன்னும் எமது மண்ணில் மங்காப் பெருமையுடன் விளங்கும் கலைச்செழுமைகளை ஒரே அரங்கில் பறைசாற்றுவனவாக அமைந்தன.

"ஒவ்வொரு மனிதனுக்கும் பெற்ற தாயும், பேசும் தாய்மொழியும், தான் பிறந்த தாய்நாடும் மிகப்பெரும் பொக்கிஷமாகும்".

"நாளைய நம்பிக்கையான எதிர்காலத்திற்காக, அனைவரும் கைகோர்த்து நிமிர்ந்து நிற்போம்".

"ஒற்றுமையாக கூடி ஒன்றாக ஆடுவோம், பாடுவோம், மகிழ்ந்திடுவோம்" என்ற செய்தியை புலர்ந்தது புதுவசந்தம் மொத்தத்தில் கூறிச்சென்றது!



**- ந.சதீஸ்**

**படங்கள்: பாலா, கிரி, சாந்தன்**



# பாடசாலை



புனித பத்திரிசியார் கல்லூரி



சாவகச்சேரி இந்துக் கல்லூரி



சுண்டிக்குளி மகளிர் கல்லூரி



கிளிநொச்சி மகா வித்தியாலயம்




நெல்லியடி மகா வித்தியாலயம்



யாழ். இந்து மகளிர் கல்லூரி



யாழ். மத்திய கல்லூரி

# மெய்வல்லமை 'க்ளிக்' காட்சிகள்



நாவற்குழி மகாவித்தியாலயம்


வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி


யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி


தெல்லிப்பளை யூனியன் கல்லூரி


யாழ். இந்துக் கல்லூரி


யாழ் வேம்படி மகளிர் கல்லூரி


யாழ். விக்ரோறியாக் கல்லூரி

**யாழ் வர்த்தக வழிகாட்டி**

யாழ் குடாநாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் பெரும் பங்கு வகிக்கும் வர்த்தகமும், வர்த்தக நிறுவனங்களும், வேறெங்கும் செல்லாமல், எதையுமே நமது மண்ணிலேயே பெற்றுக்கொள்ளலாம் என்ற நிலையை துரிதமாக ஏற்படுத்தி வருகிறார்கள்.

இந்தப் புதிய வர்த்தக விரிவாக்கச் சூழலில், உங்கள் நேரத்தையும், பணத்தையும் வீணாக்காமல், அனைத்துப் பொருள்களையும் இலகுவில் கொள்வனவு செய்வதற்கு வழிகாட்டுவதே இந்தப் பகுதியின் நோக்கம்.

யாழ்ப்பாணத்தில் ஷொப்பிங், வடமராட்சி வர்த்தக நகர் நெல்லியடி என்பவற்றின் வரிசையில், இம்முறை சுன்னாகம் வர்த்தக நகரை இங்கே அறிமுகப்படுத்துகிறோம்.

# சுன்னாகத்தில் ஷொப்பிங்

காங்கேசன்துறை வீதியால் பயணிக்கும் எவரும் தவறாமல் காணக்கூடிய முக்கியமான வர்த்தக நகர் சுன்னாகம். காய்கறி மற்றும் வேளாண் உற்பத்திப் பொருள்களுக்கான சந்தைக்கும் பெயர் போன சுன்னாகம், இன்று யாழ் வர்த்தக நகரையொத்த பல வர்த்தக நிறுவனங்களை தன்னகத்தே கொண்டு பாரிய வளர்ச்சி கண்டுள்ளது.

ஏனைய நகர்களைப் போலவே இங்கும் அனைத்து வங்கிகள், நிதி நிறுவனங்கள் மற்றும் தென்பகுதி வர்த்தக நிறுவனங்களும் கிளை பரப்பியுள்ளன. அபான்ஸ், சிங்கர், டம்ரோ என்று தேசிய அளவில் பெயர்பெற்ற நிறுவனங்களெல்லாம் இங்கே கடைவிரித்துள்ளன.

உள்ளூரிலேயே நவீன தளபாடங்களை உற்பத்தி செய்து நமது ஊரின் பெருமையை நிலைநாட்டும் EUT நிறுவனம் சுன்னாகம் நகருக்கே பெருமை சேர்க்கும் ஒன்று. உள்ளூர் பழவகை உற்பத்தியில் முன்னணியில் திகழும் ஜசுக்கியும் சுன்னாகத்திலேயே மையம் கொண்டுள்ளது.

ஆடைத் தெரிவுகளுக்கென கே.கே.எஸ். வீதியிலுள்ள நியூ பெஷன் பார்க் மற்றும் Excellent Tex, ரஞ்சனாஸ், சுமங்கலி சில்க்ஸ், பஸ் நிலையத்திற்கு அருகிலுள்ள மங்கை சில்க்ஸ், சிறீ கணேசன் புடைவை மாளிகை, கலையரசி ரெக்ஸ் என்பன நவீன வடிவமைப்பிலான ஆடைகளை சுன்னாகம் நகரில் வழங்கி வருகின்றன.

உங்கள் விருப்புக்கேற்ற நகைத் தெரிவுகளுக்கு கார்த்திகா நகைமாடம், கதிரவன் நகையகம், சுகன்ஜா நகைமாடம், MTS நகைமாடம், சுகந்தினி நகைத் தொழிலகம், சுபாஸ் நகையகம், நிவேதா ஜுவல்லறி என்பன காணப்படுகின்றன.


புதிய வகைக் கணினிகள் மற்றும் கணினிசார் உபகரணங்கள், சேவைகளைப் பெற்றுக்கொள்ள வேறெங்கும் செல்லத்தேவையில்லை என்று, கே.கே. எஸ் வீதியிலுள்ள PC பிளாசா, ஸ்ரேசன் வீதியிலுள்ள PC Solve மற்றும் Modern PCs Systems, APEX of Computer Technology Net City, Thas Lab Computer Services போன்ற நிறுவனங்கள் தங்கள் சேவையை வழங்குகின்றன.

இலத்திரனியல் உபகரணங்கள், வீட்டு மின் உபகரணங்களுக்காக சுன்னாகத்திலே தனியிடம் பிடித்திருக்கும் Fine Selection






முற்றிலும் குளிரூட்டப்பட்ட காட்சியறை. இதுதவிர, வசந்தியா எலெக்ரிக்கல்ஸ், தேவன் சன்ஸ் எலெக்ரோனிக்ஸ், HighTec Electronics, தர்ஷன் இலத்திரனியல் விற்பனை நிலையம், டிலெக்ஸ் எலெக்ரோனிக்ஸ் என்டர்பிறைசஸ் என்பவற்றில் அனைத்து மின்னுபகரணங்களையும் பெற்றுக்கொள்ள முடியும்.




அழகுசாதனப் பொருள்கள், அன்பளிப்புப் பொருள்கள், கிறீம் வகைகள் மற்றும் மணப்பெண் அலங்காரப் பொருள்கள் போன்றவற்றை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள Fine Selection மற்றும் கே.கே. எஸ். வீதியிலுள்ள அபிராமி பெஷன் ஹவுஸ், சித்தி விநாயகர் ஸ்ரேசனறி, துர்க்கா என்டர்பிறைசஸ், வினுசன் பல்பொருள் வாணிபம் மற்றும் டொக்டர் சுப்பிரமணியம் வீதியிலுள்ள மகாராஜா கட்டடத்திலுள்ள தாட்ஷா மல்ரி பொயின்ற், அலோமாஸ், விஷ்ணுகரன் அழகுமாடம், பஸ்தரிப்பு நிலையத்திலுள்ள நிவோன் பென்சி, கண்ணதாசன் பென்சி மற்றும் ஐங்கரன் பென்சி போன்றனவும் குழந்தைகளுக்கான அனைத்து ஆடைகள் மற்றும் பொருள்களுக்கென பேபி வேர்க் என்பனவும் அமைந்துள்ளன.

கட்டடப் பொருள்கள் மற்றும் இரும்புப் பொருள்களுக்கு தாஸ் ஹாட்வெயார், சுந்தரம் ஹாட்வெயார் ஸ்ரோர்ஸ், துர்க்கா ரேட், திருக்-குமரன் ஹாட்வெயார், தபேதரன் ஹாட்வெயார் போன்றனவும், மாபிள்கள், குளியலறை மற்றும் சமையலறை உபகரணங்களைப் பெறுவதாயின் பிள்ளையார். செரமிக்ஸ் அன்ட் பெயின்ற் ஹவுஸ் மற்றும் ஜெயசக்தி மல்ரி ரேடர் போன்ற கடைகளை நீங்கள் நாடலாம்.

மோட்டார் வாகன உதிரிப்பாகங்களுக்கு கிருஷ்ணா மோட்டோர்ஸ், றஜீவன் மோட்டோர்ஸ் நிறுவனங்களுக்கும், பாடசாலை உபகரணங்கள், ஸ்ரேசனறிப் பொருள்கள், அலுவலகப் பொருள்கள் போன்றவற்றிற்கு ராஜா கொம்பிளெக்ஸ், New Trust Book Park போன்றனவும், பாதணிகள், கைப்பை போன்றனவற்றிற்கு நாகம்ஸ் பாட்டா, அலோமாஸ் என்பனவும் உள்ளன.

சிறந்த டிஜிற்றல் புகைப்படங்கள், ஒளிப்படவியல் சேவைகளைப் பெற்றுக்கொள்ள சுன்னாகத்திலேயே பெரிய நிறுவனமான Net Digital Colour Lab மற்றும் யோகா ∴போட்டோ அன்ட் வீடியோ, சண்கோ ஸ்ருடியோ என்பன உள்ளன.

சிறந்த பாடல் இறுவட்டுகளுக்கு ராஜ் மியூசிக் பார்க் மற்றும் நித்தியா ஸ்பொட் ஓடியோ அன்ட் வீடியோ, பெஸ்ற் மியூசிக் போன்றனவும், நவீன மொபைல் போன்களுக்கு Fine Selection, ரோகித் ∴போன் சொப் மற்றும் ஸ்ரேசன் வீதியிலுள்ள ASA Tech Phone and Repairing, High Tech என பல நிறுவனங்களுடன், உங்களுக்கென்றே அறுசுவை உணவு மற்றும் குளிர் பானங்களுக்காக சக்தி கூல்பார் என்பனவும் உள்ளன.

இவ்வாறு, சகல தேவைகளையும் சுன்னாகம் நகருக்குள்ளேயே நிறைவேற்றிக்கொள்ளக்கூடியதாக எழில்கொண்டு நிமிர்ந்து நிற்கிறது சுன்னாகம் வர்த்தக நகர்.

**வடமராட்சியின் முன்னணி கலர் லாப்**

வடக்கு- கிழக்கில் முதன்முறையாக NORITSU ஒளிப்பட பிரதியாக்க இயந்திரத்தை அறிமுகம் செய்த நிறுவனமான பிரியங்கா டிஜிற்றல் கலர் லாப், தனது சேவையை நெல்லியடி நகரில் இன்னும் வேகமாக விரிவாக்கி வருகிறது.

வடமராட்சி மக்கள் தமது ஒளிப்படத் தேவைகள் எதற்கும் வேறெங்கும் அலைந்து திரியத் தேவையில்லை என்ற நிலையை உருவாக்கிய பிரியங்கா கலர் லாப், இன்றைய புதிய சூழலில் இன்னும் புதுப் பொலிவுடன் நவீன தொழில்நுட்பங்களை வேகமாக அறிமுகப்படுத்தி வருகிறது.

- ஜெ.பாலகுமார்

2ம் அணி



**ஆக்கங்கள் தனிச்சிறப்பானவை!**
யாழ்ப்பாணத்திலுள்ள திறமைசாலிகள், சாதனையாளர்களை வெளிக்கொண்டுவரும் 'நம்மூர் நாயகர்கள்' பகுதி மற்றும் வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்வுகளை மனக்கண்முன் நிறுத்தும் ஆக்கங்கள் பெப்ரவரி இதழில் உள்ளடக்கப்பட்டமை தனிச்சிறப்பு! இதுதவிர பாடசாலை மாணவர்களின் அறிவுத்தேடல்கள், பொதுஅறிவு, சிந்தனை ஆக்கங்கள் மற்றும் சிறுகதை என்பனவும் உள்ளடக்கப்பட்டால் நன்று!

**-ப.சகாயினி**
(அச்சுவேலி)

**தேடலுக்குச் சிறந்த களம்!**
மாணவர்களை ஊக்குவிக்கும் நோக்கில் அவர்களின் திறமைகளின் சான்றுகளை முதன்மைப்படுத்தி பெப்ரவரி மாத இதழ் அமைந்திருந்தது. இளம் வாசகர்களின் தேவைகளைக் கருத்தில்கொண்டு ஆக்கங்கள் பிரசுரமாவது வரவேற்கத்தக்கது. வர்த்தகக் கண்காட்சி மற்றும் எழுத்தாளர் மாநாடு என்பவற்றை பார்க்கத் தவறியவர்களுக்கும், நேரில் பார்த்ததுபோன்ற அனுபவத்தைத் தந்தது.

**-ச.உமாசங்கர்**
(அச்சுவேலி)

**'சிந்திக்கவைக்கிறது...'**
சிகரம்தொடு சஞ்சிகையில் இடம்பெறும் ஆக்கங்கள் யாவும் அறிவுபூர்வமான, ஆக்கபூர்வமான கருத்துக்களை உள்ளடக்கியனவாகவும், தற்கால இளம் சந்ததியினருக்கு பயனுள்ள வகையிலும் வெளிவருகின்றன. கணி-நீ சிறப்பிதழில் வெளிவரும் ஆக்கங்கள் மிகவும் பயனுள்ளதாய் இருப்பதனால் தொடர்ந்து வெளிவரவேண்டும் என எதிர்பார்க்கிறேன். யாழ்ப்பாணம் மட்டுமன்றி முழு இலங்கையிலும் சிகரம்தொடு தனிமுத்திரை பதிக்க வேண்டும் என வாழ்த்துகி-றேன்!

**-சி.வசந்தகுமாரி**
(கொக்குவில்)

**வாசிப்புக்குத் தூண்டில்**
இலைமறை காயாக இருக்கும் பல சாதனையாளர்களை வெளிச்சம்போட்டுக் காட்டும் ஊடகமாக சிகரம்தொடு அமைந்திருப்பது மேன்மை! மாணவர்களை பெருமைப்படுத்தி அழகான வர்ணப் புகைப்படங்களுடன் வெளிவந்த பெப்ரவரி மாத இதழ், மிகவும் தரமான, முக்கியத்துவமான ஆக்கங்களை சுமந்து வந்தது.
சிறுகதை, கவிதைகள் அடங்கலாக வாசகர்களை வாசிக்கத்தூண்டக்கூடிய வகையில் ஆக்கங்களைப் படைக்கவேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறேன்.

**-நே.மயூரி**
உரும்பிராய்.

**அறிவுதரும் ஆக்கங்கள் சேர்த்தால் நன்று!**
அறிவுத்தேடலுக்கு ஏற்றவாறு ஆக்-கங்கள் பிரசுரமாவது சிறப்பு. கணினி அறிவை மேம்படுத்தக்கூடிய வகையில் கணி-நீ சிறப்பிதழ் வெளிவருவதும், மறைந்திருக்கும் நம்மூர் நாயகர்கள் வெளிச்சம்போட்டுக் காட்டப்படுவதும் வரவேற்கத்தக்கது. இவைதவிர, வரலாற்று முக்கியத்துவமான இடங்கள் மற்றும், அறிவுதரும் ஆக்கங்கள் என்பன சேர்க்கப்பட்டால் நன்று!

**-பு.தாரணி**
(ஆனைக்கோட்டை)

**சிகரம் தொடுவின் தனிச்சிறப்பு!**
மண்ணின் பெருமைகளை பறைசாற்றும் நம்மூர் நாயகர்கள்,
சமூகத்தைச் சிந்திக்கத் தூண்டும்
உறவுகளுக்காய் ஏங்கும் விழிகள்,
பார்க்கத் தவறியோரும் அறிந்துகொள்ள வரலாற்று நிகழ்வுகள்,




இவைதவிர, மாணவர்களுக்கு பயன்தரும் கணி-நீ சிறப்பிதழ் என பெப்ரவரி இதழ் படு சூப்பர்!

**-பா.தர்ஜா**
(அளவெட்டி)

**எதிர்நீச்சல் போடும் சிகரம்தொடு!**
யாழ் மக்களின் சமூக, பொருளாதார, கலை அம்சங்களை உள்ளடக்கியதாய் வெளிவரும் சிகரம்தொடு சஞ்சிகை, நம்மூர் நாயகர்களை நாடறிய வைக்கிறது. மாணவர்களுக்கு புதிய தேடலுக்கான பாதையை அமைத்துக்கொடுக்கிறது. சமூகத்திலுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வுடன் கூடியதாய் எதிர்நீச்சல்போடும் 'சிகரம்தொடு' சுவாரஸ்யமான ஆக்கங்களையும், சிறுகதைகளையும் தாங்கிவரவேண்டும் என எதிர்பார்க்கிறேன்.

**-சி.பிரேமளா**
(புலோலி)

**'சிகரம்தொடு' வாசகர்களே!**
எமது சஞ்சிகை பற்றிய உங்கள் கருத்துக்களை தவறாது எழுதி அனுப்புங்கள்...
தரமான கருத்துக்கள் 'வாசகர் மனதில்' பகுதியில் பிரசுரமாவதுடன், ஒவ்வொரு மாதமும் தேர்ந்தெடுக்கப்படும் அதிர்ஷ்டசாலி வாசகர் ஒருவருக்கு 3 மாத சிகரம்தொடு இலவசமாக வழங்கப்படும்.

அனுப்பவேண்டிய முகவரி:
**சிகரம் ஊடக இல்லம், இல.221,**
**பலாலி வீதி, கந்தர்மடம்,**
**யாழ்ப்பாணம்.**
SMS: 077 77 33 931

**பெப்ரவரி மாத அதிர்ஷ்டசாலி**
**நே. மயூரி, உரும்பிராய்.**

# வாசகர் மனதில்

சகரம் தொடு மாத இதழ் SIKARAM THODU

Dan தமிழ் ஒளி Lanka

WWW JAFFNA TODAY COM Northern SriLanka News & Views

ஆகிய ஊடகங்களில் நேரடி செய்முறைப் பயிற்சியுடன்

# யாழ் மண்ணில் சர்வதேச அங்கீகாரம் பெற்ற ஊடகக் கற்கைகள்

**அச்சு ஊடகவியல்**
செய்தி சேகரிப்பு, எழுதுதல், நேர்காணல், சித்திரிப்பு

**வானொலி ஊடகவியல்**
அறிவிப்புக்கலை, எழுத்துருவாக்கம், நிகழ்ச்சித் தயாரிப்பு, Editing

**தொலைக்காட்சி ஊடகவியல்**
வீடியோ படப்பிடிப்பு, நிகழ்ச்சித் தயாரிப்பு, எழுத்துருவாக்கம், Editing


**கணினி, இணையப் பயிற்சி**
Microsoft Office, Internet, Email, Social Media etc.

**ஒளிப்படக்கலை (Photography)**
SLR, Digital Camera Techniques Photo Editing, Studio Lab Training

**Graphic Designing**
பக்க வடிவமைப்பு, மடல்கள், விளம்பர வடிவமைப்பு, வரைகலை PAGE MAKER, PHOTOSHOP, INDESIGN

**சந்தைப்படுத்தல் (Marketing)**
தொடர்பாடல் திறன் விருத்தி, விற்பனை நுட்பங்கள், விளம்பரக்கலை

**தொடர்பாடலுக்கான ஆங்கிலம்**
சொற்களஞ்சிய விருத்தி, வாசிப்பு, வசன அமைப்பு, பேச்சுத்திறன், எழுத்து



10 வருட அச்சு, வானொலி, தொலைக்காட்சி, இணைய ஊடக அனுபவத்துடன்,
சர்வதேச அங்கீகாரம் பெற்ற ஒரே
**ஊடகப் பயிற்றுவிப்பாளர் கோ.றுஷாங்கன்**
தலைமையிலான அனுபவமிக்க ஆசிரியர் குழாம்

3மாத கற்கைநெறி + 3மாத பணியிடப் பயிற்சி = பயிற்சிநெறி முடிவில் தொழில் உத்தரவாதம்

## சிகரம் ஊடக இல்லம்
MEDIA
இல.221, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம், தொ.பே.: 021 300 80 60
நேரடி: 077 77 33 931, மின்னஞ்சல்: SikaramMedia@gmail.com

மின்சார மற்றும் இலத்திரனியல் உபகரணங்களுக்கான
Abans அபான்ஸ் நிறுவனத்தால் LG
அங்கீகரிக்கப்பட்ட முகவர் மற்றும்
KML கேபிள் KTK PVC குழாய்களின் விநியோகஸ்தர்

## JAFFNA ELECTRICAL



94(6), ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல: 021-222 2353
தொலைநகல்: 021-222 4302
மின்னஞ்சல்: matheesan16@yahoo.com

பிரபல இணையமொழிகளைப் பயன்படுத்தி
இணையத்தளங்கள் மற்றும் இணைய சேவைகளை
மிகக்குறைந்த விலையில் வடிவமைக்க

## webster networks
MAKING DREAMS REALITY

உங்கள் தேவைக்கு ஏற்ப இணைய இடவசதிகளைப் பெற்றுக் கொள்ள முடியும்

500 MB Space Rs.1000 / Year
1000 MB Space Rs.2000 / Year
2000 MB Space Rs.4000 / Year
5000 MB Space Rs.7000 / Year

.com, .net, .org ஒரு வருடத்திற்கு பதிவு செய்ய ரூபா 1000 மட்டுமே

பாடசாலைகள், சனசமூக நிலையங்கள், ஆலயங்கள் மற்றும் மாணவர்களுக்கும் விசேட கட்டணச் சலுகை வழங்கப்படும்

இல 214, யாழ்-மானிப்பாய் வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
[வைத்தீஸ்வரா கல்லூரிக்கு அருகில்]

www.websternetworks.lk, 021 222 0261 , 0779 471 771

எங்கள் மண்ணின் தனித்துவமான ஆற்றல்களைப் பறைசாற்றும்
ஒரே தளபாட உற்பத்தியாளர்

# EUT தளபாட மாளிகை



- அலுவலக - கணினி மேசைகள், தளபாடங்கள்
- பாடசாலை மேசை, கதிரைகள்
- அலுவலக - நூலக அலுமாரிகள்
- CABINETS, NETCAFE PARTITIONS
- கதிரைகள், சுழல் கதிரைகள் (WHEEL CHAIRS)
- TV STANDS, பிளாஸ்ரிக் கதிரைகள், மேசைகள்
- ஷோகேஸ், சோபா செற்றிகள்
- சாப்பாட்டு மேசைகள், DRESSING TABLES







| பிரதான காட்சியறை | கிளை |
|---|---|
| சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம், யாழ்ப்பாணம் | EUT GROUP, |
| தொ.பே.இல: 0215677477, 0212240110 | இல: 270, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் |
| மின்னஞ்சல்: srieut@gmail.com | தொ.பே.இல: 0215677478 |